பக்கங்கள்: இருபது + IV = 24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை (11.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 319

## மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்த அழுத்தம் கொடுப்பதற்கு

# மனிக் முகாம் அகதிகளை நேரில் சந்தித்து உண்மை நிலை அறியுங்கள்

## இந்தியத் தூதுக்குழுவினரிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்ரோபர் 11

வவுனியாவில் உள்ள 4ஆம் 5 ஆம் 6 ஆம் வலயங்களில் தங்கியிருக்கும் அகதிகளை கட்டாயமாக நேரில் சந்தித்து அவர்களின் நிலையைக் கண்டறியுங்கள்.

அதே போன்று யாழ்ப்பாணத்திலும் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளை நேரில் சென்று பார்வையிடுங்கள்.

.அரசாங்கத் தரப்பினர் அழைத்துச்செல்லும் முகாம்களுக்கு மட்டும் சென்று தமிழ் மக்கள் படும் அவலங்களையும் துன்பங்களையும் முழு அளவில் அவதானிக்க முடியாது.

இவ்வாறு இலங்கை வந்துள்ள தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுக் கேட்டுக்கொண்டனர் - எடுத்துரைத்தனர்.

நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்த 10 பேர் கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற தூதுக் குழுவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எண்மர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழுவின் கிழக்கு விஜயம் ரத்து

கொழும்பு, ஒக்.11

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவின் கிழக்கு மாகாண விஜயம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## முன்னணியில் ஆளுங்கட்சி

கொழும்பு, ஒக்.11

நேற்று நடைபெற்ற தென்மாகாண சபைத் தேர்தலில் நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணியில் இருந்தது எனத் தகவல்கள் வெளியாகின.

நேற்றைய தேர்தலில் காலையில் வாக்களிப்பு மந்தமாக இருந்தபோதும், பிற்பகலுக்குப்பின் வாக்களிப்பு சுறுசுறுப்பாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைச் சம்பவங்கள் பெரிய அளவில் இடம்பெறவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## ஐந்து நாள்களில் எல்லா அகதி முகாம்களையும் சுதந்திரமாகச் சென்று பார்வையிடுவோம்

### கொழும்பு புறப்படுமுன் தூதுக்குழுவின் தலைவர் ரி.ஆர். பாலு நம்பிக்கை

சென்னை, ஒக்.11

இலங்கையில் உள்ள முகாம்களை சுதந்திரமாகச் சென்று பார்வையிடுவோம். ஐந்து நாள்கள் தங்கியிருப்போம். அதற்குள் எல்லா முகாம்களையும் பார்த்து விடலாம் என நம்புகின்றோம்.

பத்துப் பேர் கொண்ட இந்திய நாடாளுமன்ற குழு கொழும்பு புறப் படு முன்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் குழுவின் தலை வரும் முன்னாள் மத்திய அரசு அமைச்சருமான ரி.ஆர். பாலு மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் நேற்று நண்பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றபோது எடுக்கப்பட்ட படம்.

அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நிலைமை பற்றி அறிந்து கொள்வதற்காக செல்கிறோம். இதில் விடுதலைச் சிறுத்தை கட்சி உட்பட அனைத்து எம்.பி.க் களும் செல்கிறோம். இதில் அரசியல் கிடையாது. இலங்கை தமிழர் நலன் காக்க முதல் அமைச்சர் கருணாநிதி பிரத மரிடமும், சோனியாவிடமும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்பார்த்தவாறு பெரிய அளவிலான வன்செயலின்றி நடந்தேறியது தென்மாகாணசபைத் தேர்தல்

கொழும்பு ஒக். 11

நேற்று நடைபெற்ற தென்மாகாண சபைத் தேர்தலில் எதிர்பார்த்தவாறு பெரிய அளவிலான வன்செயல் சம்பவங்கள் இன்றி அமைதியாக நடந்தேறியதாக தேர்தல்கள் கண்காணிப்பாளர்களான 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு அமைதியாக இடம்பெற்றது. தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக 36 முறைப்பாடுகளே பதிவாகின என்று 'கபே' அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட விதிகளை மீறும் வகையான செயற்பாடுகள் மாகாணம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ்.வரும் இந்தியத் தூதுக் குழுவினருக்கு பொது நூலகத்தில் வரவேற்பு நிகழ்வு

### பல்கலைக்கழகம் சென்று விடுவிக்கப்பட்ட மாணவர்களையும் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஒக்.11

இலங்கைக்கு நேற்று நண்பகல் வந்து சேர்ந்த தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் இன்று யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் விஜயம் மேற் கொள்ளவிருக்கிறனர்.

நேற்று விசேட விமானம் மூலம் பிற்பகல் 1.35 மணிக்கு கட்டுநாயக்கா வந்தடைந்த குழுவினரை இலங்கைத் தொழிலாளர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இந்திய எம்.பிக்கள் சென்றது கண்டிக்கத்தக்கது

### தமிழக எதிர்க்கட்சிகள் கருத்து

சென்னை, ஒக்.11

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி எம்.பிக்கள் இலங்கை சென்றதைக் கண்டித்து இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவையும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தமது கருத்துக்களை நேற்று வெளியிட்டுள்ளனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 30 வருடங்களின் பின்னர் யாழ்.மத்திய கல்லூரியில் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மாநாடு

கொழும்பு, ஒக். 11

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி ஆளுகையை விருத்தி செய்வதற்கான தளமொன்றை உருவாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மாநாடு ஒன்றை அரசாங்கம் நடத்தவுள்ளது.

உள்ளூராட்சி மாநாடு 2009 என்ற பெயரில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் நடத்தப்படவுள்ள இம் மாநாடு எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறும். 18ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியிலும் 19ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் மாநாடு நடைபெறும்.

மாநாடு நான்கு அம்சங்களைக் கொண்டதாக நடத்தப்படும்.

* கருத்தரங்குகள்
* வடமாகாண உள்ளூராட்சி, மாகாணசபை நிர்வாகங்களினால் நடத்தப்படும் கண்காட்சிகள்
* கலாசார நிகழ்வுகள்
* பரிசுகளும் விருதுகளும் வழங்கல்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த சுமார் 730 பேர் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வெளிமாவட்டங்களிலிருந்தும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளும் செல்லவுள்ளனர். (50)

# ஆஸியிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகிறார்

## ஆஸி. அரசு கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர் ஒருவர் இங்கு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை அவுஸ்திரேலியா மிகுந்த கவனத்தில் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் இக்குற்றச் சாட்டின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தூதரக அதிகாரிகள் இலங்கைப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பாக விளக்கம் கோரியுள்ளனர் என்றும் அவர்கள் இக்குற்றச்சாட்டுத் தொடர்பில் இலங்கைப் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் அரசியற் தஞ்சம் மறுக்கப்பட்ட இலங்கையர் இருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்களில் ஒருவர் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு மறியற்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது அறிந்ததே.

இதேநேரம் மற்றவர் கைது செய்யப்பட்டாரா? இல்லையா? என்பது குறித்து தமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களப் பேச்சாளர் சண்டி லோகன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தரப்பினரிடமிருந்து மேலதிக தகவல்களை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம் என்றும் அவர் கூறினார். (சி)

## கூடைப்பந்தாட்ட பயிற்சி

யாழ்ப்பாணம் ஒக். 11

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கான பயிற்சி இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிக்கு கோப்பாய் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர்களையும், மாவட்ட அணிப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புகின்ற வீரர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலர் கேட்டுள்ளார். (1-10)


அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகள்

Diploma in Microsoft Office 2007
Adv. Dip. in Hardware & Networking
Dip in Computerized Accounting
Dip. in Pre-Press Desktop Publishing
AutoCAD
Internet and E-mail

சிறார்களுக்கான JUNIOR DIPLOMA கற்கை நெறிகள்

இலவச பாடநூல் மற்றும் இலகு தவணைக் கட்டணவசதி.

முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருட்களையும் உள்ளடக்கிய

Dip. in Video Editing & Multimedia

Adobe Premiere Pro CS3, ParticleIllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo,

Duration 1 Month

Tally Accounting Training

100%

ஆரம்பம். 12/10/2009, 14/10/2009, @ 10.00 a.m,

DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403



## சாம் கொம் கோல்

## சான்றிதழ் வழங்கும் வைபவம் 2009

இடம்: டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி

காலம்: இன்று (11.10.2009) ஞாயிறு பி.ப. 2 மணி

தலைவர்: திரு.ம.ஸ்ரீபாஸ்கரன் (விழாக் குழுத்தலைவர்)

முதன்மை விருந்தினர்கள்:

திரு.குமாரசாமி சதாசிவமூர்த்தி அவர்கள்

(ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

திருமதி சதாசிவமூர்த்தி கனகம்மா அவர்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச் றோட்,
சாவகச்சேரி.

விழாக்குழு.


## மரண அறிவித்தல்கள்

### சூசைப்பிள்ளை யோசவ் அன்ரன் ஸ்ரனிசிலாஸ்

[அன்ரன்]



கரம்பனைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் அன்ரன் ஸ்ரனிசிலாஸ் (அன்ரன் - முன்னாள் ஊழியர், மலர் ரெக்ஸ்ரைல்) நேற்று (10.10.2009) காலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான யோசவ் நீக்கிலஸ் - சிசிலியாலீலா தம்பதியினரின் மருமகனும் சொ[illegible]ணத்தின் கணவரும் ஜெலினா (முன்னாள் கத்தோலிக்க அச்சக ஊழியரும், அகவொளி நிறுவன ஊழியரும்), ஜெலான் (டோகா), ஜெலோனா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (12.10.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென்ட் மேரிஸ் றோட்,*
*சில்லாலை, பண்டத்தரிப்பு.* (89781)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தில்லைநாயகி கமலநாதன்



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி கமலநாதன் நேற்று (10.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் Dr.K கமலநாதனின் (பிரதேச வைத்தியசாலை, சங்கானை) மனைவியும் ஞா.கிருஷ்ணா, ஜெ.மனோகரி ஆகியோரின் அன்புத் தாயும் Dr. G. ஞானசோதிலிங்கம் (யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), V. ஜெயராஜன் (PROGRAME ASSISTANT, பிரதேச சபை, செட்டிக்குளம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கௌசல்யா, அபிஷனா, பிருந்தாபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இ.நடராசா (இலங்கை வங்கி, மானிப்பாய்), நா. இராமநாதன், சி.அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ந. சத்தியவதி, ந.சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.K.கமலநாதன் (கணவர்)
பிரதேச வைத்தியசாலை,
சங்கானை.

*சத்தியகாடு,*
*சுழிபுரம்.* (86771)


## தேவை

யாழ். நகர எல்லைகளுக்குள் பிரதான வீதிகளில் அமைந்துள்ள ஆகக்குறைந்தது 2000 சதுர அடி பரப்பளவு உள்ள வீடு, கட்டடம் வாடகைக்கு / சொந்தமாக, வாங்குவதற்கு உடனடியாகத் தேவை அல்லது ஆகக்குறைந்தது 2 பரப்புள்ள காணி விற்பனைக்கு உள்ளதாயின் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொ. பே : 0772612553


## விழிப்புலனற்றோர் உதவிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

விழிப்புலனற்றவர்களுடைய வளர்ச்சி நிதிக்காக நல்லூர் உற்சவ காலங்களில் விற்பனை செய்து வந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு, அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அந்த அதிர்ஷ்ட இலக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதிர்ஷ்டசாலிகள் தமக்குரிய பரிசில்களை 30.10.2009 ஆம் திகதிக்கு முன்பதாக சங்க காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம். இந்த அதிர்ஷ்டலாப சீட்டிற்கு அனுசரணை புரிந்த கஜமுகன் ஹாட்வெயர், நொக்கியா ஹோட்டல், சுந்தர்சன் தொழிலகம், சங்கரப்பிள்ளை புடைவையகம் மற்றும் தம்பிப்பிள்ளையும் மைந்தர்களும் ஆகிய வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் அதிர்ஷ்டலாப சீட்டின் மூலமாக நிதி உதவி வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நன்றியைக் கூறிக்கொள்கிறது.

### அதிர்ஷ்ட இலக்கங்கள்

1 ஆம் பரிசு - இல. 17764
2 ஆம் பரிசு - இல. 23652
3 ஆம் பரிசு - இல. 23672

### ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 01. இல. 29255 | 06. இல. 27033 |
| 02. இல. 13917 | 07. இல. 34206 |
| 03. இல. 28937 | 08. இல. 1669 |
| 04. இல. 33519 | 09. இல. 25733 |
| 05. இல. 10494 | 10. இல. 26477 |

129. 2 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். தோ. பே - 021 222 7336

பொருளாளர்
யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்.


## மலிவு விற்பனையில்

*இன்று (11.10.2009)* ஞாயிறு மட்டும்

வீட்டுத்தளபாடங்கள்:- பிளாஸ்ரிக் கதிரைகள், மரஅலுமாரி, இரும்பு அலுமாரி, மேசைகள், இரும்புக் கட்டில்

மிகக் குறைந்த விலையில்,

குருவிக்கூடுகள்:- 6'x5'x5', 9,000/= 8'x3'x2' 6,000/=

சிமெந்துத் தொட்டிகள்: 2'x3' விலை 2,500/=

பூச்சாடிகள், பூங்கன்றுகள்

கோழி இறைச்சி 1kg 500/=

உடன் உரித்துத் தரப்படும்.

நாட வேண்டிய முகவரி :-

69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

T.P.: 0779672599

*பிரசன்னா அக்கூரியம், யாழ்ப்பாணம்.*

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள இரட்டைக்கதவு (Double door) குளிர்சாதனப் பெட்டி உடனடி விற்பனைக்கு உண்டு. ஒரே விலை ரூ 20,000

தொடர்புகளுக்கு :- 077 6486330

(கொக்குவில் கிழக்கு)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கும் மிக அண்மையில் அமைதியான சூழலில் 3 பரப்பும் 16 குளியும் உடைய, இரு வீடுகள் கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 077 6916929

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 33 வயது ஆயிலியம் நட்சத்திரம் Software Developer, Canada Citizen, மாணமகனுக்கு பெண் தேவை. 1 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 34. இது ஒரு திருமண சேவை.

(www. thaalee.com)

Profile No:7079

யாழ். இந்து கௌரவ குடும்பம் 33 வயது கேட்டை நட்சத்திரம். B.Sc IT, Australia Citizen, மணமகனுக்கு அழகிய பெண் தேவை. 7 ல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 65. இது ஒரு திருமண சேவை.

(www. thaalee.com)

Profile No:6061, T.P 2523127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலங்களைச் சுமந்தபடி தொடரும் ஏ-9 பயணம்

உச்சிவெயில் தலையைப் பிளந்து கொண்டிருந்தது. வெட்டவெளியில் வீசிய காற்றால் செந்நிறப் புழுதி முகத்தில் வாரி இறைத்தது. ஒரு பட்டமரம்போல நிழலுக்காக அங்கில்லை.

தம்விதியை நொந்தபடி வெகு நேரமாக - கால்கடுக்க - காத்துக் கொண்டிருக்கிறார்கள் பொதுமக்கள். ஏறக்குறைய ஏழெட்டு மணித்தியாலங்கள் தண்ணீரோ, உணவோ கிடைக்காததாலும் மிகவும் வெப்பமான சூழலாலும் அங்கிருந்த குழந்தைகள் வீரிட்டு அழுதபடி இருந்தன. அவற்றின் அழுகையை நிறுத்த ஒரு 'பிஸ்கெற்'கூட வாங்குவதற்கு கடைகள் இல்லை. ஒருசில நடமாடும் வியாபாரிகள் ஆங்காங்கே தென்பட்டாலும் அவர்களிடம் பொருள்களை யானைவிலை, குதிரை விலைக்குத்தான் வாங்கவேண்டியிருந்தது. பொறுமையிழந்த ஒருவர் அங்கிருந்த பொறுப்பான அதிகாரி ஒருவரிடம் சென்று ''எங்களை எத்தனை மணிக்கு விடுவீர்கள்?''

## 8 மணித்தியாலங்கள் உணவு, தண்ணீர் இன்றி தவித்த குழந்தைகள் வீரிட்டு அழுத பரிதாபம்!


என்று வினவினார். அதற்கு தனக்குப் பதில் தெரியாது என்பதுபோல உதட்டைப் பிதுக்கினார் அந்த அதிகாரி. மக்களின் காத்திருப்பு எல்லா அவஸ்தைகளையும் சுமந்தபடி தொடர்ந்துகொண்டேயிருந்தது.

இந்தச் சம்பவத்தைப் படிக்கும்போது ஒரு நலன்புரிநிலையக் காட்சியோ அல்லது அங்கிருந்த மக்களை விடுவிக்கும் நிகழ்வோ உங்கள் மனதில் தோன்றியிருந்தால் அது உங்களின் தவறு. இதுவரை விவரிக்கப்பட்ட சம்பவம் மிக அண்மையில் கொழும்பிலிருந்து பஸ்வண்டி மூலம் யாழ்ப்பாணத்துக்குப் பயணித்தவர்களுக்கு நேர்ந்த அவலம்தான். இந்த



அவலம் ஒருநாள், இருநாள் என்றில்லாமல் 'சுவிங்கம்' போல நிதமும் இழுபட்டுக்கொண்டே செல்வதுதான் வேதனையாகவுள்ளது.

ஏ-9 வீதி பலத்த இழுபறியின் பின்னர்தான் மக்களின் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டது. இது நிகழ்ந்து மூன்று மாதங்கள் நிறைவடையும் நிலையில்கூட இதுவரை ஏ-9 வீதியூடான போக்குவரத்து பொதுமக்களுக்கு ஏற்றவிதத்தில் ஒழுங்கமைக்கப்படவில்லை. இப்போது சொகுசு பஸ்கள்கூட ஓடத்தொடங்கிவிட்டன. ஆரம்பத்தில் பயணத்துக்கு முன்னரே முற்பதிவு செய்து இலகுவாக சொகுசு பஸ்களில் பயணிக்க முடிந்தது. ஆயினும் அந்த நடைமுறை எவ்வித முன்னறிவித்தலுமின்றி மின்னாமல் முழங்காமல் காணாமலே போய்விட்டது. இதனால் பயணிக்கும் தினத்தன்று அதிகாலையிலேயே பஸ் புறப்படும் இடத்துக்குச் சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து தமக்குக் கிடைக்கின்ற ஆசனத்தைப் பெறவேண்டிய நிலையே மக்களுக்கு. அதிகாலையிலேயே மக்கள் சென்றாலும் பஸ்வண்டிகள் புறப்படுவதென்னவோ காலை பத்து மணிக்குப் பின்னர்தான். இதனால் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நேரத்தை விரயமாக்க வேண்டியிருக்கிறது.



தவிர நோயாளிகள், பஸ் பிரயாணத்தின்போது வாந்தி எடுப்பவர்கள் அநேகமாக யன்னல் கரையோர ஆசனங்களையே விரும்புவர். இதனால் முற்பதிவின்போது இத்தகைய ஆசனங்களையே அவர்கள் தமக்குரியதாகத் தெரிந்தெடுக்க முடிந்தது. ஆனால் இப்போதுள்ள நடைமுறையின்படி அவ்வாறு செய்யமுடியாது. சங்கீதக் கதிரைபோல கிடைக்கின்ற ஆசனத்தில் அமர்ந்துகொண்டு திருப்திப்பட வேண்டியதுதான். எதற்காக யாழ்ப்பாணத்தில் சொகுசு பஸ்களுக்கான முற்பதிவு நிறுத்தப்பட்டதென்பது தெரியாமல் தவிக்கிறார்கள் மக்கள் பயணிகள்-மக்கள்.

யாழ்ப்பாணத்தில்தான் இந்த நிலைமை என்றால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவது அதைவிட மோசமானதாகவே இருக்கிறது. ஆரம்பத்தில் யாழ்.வரும் பயணிகளுக்கான பதிவுகள் வவுனியாவிலுள்ள 'ரம்யா ஹவுஸ்' என்ற இடத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. இதன்போது மக்கள் நீண்டதூரம் அலையவேண்டியிருந்ததாலும், தமது பயண அனுமதியைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியதாலும் இப்போது யாழ்.வரும் பயணிகளுக்கு ஈரற்பெரியகுளத்திலேயே வைத்து அனுமதி வழங்கப்படுகின்றது. மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்களைக் குறைக்கவே ரம்யா ஹவுஸிலிருந்து ஈரற்பெரியகுளத்திற்கு இந்த அலுவலகம் மாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. இதனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தின்போது இதுநாள் வரையும் ஏற்பட்ட காலவிரயமும் வீண் அலைச்சலும் அடிப்படை வசதிகளற்ற தங்குமிட அவலமும் நீங்கிவிடும் என்றே எல்லோரும் நம்பினர்.

ஆயினும் நினைப்பதெல்லாம் நடப்பதில்லையே. ஈரப்பெரியகுளத்தில் இன்னமும் தொடர்ந்தபடியே உள்ளன பயண அவலங்கள். இதனால் சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்தவர்களாகத் தவிக்கிறார்கள் கொழும்பிலிருந்து யாழ்.வரும் பயணிகள். மிக அண்மையில் தனக்கு நேர்ந்த பயண அனுபவத்தைக் கீழ்வருமாறு விவரிக்கிறார் கொழும்பிலிருந்து யாழ். வந்த பயணியொருவர்:

''கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்ட பஸ்களில் புறப்பட்டு அதிகாலையில் 5.30 இற்கு ஈரப்பெரியகுளத்தை அடைந்துவிட்டோம். அதன் பின்னர் எமது பயணப் பொதிகளை சோதனையிட்டார்கள். எல்லாச் சோதனைகளும் காலை 10.30 இற்கு முடிவடைந்து விட்டன. ஆகவே மிக விரைவாகவே யாழ்ப்பாணத்தை அடைந்து விடலாம் என எண்ணினோம். ஆனால் நடந்ததோ

## இலகு நடைமுறைகள் குறித்து உரியவர்கள் சிந்திக்கக் கூடாதா?

வேறு. திடீரென ஏழெட்டு பஸ்களில் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு கொண்டுவரப்பட்டு அவர்களைச் சோதனையிடும்பணி ஆரம்பமானது. அவர்கள் வந்தது வேறு பஸ். நாங்கள் வந்தது வேறு பஸ். ஆகவே நாங்கள் முன்னரே புறப்பட்டிருக்கலாம். ஆயினும் அதற்குரிய அனுமதி கிடைக்கவில்லை. பஸ் தரித்து நின்ற இடம் வெட்டவெளிப் பிரதேசம். அத்தோடு வெயிலும் தன் பங்குக்கு கைவரிசையைக் காட்டிக்கொண்டிருந்தது. இது தவிர நாம் பயணித்த பஸ்ஸில் குளிரூட்டல் இயந்திரமும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் பஸ்சுக்குள்ளும் இருக்கமுடியாத நிலைமை. பஸ்சைவிட வெளியில் நிற்பதே சிறந்ததாகத் தோன்றியது. அதனால் எல்லோருமே பஸ்ஸை விட்டு வெளியே இறங்கி நின்றோம். வெயிலின் கொடுமையிலிருந்து ஒதுங்குவதற்கு கண்ணுக்கெட்டிய தூரம்வரை சிறு கொட்டில்கூட இல்லை. இதனால் உச்சிவெயிலை ஏந்தியபடி கால்கடுக்கக் காத்திருந்தோம். இப்படியே எவ்வளவு நேரம்தான் நிற்பது? அதனால் அங்கிருந்த படையதிகாரி ஒருவரை நெருங்கி ''எங்களை எப்போது பயணிக்க அனுமதிப்பீர்கள்?'' என்று வினாவினேன். அதற்கு ''நலன்புரிநிலையத்திலிருந்து வந்தவர்களைச் சோதனையிட்டு முடிந்தபின்னர் எல்லோரும் ஒன்றாகச் செல்லலாம்'' என்றார். அதற்கு நான் ''நாங்கள் வந்தது வேறு பஸ். எங்களை முதலில் அனுமதிக்கக்கூடாதா?'' என்று கேட்டேன். ''இல்லை. எல்லோருக்கும் ஒரேநேரத்தில் பயணிக்கவே அனுமதி தரப்பட்டிருக்கிறது'' என்று பதில் சொன்னார் அவர்.

இது நியாயமற்றதாகவே எனக்குப்பட்டது. நலன்புரிநிலைய மக்கள் திடீரென விடுவிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் விடுவிக்கப்பட்டு நாலைந்து நாள்களாகக் கோயில்களிலும் பொதுமண்டபங்களிலும் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். எனவே அவர்களுக்கான சோதனையை ஆரம்பத்திலேயே - அல்லது வேறு இடத்திலேயோ - மேற்கொண்டிருந்தால் மிக விரைவாகவே அவை பூர்த்தியாகியிருக்கும். அதனால் எமக்குச் சோதனை முடிந்த அதேநேரத்திலேயே அவர்களும் எம்மோடு இணைந்து பயணித்திருக்க முடியும். சரியான திட்டமிடலற்ற ஏற்பாடுகளால் அப்பாவிப் பயணிகள்


**ஓளண்யன்**

அசெளகரியங்களை எதிர்கொண்டோம். ஏறக்குறைய எட்டு மணித்தியாலங்கள் உணவின்றி, குடிக்கத் தண்ணீரின்றி, இயற்கைக் கடன்களைக் கழிக்க வசதியின்றி தடும் வெயிலின் நடுவில் நிற்கவேண்டியதாயிற்று. குழந்தைகளோ இத்தனை அவலங்களாலும் பாதிப்புற்று வீரிட்டு அழுதனர். எல்லாவற்றையும் நமது விதி இவ்வளவுதான் என்றெண்ணி சகித்துக் கொண்டோம்.

விமானப் பயணத்துக்கு அதிக கட்டணம் என்பதாலேயே தரைப்பாதையால் வர விரும்பினோம். ஆயினும் இங்கு பட்டபாடுகளை எண்ணும்போது பணம் போனாலும் பரவாயில்லை விமானத்திலேயே பயணித்திருக்கலாம் என்றே எண்ணத்தோன்றியது. கடைசியாகமாலையான பின்னர்தான் ஒருவாறு எமது பயணத்தை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பிக்க முடிந்தது'' என்று பெருமூச்சுடன் சொல்லி முடித்தார் பொறுப்பான மக்கள் பணிசெய்யும் அந்த அன்பர்.

மக்களைப் பெரும் அவஸ்தைக்குள் ஆழ்த்துகின்ற பயண நடைமுறைகளை மாற்றியமைத்து மக்களுக்கான இலகு பயண நடைமுறைகளை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாக இப்போதிருக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பே சிவம்

இந்திய சிற்பாசாரிமார்கள்
கி.மணிகண்டன் ஸ்தபதி,
சோமாஸ்கந்தன் ஸ்தபதி இருவரும்,
இந்தியாவின் தலைசிறந்த சிற்ப வல்லுநர்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கோயில் சிற்ப வேலைகள் செய்து வருகின்றார்கள்.
சிற்ப வேலைகள் தேவைப்படும் ஆலய திருப்பணிச் சபையினர் தொடர்பு கொள்ளவும்.
077 2474008, 077 1154791,
021 2263311.

பருத்தித்துறை. (89768)



# மீண்டும் யாழ். மண்ணில் உங்கள் சுடர் ஒளி

இவ்வார இதழில்

- உயிர் வலிக்கும் கணங்கள்.....!
- மீண்டும் முறிந்தது உறவு
- சர்வதேச அழுத்தங்கள் பலிக்குமா?

மற்றும் பல விறுவிறுப்பான சுவையான அம்சங்களுடன்....

இப்பொழுது விற்பனையில்
உங்கள் உதயன் முகவர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.....



## வேலை ஆட்கள் தேவை

மேசன், கூலி ஆள்கள் உடன்தேவை.
சுயவிவரக் கோவையுடன் திங்கள் காலை 10-12 மணிவரை நேரில் வரவும்.

TILKO HOLIDAYS (PVT. LTD),
இல. 70/6, கே.கே.எஸ்.வீதி,
(பிரதம தபால் கந்தோர் அருகில்),
யாழ்ப்பாணம். (சி/564642)


## MED மாணவர்களுக்கு

2007 - 2008 கல்வியாண்டு முதுகல்வி மாணி ஆசிரிய மாணவர்கள் இம்மாதம் 15, 16ஆம் திகதிகளில் ஆய்வுக் கட்டுரை முன்வைப்பது தொடர்பாக கலந்து ரையாட இருப்பதால் இன்று (11.10.2009) ஞாயிறு மு.ப. 10 மணிக்கு உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பீடாதிபதி,
உயர் பட்டப் படிப்புகள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (89765)


## Scooty pep விற்பனைக்கு

அலுவலரின் தனிப்பாவனையில் உள்ள சிவப்பு நிற ஸ்கூட்டிபெப் (பழைய வகை) IG. தொடரிலக்கம் உடையது. 7500km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. விலை 98500/= விலையில் எதுவித மாற்றமும் ஏற்படாது. 396, நாவலர் வீதி, கைலாசப்பிள்ளையார் கோயிலடி (உதயன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு மட்டுமே பார்வையிடலாம்.


## அறிவித்தல்

SRI LANKA RED CROSS SOCIETY

இலங்கை செஞ்சிலுவை சங்க வலி.வடக்கு (தெல்லிப் பழைப் பிரிவு) யாழ்.மாவட்டத்தில் இயங்கும் ஏனைய 14 பிரிவுகளைப் போன்று இயங்கி, இப் பிரிவு மக்களுக்குச் சேவை செய்வதற்காக, இப் பிரிவு ஆயுள்கால உறுப்பினர்களையும், ஏனைய சாதாரண உறுப்பினர்களையும் சேர்த்து இப் பிரிவினை இயங்க வைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றினை 17.10.2009ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு மல்லாகம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளோம். அங்கத்தவர்கள் யாவரும் வருகை தந்து எம்மோடு சேர்ந்து தெல்லிப்பழைப் பிரிவின் சமூகத்துக்குச் சேவை செய்ய அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்,
இ.செ.சங்கம்,
யாழ்.கிளை. (சி/561643)


## காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதியில் வெய்யில் உகந்த பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 7¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகட்கு: 011 2559575


## சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இன்று திறந்திருக்கும்

வண்ணை, ஒக.11

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் தீபாவளி திருநாளை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை ரத்து செய்துள்ளது.

அதனால் இன்று குடாநாட்டின் சகல பகுதிகளில் உள்ள சிகை ஒப்பனை நிலையங்களும் வழமைபோல் திறந்திருக்குமென் தலைவர் அ.அல்பேட் தெரிவித்தார். (1-160)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.11

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1சி வகை பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (201-207)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

'இளைஞர்களுக்கான நாளை' உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து இமையாளன் மத்தி. விளையாட்டுக் கழகம் மோதும். (23)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கேதீஸ்வரன் - இந்திராணி தம்பதியரின் செல்வப் புதல்வி

**கே.பிரியசாருணி**

2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை ஊக்குவித்த ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரியசாருணி, நல்லூர்க் கந்தன் அருள்பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர்.

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, சித்தப்பா, சித்தி, அன்ரி, தாத்தா, மாமா, மாமிமார்கள்.
மாணிக்க பவனம்,
86, நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம் (89769)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 . 01 . 1958

மறைவு 13 . 09 . 2009



## அமரர் இரகுநாதன் திரவியநாதன் (நாதன்)

(பிரபல வர்த்தகர், உடையார் வளவு, புன்னாலைக் கட்டுவன் தெற்கு)

அன்பிற்கும் பாசத்திற்கும் பண்பிற்கும்
உறைவிடமாய் விளங்கிய எங்கள் அப்பாவே
ஆயிரம் தான் உறவுகள் இருந்தாலும்
அப்பாவென்று சொல்ல உறவில்லை.

கடந்த 13.09.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து துயரிலும் இறுதிக் கிரியை நிகழ்விலும் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (13.10.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது நினைவிற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

54, புதுவீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம். (89776)

தகவல்:
குடும்பத்தினர்.



# STUDY IN EUROPE
# MBBS/MD

**Lugansk State Medical University**
Ukraine (உக்கிரேன்) - East Europe

ஸ்ரீ லங்கா Medical Councilலினால் அங்கீகரிக்கப்பட்டது

With O/Ls 7 Years
With A/Ls 6 Years

இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.

Next Batch Starting : 15th October

www.lugmedi.com

Colombo Head Office
Tel : (தமிழல்) 0777-767 818
Scholars Information Center ( 2nd Floor)
No.50 Galle Raod,
Colombo 06

யாழ்ப்பாணத்தில் விபரங்களை பெற:
Mr.S.Mariaratnam 077-4528818
148, Temple Road, (Opp.UNICEF)
Jaffna. Tel : 021 - 222 3818



## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலை வைத்தியர் K.கமலநாதனின் அன்பு மனைவி

**திருமதி தில்லைநாயகி கமலநாதன்**

அவர்கள் நேற்று (10.10.2009) சனிக்கிழமை காலமானசெய்தியறிந்து ஆழ்ந்த மனவேதனை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதேச வைத்தியசாலை,
சங்கானை. (89772)

வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லச் சொல்ல இனிக்கும் - திரை விமர்சனம்



நவ்தீப், மதுமிதா, அபிநய், சத்தியன், லிவிங்ஸ்டன், பிரகாஸ்ராஜ், மல்லிகா கபூர் போன்றோரின் நடிப்பில், பரத்வாஜின் இசையில் வெளிவந்திருக்கும் படம் 'சொல்லச் சொல்ல இனிக்கும்'.

நவ்தீப் காதலுக்காக ஏங்கும் ஒரு இளைஞன். அழகான பெண்களின் பின்னால் சுற்று கின்ற நவ்தீப்பிற்கு எல்லாப் பெண்களுமே ஏமாற்றத்தைப் பரிசளிக்கிறார்கள். ஆயினும் தன் முயற்சியில் சற்றும் தளராதவராக இன்னொரு காதலியைத் தேடிப் போவார் அவர். ஒரு முறை நவ்தீப்பின் முன்னாள் காதலி ஒருவரை அவரது நண்பனே காதலித்து ஏமாற்றுகின்றான். இதனால் அவர்கள் இருவரையும் சேர்த்துவைக்கப் படாத பாடுபடுகின்றார் நவ்தீப். கடைசியில் தன் முயற்சியில் நவ்தீப் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதை இத் திரைப்படம் சொல்லுகின்றது.

யார் வந்து மாலைபோட்டாலும் அவர்களுக்கு உதவுகின்ற பிரகாஸ்ராஜின் பாத்திரம் படத்தை தொய்வில்லாமல் கொண்டு செல்ல உதவுகின்றது.

சத்தியனின் நகைச்சுவைகள் வயிறு குலுங்கும் அளவுக்கு சிரிப்பை உண்டுபண்ணுகின்றன.

நடனம், சண்டைக்காட்சிகள், நடிப்பு என எல்லாவற்றிலும் புகுந்து விளையாடுகின்றார் நவ்தீப். இதே வேகத்தில் சென்றால் நவ்தீப்பிற்கு தமிழ் சினிமாவில் முன்னணி இடம் காத்திருக் கின்றது.

பரத்வாஜின் இசையும், ஆர்தர் வில்சனின் ஒளிப்பதிவும், படத்தை இன்னும் அழகூட்டுகின்றன.

சொல்லச் சொல்ல இனிக்கும் படத்தைப் பார்க்கப் பார்க்கவும் இனிப்பது போலவே இருக்கின்றது. ★

# சரித்திரத்தைத் தேடி....



'பில்லா' என்ற மாபெரும் வெற்றிப் படத்தைக் கொடுத்த கையோடு விஷ்ணுவர்த்தன் இயக்கிய 'சர்வம்' திரைப்படம் படு தோல்வியடைந்தது. இதனால் சில காலம் மன அமை திக்காகத் திரைப்படப் பணிகளில் இருந்து ஒதுங்கியிருந்த இயக்குனர் விஷ்ணுவர்த்தன் மீண்டும் முழுமூச்சோடு களமிறங்கி விட்டார். அனேகமாக அஜித்குமாரின் ஐம்பதாவது படத்தை விஷ்ணு வர்த்தன் இயக்கலாம் என இப்போதே கதைகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் சரித்திரக் கதையொன்றை இவர் இயக்க வுள்ளதாக வும் கூறப் படுகின்றது. இதனால் சரித்திரக் கதைகளை யும், இடங் களை யும் விஷ்ணுவர்த்தன் அண்மைக்காலமாகத் தேடிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ★

# வீரசேகரன்



பொதுவாகவே இயக்குநர்களும், நடன இயக்குனர்களும் அண்மைக்காலமாக தமது தொழிலை மூடை கட்டி வைத்து விட்டு கதாநாயகர்களாக களம் புகத் தொடங்கியுள்ளனர். இந் நிலையில் கொஞ்சம் வித்தியா சமாகக் கலை இயக்குநர் ஒருவர் கதாநாயகனாக அறிமுக மாக இருக்கின்றார்.


பல படங்களில் சிறந்த வகையில் காட்சிப் பின்னணி களை உருவாக் கிய கலை இயக் குநர் வீர சமர் என்பவர் 'வீரசேகரன்' என்ற படத்தில் நாயக னாக நடித்து வருகின்றார். இப்படத்தின் வில்லனாக பிரதாப் போத்தன் நடிக்கிறார். அறிமுக இயக்குநர் ரவி. சதீஸ்குமாரின் இயக்கத்தில் வேக மாக வளர்ந்து வரு கின்றது 'வீரசேகரன்'. ★

# கவர்ச்சிக்கு ஆகாது



'கற்றது தமிழ்' படத்தில் நாயகியாக வந்த அஞ்சலியை அவ்வளவு எளிதாக ரசிகர்கள் மறந்திருக்க முடியாது. இவர் களஞ்சியம் இயக்கும் 'என் கனவு நீதானடி' என்ற படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார். ஆயினும் காரணம் எதுவும் கூறப்படாமலே திடீரென இப்படத்தில் இருந்து அஞ்சலி நீக்கப்பட்டுள்ளார். அஞ்சலிக்குக் கவர்ச்சியாக நடிப்பது சரிவரவில்லை என்ற காரணத்தாலேயே அவர் இத்திரைப்படத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இப்போது வசந்த பாலனின் இயக்கத்தில் 'அங்காடித் தெரு' என்ற படத்தில் நடித்து வருகின்றார் அஞ்சலி.

# வருவாரா பழசிராஜா!



மலையாள சுப்பர் ஸ்ரார் மம்முட்டி , சுப்ரீம் ஸ்ரார் சரத்குமார் இணைந்து நடிக்கும் படம் 'பழசிராஜா'. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அவர்களை எதிர்த்த இந்திய குறுநில மன்னர் ஒருவரின் கதையை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் தயாராகி வருகின்றது. மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்ரோபர் 2 ஆம் திகதி இத்திரைப்படம் வெளிவர இருந்தது. ஆயினும் படத்தின் பின்னணி வேலைகள் முடிவுறாமல் இருப்பதால் குறித்த திகதியில் பழசிராஜா வரவில்லை. "துரித கதியில் பின்னணி வேலைகள் பூர்த்தியாகி வருகின்றன. எனவே அடுத்த வாரம் படத்தை வெளியிடலாம் என எண்ணுகின்றோம்" என்று படத்தின் இயக்குநர் ஹரிகரன் [illegible]ள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி.விருதுகள் - 2009



கிரிக்கெட் ஒஸ்கார் எனப்படும் ஐ.சி.சி. விருதுகள் தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த கோலாகல விழாவில் வழங்கப்பட்டது.

விருத்துக்கான வீரர்கள் பட்டியலை மேற்கிந்திய ஜாம்பவான் கிளைவ் லாய்ட் தலைமையிலான 5 பேர் கொண்ட குழு தேர்வு செய்தது. அதில் இந்தியாவின் அனில் கும்ளே, இங்கிலாந்தின் பாப் டெய்லர், பாகிஸ்தானின் முடாசர் நாஸர், நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளமிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2008 ஒகஸ்ட் 13ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஒகஸ்ட் 24 ஆம் திகதி வரை நடந்த போட்டிகள் கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டது. இதில் இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக டோனி தொடர்ந்து இரண்டாவது முறையாகப் பெற்றுக்கொண்டார். அவர் இந்த ஆண்டு 24 போட்டிகளில் 967 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அதேபோல் இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் அணிகளின் தலைவனாக டோனி தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் இரண்டு பட்டியல்களிலும் [தலா மூன்று இந்தியர்கள்] கம்பீரும், ஒரு நாள் அணியில் ஷேவாக், யுவராஜூம் இடம்பிடித்துள்ளனர். டெஸ்ட் அணியில் 12 ஆவது வீரராக ஹர்பஜன் இடம் பிடித்துள்ளார். சிறந்த 'ருவென்ரி-20' வீருது இலங்கையின் திலகரட்ன டில்சானுக்கு வழங்கப் பட்டது. சிறந்த அம்பயராகப் பாகிஸ்தானின் அலீம் தார் அறிவிக்கப்பட்டார். சிறந்த வீராங்கனைக்கான விருதை இங்கிலாந்தின் கிளைர் டெய்லர் பெற்று கொண்டார். ★★★★★★★

# முதலிடத்தைப் பிடித்தார் செரீனா



சீன ஓபன் டென்னிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்ற அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம் பெண்களுக்கான உலகத் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டார்.

பீஜிங்கில் நடைபெற்றுவரும் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் கடந்த 5 ஆம் திகதி நடந்தன. இதில் செரீனா வில்லியம்ஸ் ரஷ்யாவின் எகட்ரினா மகரோவாவை சந்தித்தார். ஒரு மணிநேரம் மாத்திரமே நீடித்த இந்த போட்டியில் செரீனா 63, 62 என்ற நேர் செட் கணக்கில் இலகு வெற்றியீட்டினார்.

இதன்மூலம் செரீனா உலக டென்னிஸ் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருந்து முதல் இடத்திற்கும் முன்னேறினார். தரவரிசையில் முதலிடத்தில் இருந்த டினாரா சபீனா சீன ஓபன் போட்டியின் இரண்டாவது சுற்றில் சீனாவைச் சேர்ந்த ஸ்டிங் ஷவாயிடம் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தார். இந்தத் தோல்வி காரணமாகவே செரீனாவுக்குத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்த போட்டித் தொடரில் பங்கேற்றுள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவா மற்றும் எலீனா டெமன்டீவா ஆகியோரும் இரண்டாவது சுற்றில் சுற்றுக்கு முன்னேறினர். எனினும் தர இருக்கும் வீனஸ் வில்லியம்ஸ் தொட ★★★★★★★★★★★★★★★★★

வெற்றியீட்டி 3 ஆவது வரிசையில் மூன்றாவது இடத்தில் ரின் இரண்டாவது சுற்றுடன் வெளியேறினார்.

# கப்டனாகப் பொறுப்பேற்கவேண்டும்

சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு அதிரடி தொடக்க வீரர் விரேந்திர சேவாக் இந்திய அணியின் தலைவராகச் செயற்படவேண்டும் என்று இந்திய முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பேசிய கங்குலி இது பற்றிக் கூறுகையில், "இந்திய



அணியை வழிநடத்தும் திறமை அவரிடம் உண்டு, சேவாக் எப்படியும் இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகள் விளையாடுவார், அதற்குள் அல்லது கடைசி 2 ஆண்டுகளில் அணியைத் தலைமையேற்று நடத்தும் வாய்ப்பு கிடைத்தால் அவர் அதனை வேண்டாம் என்று நிராகரிக்கக் கூடாது"- என்றார்.

சமீபத்தில் அணியின் துணைத் தலைவர் பொறுப்பை ஒரு இளம் வீரரிடம் கொடுத்து அடுத்த தலைமைப் பொறுப்பற்கு அவரை தயார்படுத்த வேண்டும் என்று சேவாக் கூறியது பற்றி கங்குலி தெரிவிக்கையில், இதுபோன்று யோசிக்க வேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகிறது"- என்றார். ★★★★★★★★★★★★★★★★★










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களைத் தடுத்து வைத்திருப்பதன் காரணம் நியாயமான செயலா?

யுத்தத்தில் சிக்குண்டு உடல் ரீதியிலும் உளரீதியிலும் பெரும் தாக்கங்களுக்கு உள்ளாகியிருப்பது போதாதென்று, மென்மேலும் தாக்கங்களுக்கு ஆளாகிவரும் வன்னிப் பிரதேச அகதி மக்களின் பாரிய தடுப்பு முகாம் பற்றி தெடுத்தியம்பும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை.

ஊடகவியலாளர், சுனந்த தேசப்பிரிய எழுதிய இக்கட்டுரை கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதிய "ராவய" பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

யுத்தம் காரணமாக வன்னிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மூன்று இலட்சங்கள் வரையான தமிழ் மக்கள் இன்னமும் வுவனியா பிரதேசத்திலுள்ள தடுப்பு முகாம்களுள் சொல்லவொண்ணாத துன்பியல் அவலங்களைப்பட்டனுபவித்து வருகின்றனர். கூடிய விரைவில், இந்த மக்கள் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்று அங்கு வாழத்தக்க விதத்திலான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டுமென - யுத்தம் முடிந்து விட்டதாக அரசு அறிவித்தல் விடுத்த கணத்திலேயே நாம் தெரிவித்திருந்தோம். நாம் இவ்வாறு வேண்டுகோள்

போது நம்பகத் தன்மை அற்றதாகும்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றனவா எனத் தாங்கள் என்னிடம் வினா எழுப்புகிறீர்கள். இந்நாட்டு மக்களுள் கால் மில்லியன் வரையிலானோர் முட்கம்பிப் பாதுகாப்பு வேலிகளுக்குள் நிறுத்தப்பட்டு ஆயுதப் பாதுகாப்பின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சுயவிருப்புடன் அங்கு வாழவில்லை. இது தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றும் கூட உள்ளது. இங்கு ஏதோவொரு தவறு உள்ளது. அந்த வகையில், இங்கு நிகழ்வது நிகழக்கூடாத தொன்றேயாகும்.

நாம் தேசிய ஒற்றுமை மற்றும் தேசியக் கட்டமைவு பற்றிப் பேசுவதானால் அதற்கான சந்தர்ப்பம் இதுவேயாகும். முழு உலகமும் கூட இன்று எம்மை அவதானித்த வண்ணமே உள்ளது. அத்தகைய பார்வை இல்லாதுவிடினும் கூட நாம் எம்மவர்களேயான இந்த மக்களைப் பேணிக்காக்க வேண்டியுள்ளது.

தூரத்திலுள்ளது.

அதே தினத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கருத்து வழங்கியிருந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் றொபர்ட் பிலேக்; "இடம் பெயர்வுகளுக்குள்ளாகி தஞ்சமடைந்துள்ள மூன்று லட்சம் வரையான மக்கள் கடந்த மூன்று மாத காலமாகவே இந்த முகாம்களில் உள்ளனர். பருவமழை இன்றோ நாளையோ ஆரம்பிக்கக் கூடும். முகாம் களினுள் அதிகரித்த சனச் செறிவும் கூடக் காணப்படுகின்றது. இது விடயத்தில் நாம் பெருமளவில் கவனம் செலுத்தி வருகின்றோம்." எனத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான பல்கலைக்கழக (யாழ்ப்பாணம்) ஒன்றியம் என்பது முற்றுமுழுதாகவே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரானதொன்றாகும். அவர்களால் கடந்த செப்ரெம்பர் 18 ஆம் திகதியில் வெளியிடப்பெற்ற அறிக்கையும் இங்கு நோக்கற்பாலதாகும்.

"இன்றைய அளவில் இடம் பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள மூன்று லட்சங்கள் வரையிலான மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது உண்மையான

பாதுகாப்பு குறித்து அரசு காட்டிநிற்கும் பீதி நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள முடிந்தாலும் கூட, இந்த மக்கள் குறித்து கூட பாரதூரமான ஈர்ப்பும் கரிசனையும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

என்னோடு உரையாடிய பெருமளவிலான அகதி மக்கள் தாம் மீளச் செல்வதற்கு வாய்ப்பேற்படுத்தித் தருமாறு என்னிடம் வேண்டு கோள் விடுத்து நின்றனர்" எனத் தெரிவித்திருந்தார்.

இவற்றினிடையே, இந்திய அரசும் கூட, வன்னியிலிருந்து அகதிகளாகி இந்த இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்குள் வசித்துவரும் மக்களுக்கு அவர்களது சொந்த வசிப்பிடங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக இலங்கையரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐ.நா அமைப்பின் தொடர் மாநாட்டின்போது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் அந்த மக்களை விரைந்து மீளக் குடியமர்த்தும் விடயம் தொடர்பாக இந்தியா பெரிதும் அக்கறை கொண்டுள்ளது என்பதை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான எஸ்.எம். கிருஷ்ணா இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சரிடத்தில் தெளிவுபடுத்தியிருந்தார். இவற்றோடு, கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி புதுடில்லிக்குச் சென்றிருந்த தமிழ்நாட்டு அமைச்சர்கள் உள்ளிட்ட தூதுக்குழுவும் கூட, காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பின்போது, இலங்கை முகாம்களிலுள்ள தமிழ் அகதிகள் விடயத்தில் தலையிட்டுச் செயற்படுமாறு கோரிக்கை விடுத்திருந்தது. எவ்வாறான போதிலும், தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான உணர்வலைகள் மீளவும் வலுப்பெறுவதற்கு இந்த அகதி மக்களின் பிரச்சினை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இதற்கு நல்லதொரு உதாரணத்தை இங்கு முன்வைக்க முடியும். அதாவது கடந்த ஒகஸ்ட் 17 ஆம் திகதி இந்தியாவின் தமிழ்நாட்டின் பிரபல அரசியல்வாதி ஒருவரான திருமாவளவனின் 48 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தையொட்டிய நிகழ்வாக பிரபாகரனின் உருவப்படம் பொறிக்கப்பட்ட 2 ஆயிரம் பதாகைகள் ஒரே தடவையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையாகும். அத்தகையதொரு பிரதிபலிப்புக்கு அமையவே, வன்னிப் பிரதேசத்தின் அகதி மக்களை விரைந்து அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி விடுவதற்கான அவசியப்பாட்டை வலியுறுத்தும் அறிவுறுத்தலை பிரதமர் மன்மோகன்சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுத்திருந்தார்.

இறுதியாக, இலங்கையின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரான மங்கள சமரவீரவின் கூற்றுக்கு அமைய, இந்த மக்கள் மேற்படி முகாம்களுக்குள் சிறைவைக்கப்பட்டிருப்பது அவர்களது விருப்பத்துக்கு மாறாகவேயாகும். சிலவேளை இன்றைய உலகில் இடம் பெறும் விலாசமானதொரு மனித உரிமை மீறலாக அமைவது இந்த தடுப்பு முகாம்களேயாகும். இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளோர் வீடுவாசல்கள், காணி நிலங்கள் எதுவுமற்ற மக்களல்லர். நிதி வளங்கள் அற்ற மக்களுமல்லர். இன்றைய அளவில் இந்த மக்களால் 21 ஆயிரம் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களால் இவ்வாறு வைப்பிலிடப்பட்டிருக்கும் தொகை 500 மில்லியன்களாகும். இந் நிலையில் தொடர்ந்தும் இந்த மக்கள் சிறைப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? காரணம் எதுவாக இருப்பினும், இந்த நிலைப்பாட்டின் மூலம் இந் நாட்டின் தமிழ் மக்களுக்குச் சம உரிமைகள் இல்லையென்பதே புலப்படுத்தப்படுகின்றது அல்லவா? ************

## வன்னிப் பொதுமக்களது அகதிமுகாம் சிறைவாழ்வு

விடுத்து நின்றமைக்கு, வேறு எந்தவொரு காரணியையும் விட, இந்த மக்களுக்கும் இலங்கையிலுள்ள எந்தவொரு குடிமகனுக்கும் இருக்கும் உரிமை அமைய வேண்டியுள்ளதென்ற எமது நம்பிக்கையே காரணமாகியிருந்தது. அன்று அவ்வாறு கோரிக்கை விடுத்து நின்றதன் காரணமாக தேசத்துரோகிகள் என்ற முத்திரையும் எம்மீது குத்தப்பட்டது. இன்றைய அளவில் ஒட்டுமொத்த உலக நாடுகள் மட்டுமல்லாது, நீண்ட காலமாகவே விடுதலைப்புலிகள் அமைப்பின் மனுக்குல விரோத போக்குகளை விமர்சித்து வந்த மற்றும் இலங்கையரசின் யுத்த ரீதியிலான நடைமுறைகளுக்குப் பெருமளவில் ஒத்துழைப்புக்காட்டி நின்ற, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களது மனித உரிமைகளுக்கான அமைப்பான யூ.ரீ.எச்.ஆர். அமைப்பும், ஜெனீவாவில் பணியாற்றிய இலங்கையின் முன்னாள் ஸ்தானிகருமான தயான் ஜயதிலக்க போன்றோரும்கூட, இந்த வன்னி மக்கள் முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதானது மிகப் பெரும் தவறொன்றேயாகுமெனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அந்தவகையில், பிரமுகர் தயான் ஜயதிலக்கவால் டெய்லிமிரர் பத்திரிகைக்குக் கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த கருத்து இங்கு நோக்கற்பாலதாகும்.

"அகதிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் சம்பந்தமாக யுத்த காலத்தில் மேற்கொண்டு செல்லப்பட்ட நடைமுறையைத் தற்போது மேற்கொண்டு செல்ல இயலாது என்பதே எனது வாதமாகிறது. இன்றைய அளவில் புறச்சூழல் மாற்றமடைந்துள்ளது. மேற்படி தர்க்கவாதம் அதாவது அதே போக்கு என்பது தற்

பலதரப்பட்ட வயது மட்டங்களிலுள்ள இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் வரையான இந்த மக்களை நாம் எவ்வாறு பராமரிக்கிறோம் என்பது வரலாற்றின் மூலமாகவும் எதிர்காலச் சந்ததியினர் மூலமாகவும் கண்காணிக்கப்படக் கூடும். விடுதலைப்புலிகள் அமைப்பென்பது கபடத்தனமான எதிரியேயென்பதும், அது மீளவும் உயிர்த்தெழுவதற்கு எத்தனிக்கக்கூடுமென்பதும் உண்மையே.

அந்தவகையில், இந்த மக்கள் மத்தியில் மறைந்திருக்கும் விடுதலைப் புலிப் போராளிகள் பத்தாயிரமாகவோ பதினைந்தாயிரமாகவோ இருக்கக் கூடும். எஞ்சியிருக்கும் இரண்டு இலட்சம் மக்கள் பற்றி என்ன கூறப்போகிறீர்கள்? அவர்களை முட்கம்பி வேலிகளுக்குள் தடுத்து வைத்திருப்பதன்

**தமிழில்: சரா**

காரணம்தான் என்ன....?"

மேற்படி கருத்து வெளிப்பாடு ஒருபுறமிருக்க, மஹிந்த ராஜபக்ஷ அரசு பக்கம் பகிரங்கமாகவே சார்ந்து நிற்கும், இந்தியாவின் ஹிந்து பத்திரிகையானது, கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி "வவுனியா கூடல் நகர அகதி முகாமில் வாழ்ந்து வரும் தஞ்சமடைந்துள்ள மக்கள் பெரிதும் துன்புறுவதாகவும் தமது அன்றாடத் தேவைக்கான நீரைக் கூடத் தினமும் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது. மேற்படி பத்திரிகைத் தகவலுக்கு அமைய, இந்த இடம் பெயர்ந்தோரின் முகாமினுள் உயிர்கொல்லி நோயொன்றும் கைக்கெட்டிய

அவசியப்பாடுகள் குறித்து எதுவித உணர்வுபூர்வத் தன்மையும் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக அரசின் எறிகணை மழைக்கு மத்தியில் இடத்துக்கிடம் உயிர் தப்பியோடி காயங்கள் மற்றும் வேதனைகளைப்பட்டனுபவித்த அவர்களது உளத்தாக்கங்கள் மென்மேலும் அதிகரிக்கப்படுதலே இன்று நடந்தேறி வருகிறது. அன்று அவ்வாறு அரச பாதுகாப்பு பிரதேசங்களை நோக்கி வரும் அந்த அகதி மக்களுக்கு, புதியதொரு வசந்தத்தை உருவாக்கித் தருவதாக அரசு சபதமிட்டது. இன்றோ அச்சந்தர்ப்பம் அற்றுப் போய்விட்டுள்ளது." என்பதாக அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.



அண்மையில் இலங்கை வந்திருந்த ஐ.நா அமைப்பின் மேலதிக பொதுச் செயலாளரான 'லியன் பாஸ்கோ' வன்னிப் பிரதேச அகதி மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து வழங்கிய போது "இவ்விதமாக இந்த மக்களை முகாம்களுக்குள் தடுத்து வைத்திருப்பதானது சோகமயமான தொரு நிலைப்பாடேயென்பதோடு இலங்கையின் எதிர்கால அரசியல் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பானதுமாகும். இந்த முகாம் வாழ்க்கையென்பது வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்துவதாகும். இந்த மக்களுக்கு அவர்களது சொந்த வீடுவாசல்களுக்குச் செல்வதற்கு இடமளிக்கப்பட வேண்டியுள்ளது.

## தமிழ்மக்களுக்கு இந்நாட்டில் சம உரிமை இல்லை என்பதனை எடுத்துக் காட்டும் ஏற்பாடு இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிநுட்பத்தை உங்களது வாழ்வை மேம்படுத்தும் சக்தியாகக் கையாளுங்கள்!

இலக்கியக் காட்சி 10

அயோத்தியில் இராமனது முடிசூட்டு விழாவிற்கான முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தசரதனை அழைத்து வரவேண்டும். சுமந்திரன் அரண்மனைக்குச் சென்றான். அங்கு வேந்தர் வேந்தனைக் காணாதவனாய் கைகேயியின் மாளிகையை நாடினான்.

தருணத்திற்காகவே காத்திருந்தவள் போலச் செயற்பட்ட கைகேயி, ''பிள்ளையைக் கொணர்க'' எனச் சுமந்திரனிடம் தெரிவித்தாள். கைகேயி பிள்ளையென யாரைக் குறிப்பாள்? சுமந்திரனுடைய பார்வையில் அது இராமனையே குறிக்கின்றது.

மகிழ்ச்சி பிரவாகிக்க இராமனை அடைந்த சுமந்திரன் ''சிற்றவைதானும் ஆங்கே கொணர்க என்றாள். ஆதலால் விரைந்து தந்தையைக் காணச் செல்வோம்'' என ஆலோசனை கூறி நின்றான்.

கைகேயியின் அழைப்பைச் சிரமேற்கொண்டு அரண்மனையை அடைந்த இராமனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தந்தையின் சிம்மாசனம் வெறுமையுற்றிருந்தது. அரச பிரமுகர்கள் முனிவர்களோடு கூடிப் பதவியேற்கப் போகும் இராமனது புகழைப் பாடிய வண்ணம் இருந்தனர்.

சிற்றன்னையின் மாளிகைக்குள் இராமன் புகுந்தான். தாயைக் கண்ட பசுக்கன்றுக்கு ஒப்பாக அவன் உள்ளம் உருகியது. நெற்றி தரையில் பொருந்த வீழ்ந்து வணங்கினான்.

''மகனே உன் தந்தை உனக்குச் சொல்வதாகிய ஓர் உரையுள்ளது''

''அப்படியா? என் தந்தை ஏவ, அதனை நீரே தெரிவிக்கக் கிடைக்கும் வாய்ப்பால் அடியேன் உய்ந்தேன்.'' இராமனிடமிருந்து பணிவு கலந்த வார்த்தைகள் வெளிப்பட்டன.

மனதைத் திடப்படுத்திக் கொண்ட கைகேயி மேலும் பேசத் தொடங்கினாள்.

**"ஆழி சூழ் உலகம் எல்லாம்**
**பரதனே ஆள, நீ போய்த்**
**தாழ் இருஞ் சடைகள் தாங்கி**
**தாங்க அரும் தவம் மேற்கொண்டு**
**பூழி வெம் கானம் நண்ணிப்**
**புண்ணியத் துறைகள் ஆடி**
**ஏழ் இரண்டு ஆண்டின் வா" என்று**
**இயம்பினன் அரசன் என்றாள்.**

*(கைகேயி சூழ்வினைப் படலம்:111)*

தசரதனிடம் வரங்களைக் கேட்கும் போது ''ஒன்றால் என் சேய் அரசாள்வது என்றும் ஒன்றால் சீதை கேள்வன் போய் வனமாள்வது'' எனவும் கேட்டவள் தற்போது அவ்வரங்களையே விரித்துரைத்துத் தன் மதிநுட்பத்தை வெளிப்படுத்துகின்றாள்.

''கோசல நாடு, கேகய நாடு எனக் கடல் சூழ்ந்த உகமெல்லாம் பரதனே ஆளவேண்டும். நீ, புழுதி நிறைந்த வெம்மையான காட்டை உடனடியாக அடைய வேண்டும். நீண்டு தாழ்ந்த சடையை வளர்க்க வேண்டும். தாங்குவதற்கு அரிய தவங்களை மேற்கொள்ள வேண்டும். புண்ணியத் தீர்த்தங்களில் நீராட வேண்டும். பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு மீண்டும் வர வேண்டும்.'' வரங்களை விரித்துரைக்கிறாள் கைகேயி.

இராமனுக்குப் பதினான்கு ஆண்டுகள் குறித்தவள் பரதனுடைய ஆட்சிக்குக் காலம் குறிக்கவில்லை. காலமெல்லாம் பரதனே அரசன் என்ற அவளது சிந்தையை இவ் அடிகளால் ஊகிக்க முடிகின்றது.

வனவாசத்தின் போது மேற்கொள்வதற்கான கருமங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குகிறாள். அயோத்தியின் ஆட்சிப் பொறுப்புக் கிடைக்காமல் காட்டிற்குப் போகின்றவன் நாடு கடந்த அரசு ஒன்றை உருவாக்கினால் அது இவளுக்கு இடைஞ்சலாகிவிடும். இச்சிந்தனை எழுவதைத் தவிர்க்கும் நோக்குடன் சடைவளர், தவம் செய், புண்ணியத் தீர்த்தமாடு என்றவாறு செயற்கூறுகளைக் குறிப்பிடுகின்றாள்.

பதினான்கு ஆண்டுகள் என்பது, இரண்டு தலைமுறையினருக்குரிய பருவம் ஆகும். வாழ்க்கைப் பருவங்களை ஏழு ஏழு ஆண்டுகளாக வகுத்த நம்முன்னோர் தமது காரியங்களுடன் தலைமுறைக் காலத்தையும் பொருத்திப் பார்த்தனர். இரண்டு தலைமுறை இடைவெளி கழித்துக் காட்டில் இருந்து வரப்போகும் இராமனை யார் நினைத்துக் கொள்ளப் போகிறார்?

இவ்வளவற்றையும் கூறியவள், இவற்றைத் தந்தை கூறினான் என்று கூடக் கூறாது அரச கட்டளை என்றே கூறுகின்றாள். ஏனெனில் அரச கட்டளை மீறப்பட முடியாதது என்பதை அவள் நன்கு அறிவாள்.

பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கூர்மையான மதிநலம் படைத்தவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. அவர்களால் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும். தன் தலைவனிடம் பெற்ற இரண்டு வரங்களை ஆறு செயற்கூறுகளாக விரித்துரைக்கும் கைகேயியின் மதிநுட்பம் நம்மை வியக்க வைக்கிறது.

அழிவுப்பாதையில் தன் மதியூகத்தைப் பயன்படுத்திய இப்பெண் தான் பெற்ற மைந்தனாலும் இகழப்படுகிறாள். பின்னாள்களில் வலுவிழந்தும் போகிறாள்.

இறைவன் நல்கிய மதிநுட்பத்தை வாழ்வை மேம்படுத்தவல்ல சக்தியாக கையாள்வது நம்மவர் கடனாகும்.



ச.லலீசன்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * *



# ஒரு தேவதையின் குரல்



ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையின் 1970 துகளின் ஆரம்ப கால கட்டத்தில் தடம் பதித்தவர் எழுத்தாளர் சி.சுதாராஜ்.

இவரது சிறுகதைகள் வீரகேசரி, தினகரன், ஈழநாடு, சிந்தாமணி போன்ற ஈழத்துப் பத்திரிகைகளிலும் சிரித்திரன், மல்லிகை போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

இவரது பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு 'பலாத்காரம்' 1977 இலும், சமூக நாவல் 'இளமைக் கோலங்கள்' 1981 இலும், 12 சிறுகதைகள் அடங்கிய இரண்டாவது சிறுகதைத் தொகுதி 'கொடுத்தல்' சிரித்திரன் பிரசுரமாக 1983 இலும் வெளிவந்தன.

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மொறட்டுவ பல்கலைக் கழக பொறியியல் பட்டதாரியான இவர் ஈராக், குவைத் உட்பட்ட பல வெளிநாடுகளில் பொறியியலாளராகப் பணிபுரிந்துள்ளார்.

தற்போது கொழும்பில் வசித்து வரும் சுதாராஜ், 'தேனுகா' என்ற பெயரில் பதிப்பகமொன்றை நடத்தி வருகிறார்.

'கொடுத்தல்' சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள இவரது 'ஒரு தேவதையின் குரல்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 119

தாக்குதலுக்குப் பயந்து ஓடுகின்ற அப்பாவியைப் போல புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது. அருணாசலம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

இறங்கவேண்டிய இடம் அண்மித்துக் கொண்டுவர அவரது மனத்தில் பதட்ட உணர்வும் அதிகரித்தது. இந்த செப்ரெம்பர்மாத நடுப்பகுதியிலும், அநுராதபுரத்தில் இறங்க வேண்டியேற்பட்டது தனது கஷ்ட காலமே என எண்ணிக்கொண்டார்.

எதிர்பாராமல் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் தத்தமது சொந்த இடங்களுக்கு 'ஏற்றுமதி' செய்யப்பட்ட விசித்திர அனுபவம் பெற்றவர்களில் அவரும் ஒருவர். [அவர் வேலைசெய்கின்ற சிங்கள கிராமத்திலிருந்து கொழும்பிற்கு அரசாங்க லொறி மூலம் கூட்டிச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டவர்.] அந்த நேரத்தில் கடவுள் மாதிரி வந்து காப்பாற்றி அரச பாதுகாப்புடன் அனுப்பி வைத்தவன் அவருடைய சிங்கள நண்பன் ஒருவன் தான்; மனிதர்களில் இயமன்களும் இருக்கிறார்கள், கடவுள்களும் இருக்கின்றார்கள்.

நாடு சகஜ நிலைமைக்குத் திரும்பி விட்டதால், இடம் பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் தங்களது வழக்கமான அலுவல்களுக்குத் திரும்பிவிடுமாறு வானொலி அறிவிப்புச் செய்தது.

தப்பிப் பிழைத்து வீட்டிற்கு வந்த நேரத்தில் 'சாப்பிடாமல் கிடந்து செத்தாலும் பராவாயில்லை.... இனி அங்கை போக வேண்டாம்!'' என அன்புக் கட்டளையிட்ட அவரது துணைவி கூட, ''இப்பிடியே நெடுகலும் இருந்தால் என்ன செய்யிறது.... சம்பளத்தையெண்டாலும் எடுத்தால் ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்.'' என நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். உண்மையிலேயே சமாளிக்க முடியாத நிலைமைதான்.

ஆரம்பத்தில் ஐந்தைப்பத்தைக் கொடுத்துதவிய அக்கம்பக்கத்தவர்களும் கையை விரிக்கத் தொடங்கிவிட்டார்கள். நிலைமை சுமுகமாகும் வரை அது எவ்வளவு காலம் சென்றாலும் வேலைக்குத் திரும்புவதில்லை என அரச ஊழியர் ஆங்காங்கே கூடி முடிவெடுக்கவும், அந்தரம் ஆபத்திற்கு உதவியவர்களும் கைவிடத் தொடங்கி விட்டார்கள்.

''என்ன?.... அப்ப இனி வேலைக்குப் போகமாட்டீர்களோ?.... இந்தப் பக்கத்துக்கும் மாற்றம் எடுக்கேலாதாக்கும்?..... அவங்களும் என்னெண்டு தான் எல்லாரையும் மாத்திறது'' சிலர் அனுதாபம் தெரிவித்தார்கள்.

''வேலையை விட்டிட்டு... ஏதாவது கடையைத்தனியைப் போட்டுக் கொண்டு ஊரோடை இருங்கோவன்.'' - இன்னும் சிலர் இப்படி இலவச ஆலோசனை வழங்கினார்கள்.

நிரந்தரமான ஒரு சேமிப்போ வேறு வருவாய்களோ இன்றி மாதாந்த சம்பளத்தை எடுத்து [கௌரவமான] வாழ்க்கை நடத்துகிற நடுத்தரவர்க்கத்தினரின் ஒருவர் தான் அருணாசலமும்.

பலசரக்குக் கடைக்காரனுக்குக் கொடுக்கவில்லை இந்த மாதம் 'செலவு' காசு கொடுக்கவில்லை. அவனும் நிலைமை புரியாமல், ''ஐயா, அந்தக் கணக்கு....?'' எனக் கேட்டவாறு ஒரு மாதிரிச் சிரிக்கத் தொடங்கிவிட்டான். அது சுத்தமான சிரிப்பல்ல, அவனது கடையிலுள்ள பொருள்களைப் போலவே கலப்படம் நிறைந்தது, அந்தச் சிரிப்பை அவரால் தாங்கமுடியாது.

தொட்டம் தொட்டமாக வேண்டி சில்லறைக் கடன்களும் பல. அறிஞ்சவன் தெரிஞ்சவனைக் கண்டு வெட்கத்தையும் விட்டு பல்லைக்காட்டிப் பார்த்தால் அந்த வித்தைகளும் பலனளிக்கவில்லை.

பெண்சாதியின் கழுத்தில் தப்பியொட்டிக்கிடந்த தாலிக்கொடிதான் அவரது கண்களைக் குத்தியது. மெதுவாகக் கதை விட்டுப் பார்த்தார்... கண்மணியின் கண்கள் கலங்கிவிட்டன.

''முந்தி வைச்ச நகையெல்லாம் வருசக் கணக்காய் மீளமால் இருக்குது... இதையும் கொண்டுபோய் வைக்கப் போறியளோ?''

அந்தக் கண்ணீர் அவரது இதயத்தைத் தொட்டது. கவலை மேலிட்டது. ஒரு பாவமும் அறியாத குழந்தை குட்டிகள் நாளைக்கு சாப்பாடு என்று கையை நீட்டும் பொழுது என்ன செய்வது?

''எப்படியாவது வேலைக்குத் திரும்பியிட வேணும்'' என முடிவெடுத்துக் கொண்டார்.

அருணாசலம் வேலைசெய்கிற சிங்களக் கிராமத்திற்குப் போவதானால் அநுராதபுரத்தில் இறங்கி கண்டி பஸ் எடுக்க வேண்டும். இந்த இடங்களெல்லாம் கலவரத்தின் போது கடுந்தாக்குதலுக்குள்ளான இடங்கள். இவரோடு வேலைசெய்த செல்லத்தம்பி அந்த அதிர்ச்சியில் வேலையையே 'றிசைன்' பண்ணிவிட்டார்!

- மீண்டும் அங்கு வேலைக்குப் போவதற்கு, முதல் நாள்களில் கண்டு சம்மதம் சொன்னவர்களில் கந்தசாமி மாத்திரம் தான் இப்போது கூடவந்திருக்கிறார். வருவதாக ஒப்புக் கொண்ட மகேசு கடைசி நேரத்தில் காலைவாரிவிட்ட சங்கதி புகையிரதத்தில் ஏறிய பின்னர் தான் தெரியவந்தது.

''அவனும் வந்திருந்தால்... சேர்ந்து அடிவேண்டுவான்... எங்களுக்குக் கொஞ்சமாவது குறையும்!'' எனப் புகையிரதத்தினுள் 'ஜோக்' அடித்த கந்தசாமியும் அலங்க மலங்க விழித்தவாறு இருந்தார். இறங்குவதற்கு முன்னர் கடிகாரத்தை கழட்டி காற்சட்டைப் பைக்குள் வைத்தார்.

''அடிக்கிறவர்கள் காற்சட்டையையும் கழட்டிக் கொண்டுதான் விடுவார்கள்!'' என இரகசியமாகப் பகிடி விட்டார் அருணாசலம்.

அந்த நகைச்சுவையை அனுபவிக்கு முன்னரே புகையிரதம் நின்றது. இதயங்களே நின்று விட்டது போல.

பஸ் நிலையம் வரை உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். மௌன விரதம் மேற்கொண்டவர்களைப் போல நடக்கத்தொடங்கினார்கள்.

கந்தசாமி சற்று விலகியே நடந்து வந்தார். அருணாசலத்தாரைப் பார்த்தால் 'அசல் தமிழன்' என முகத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறதாம்! தன்னைப் பார்த்து யாரும் மட்டுக் கட்ட முடியாது என அந்தரங்கமாக நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

[12 ஆம் பக்கம் பார்க்க.....]

* * * * * * * * * * * * * * * * * * * * * * * *

ஓ! யாழ்ப்பாணம்
புதிய நவீன சந்தை
மீண்டும் கடைத் திறப்பு
சூடு பறக்கும் வியாபாரம்
இளைஞர்கள் விரும்புகின்ற
கைத்தொலைபேசி முதல்
மோட்டார் சைக்கிள் ஈறாய்
இன்றும் பல தினுசுகள்
அற்புதமாய் அணிவகுக்க...
தெருவோர வியாபாரம்
மும்மொழிச் சங்கமங்கள்,
கொழும்பிலே தயாராகும்
பொருளுக்கும் நிறுவனத்துக்கும்
நிமிர்ந்து பார்க்கும் 'கட் அவுட்'டுக்கள்
வீடுகளில் வளவுகளில்
தெருவோர வளைவுகளில்...
சுவர் நிறைத்துக் காட்சிதரும்
பலவர்ண விளம்பரங்கள்
தமிழ்மொழிக்கு அந்தஸ்தை
அற்புதமாய்ப் பறை சாற்ற....
ஆள் விலத்த இடமில்லா
அழகான வீதிகளில்
பாண் நகர்ந்து செல்வது போல்
பொருளேற்றும் பாரவூர்தி....
தெருவிரிக்க வழியில்லை
கடை விரித்துப் போட்டாச்சு
அதனாலே விபத்துக்கும்
இனியொரு குறையுமில்லை.
வன்னியில் மரமெல்லாம்
மண்ணோடு மடியவிட்டு
மரத்தளை மரக்காலை
மரத்தேவை நிறைவு செய்ய.
சிமெந்தும் கம்பிகளும்
பெயின்ரோடு சீற்றுகளும்
மாபிளும் கண்ணாடியும் - என்று
கட்டடப் பொருளெல்லாம்
தாராளமாய் இங்கு உண்டு.
கட்டி முடிப்பதற்கு
மண்ணேற்ற இடமேது!
முழி பிதுங்கும் யாழ். நகரம்
உற்பத்தி ஏதும்
காணாத குடாநாட்டில்
உற்பத்தியாளர்
நியமித்த விலைக்கே
பொருள் கிடைக்க வழியுண்டு
அதுதான்...
ஏ-9, கடைதிறந்து விட்டாச்சாம்
இந்தியா முதலிருந்து
தென்னிலங்கை வரையான
அன்றாட வியாபாரிகள்
ஊருக்குள் ஊர்கோலம்.
உள்ளூரிலும் வெளிநாட்டிலும்
சம்பாதித்த பணமெல்லாம்
அள்ளியே செல்வதற்கு
வந்த சுனாமி போல
யாழ்ப்பாணம் மீண்டும்
வழமைக்குத் திரும்பி விட்டதாம்.
சொல்கிறார்கள் என்றாலும்
இது கொஞ்சம்... கொஞ்சம்...
அதிக விலையில்லையோ?
யாரோ ஒருவன் கேட்க
மாப்பிள்ளை(ச்) சந்தை முதல்
பல்வேறு சந்தைகளில்
அதிக விலை கொடுத்து (ப்)
பழக்கப்பட்டவர் யாழ்.மக்கள்
சொல்லிச் சென்றான் வேறொருவன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேடிவருகிறது தீபாவளி



நாம் ஒவ்வொருவரும் ஞானப்பிரகாசத்தை ஞான - ஒளியை அடைவது தான் தீபாவளியின் தத்துவார்த்தமாகும். நல்ல எண்ணமாகிய எண்ணெய்யை நம் உடம்பில் பூசுதல் வேண்டும். சித்தமாகிய அரப்பினால் [சீயாக்காய்] தேய்த்து ஊத்தைகளாகிய அழுக்காறு முதலாணவற்றைப் போக்குதல் வேண்டும். ஞானமாகிய வெண்ணிற உடைகளை உடுத்தி புனிதமாக இருத்தல் வேண்டும். இந்திரியங்களாகிய அசுரர்களைப் பட்டாசு முதலான திட உறுதிகளினால் சுட்டுப் பொசுக்குதல் வேண்டும். இப்பொழுது நம்மை அறியாமலேயே நம் அகத்தில் ஒருவித ஒளிப்பிரகாசம் தோன்றும். நமக்கு ஒன்றுமில்லாத ஒரு ஆனந்த நிலை உண்டாகும்.

**தீபாவளி வந்தது எப்படி?**

இந்து சாஸ்திர சம்பிரதாயத்தில், யாராவது பெரியவர்கள் மோட்சம் புகுந்தால், கோயில் கோபுரங்களிலும், கோயில் மதில் மீதும், தீபங்கள் ஏற்றி வைப்பது வழக்கம். இதை மோட்ச தீபம் என்பார்கள். அது போலவே நரகாசுரனின் மோட்சத்தைக் குறிக்க தீபம் ஏற்றினார்கள். அந்த நடைமுறையே காலப்போக்கில் தீபாவளிப் பண்டிகையாக ஆனது. தீபாவளி தினத்தன்று தீபங்கள் ஏற்றுவதும் இதிலிருந்து தான் பிறந்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

**முதல் தீபாவளியைக் கொண்டாடியது யார்?**

முதன் முதலில் தீபாவளியைக் கொண்டாடி துவக்கி வைத்தது யார் தெரியுமா?

பகதத்தன் என்பவனே முதன்முதலில் தீபாவளியைச் கொண்டாடியவனாவான். பகதத்தன் நரகாசுரனின் மைந்தன். அவனுடைய முதல் சிறப்பான தீபாவளிப் பண்டிகை கொண்டாட்டத்திற்கு சிறப்பு விருந்தினர் மாய சூத்ரதாரியான ஸ்ரீ கிருஷ்ணர் தான். சிறப்பு விருந்தினர் கிருஷ்ணருக்குப் பட்டுப்புதுத் துணிகள், பலகாரம் படைத்து அவன் துவக்கி வைத்த கொண்டாட்டம் தொடர்ந்து சென்று இன்று ஒரு வழக்கமாகிப் போயுள்ளது.

# மூட்டைப்பூச்சியின் தொல்லையிலிருந்து விடுபட....



மூட்டைப்பூச்சிகள் மனிதனின் புற ஒட்டுண்ணிகளாக வாழ்கின்றன. அவை மனிதனால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டுள்ளன. மூட்டைப்பூச்சிகள் விலங்கு வகைப் பட்டியலின் படி சிமிசைட்ஸ் [Cimicides] என்ற குடும்பத்தையும் அறுகாலிகளின் [Hemiptera] வகையையும் வரிசையையும் சேர்ந்தவை.

சைமெக்ஸ் லீருறாலிஸ், சைமெக்ஸ் ஹெமிப்ரெறஸ் [Cimex leeturalis, Cimex -hemipterus] என்ற இரு இன மூட்டைப் பூச்சிகள் மனித ஒட்டுண்ணிகளாக வாழ்கின்றன. இவ்விரு இனங்களும் வாழ்முறையும் வாழிடங்களும் ஒரே மாதிரியானவை.

இவை இருட்டில் மட்டுமே நடமாடும் பழக்கமுள்ளவை. பகல் நேரங்களில் இவை சிறிய இடுக்குகள், கட்டில்களிலுள்ள துளைகள், நாற்காலிகள், கதவுகள், சுவர்களிலுள்ள பள்ளங்கள், மெத்தை மடிப்புக்கள், பாய்கள் போன்றவற்றுள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. தமது மறைவிடங்களிலிருந்து வெகுதூரம் ஊர்ந்து போய் மனிதர்களைத் தேடிப்பிடித்துக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் தன்மை வாய்ந்தவை. மூட்டைப் பூச்சிகள் கூட்டமாக வாழும் இயல்புடையவை. உணவில்லாமல் நெடுங்காலத்துக்கு வாழக்கூடிய தன்மை கொண்டவை.

ஒரு பெண் மூட்டைப்பூச்சி 200 முதல் 500 முட்டைகள் வரை இடும். ஒவ்வொரு முட்டையிலும் கதவு போன்றதொரு அமைப்புக் காணப்படும். கோடை விலும் வசந்தத்திலும் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மூட்டைப் பூச்சிகள் முட்டையிடுகின்றன.



தாயின் உடலிலிருந்து முட்டை வெளிப்படுவதற்கு முன்பே அதனுள் இருக்கும் கரு வளரத் தொடங்கி விடுகின்றது. வெப்ப நிலையைப் பொறுத்து ஒரு வாரம் முதல் 10 நாள்களுக்குள் இவ்வுயிரிகள் முட்டையிலுள்ள கதவைத் திறந்து கொண்டு வெளிவருகின்றன.

எட்டு நாள்களுக்கு ஒரு முறை வீதம் இவை ஐந்து தடவைகள் சட்டையுரிக்கின்றன. அதன் பின் இவ்வுயிரி முதிர்ச்சியடைந்து விட்டதாகக் கருதப்படும்.

மூட்டைப் பூச்சிகள் 45 நாள்கள் முதல் ஒரு வருடம் வரை கூட உயிர் வாழ்கின்றன. ஓர் ஆண்டில் மூன்று அல்லது நான்கு தலைமுறைகள் தோன்றியுள்ளன. இவை 150 நாள்கள் வரை உணவில்லாமலும் வாழக் கூடியவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மனிதர்களைத் தவிர வளர்ப்பு மிருகங்களிலும் ஒட்டுண்ணிகளாக ஒட்டியிருந்து பரவும் தன்மையை மூட்டைப் பூச்சிகள் கொண்டுள்ளன.

மூட்டைப் பூச்சியின் வாய், தோலில் துளையிடுவதற்கான தகவமைப்பைக் கொண்டுள்ளது. அது கடித்த இடத்தில் இரத்தம் உறைவாவண்ணம் தடுக்கும் ஒரு நொதி [Enzyme] செலுத்தப்படுகின்றது. மூட்டைப் பூச்சியின் உமிழ்நீர் சுரப்பிகளில் உண்டாகும் இந்நொதி மனிதர்களின் உடலில் அரிப்பு, எரிச்சல், வீக்கம் என்பவற்றை ஏற்படுத்தும்.

டி.டி.ரீ மருந்துக்கு மூட்டைப் பூச்சிகளைக் கொல்லும் திறன் உள்ளது. மூட்டைப் பூச்சிகள் வசிக்கும் இடங்களில் அதனை அடிக்கடி தெளிப்பதால் மூட்டைப் பூச்சித் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★

# தேன்நிலவு பிறந்த கதை



அந்தக் காலத்தில் வடக்கு ஜேர்மனியிலுள்ள ஒரு பழங்குடியினர் திருமணமான புதுத் தம்பதிகளுக்கு திருமண நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்கு தேனில் இருந்து தயாரிக்கப்பட்ட ஒரு பானத்தைத் தினமும் அருந்தக் கொடுத்து வந்தனர். அவர்கள் அந்த ஒரு மாத காலத்தைக் கணக்கு வைப்பதற்காக சந்திரன் வளர்ந்து தேய்ந்து மீண்டும் வளர ஆரம்பிக்கும் கால இடைவெளியை- அதாவது இரு பௌர்ணமிகளுக்கு இடைப்பட்ட காலத்தைக் கணக்கிட்டு வந்தனர். தேனையும் நிலவையும் சம்பந்தப்படுத்தி அவர்கள் ஆரம்பித்து வைத்த வழக்கம் தான் பின்னாளில் பிரபல்யம் பெற்று தற்காலத்தில் நாகரீக நடைமுறையாக- ஹனிமூன் (Honeymoon) என்றாகியுள்ளது.******

# பஞ்சாமிர்தம்





# பிரான்ஸ் நாட்டின் பெருமையைப் பறைசாற்றி நிற்கிறது ஈபிள் கோபுரம்



உலகின் மிகப் புகழ் வாய்ந்ததொரு கட்டமைப்பாக ஈபிள் கோபுரத்தைக் குறிப்பிட இயலும். [EIFFEL TOWER] இது பிரான்ஸ் நாட்டின் ஓர் அடையாளம்; பாரிஸ் நகரத்தின் ஒரு சின்னம் எனக் கூறினால் அது மிகையாகாது.

1889 ஆம் ஆண்டில் வரவிருக்கும் பிரான்சுப் புரட்சியின் நூற்றாண்டு நினைவாகவும் நிலைத்த சமாதானத்துக்கு ஒரு அடையாளமாகவும் 300 மீற்றர்களுக்குக் கூடிய உயரமான கோபுரமொன்றை அமைக்க பிரெஞ்சு அரசு திட்டமிட்டது. 700க்கும் மேற்பட்ட நிர்மாண விற்பன்னர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளிலிருந்து கடைசியாக குஸ்ராவ் ஈபிள் [Gustave Eiffel] என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியே தெரிவு செய்யப்பட்டது. பொறியியலாளரான குஸ்ராவ் ஈபிளுக்கு அப்போது 53 வயது. ஏற்கனவே வெவ்வேறு நாடுகளில் பாரிய வேலைத்திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றிய அனுபவம் கொண்டிருந்தார். ஈபிள் கோபுரத்தை அமைக்கும் பணியை அவர் 1887 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பித்தார். அரசின் அந்த முயற்சிக்குப் பற்பல எதிர்ப்புக்கள் கிளம்பிய போதிலும் அரசு தனது முடிவில் உறுதியாக இருந்தது.

46 அடிகள் ஆழத்தில் அத்திபாரம் இடப்பட்டு முதல் வருடமுடிவில் 189 அடிகள் உயரமான முதல் தட்டு கோபுர அடிப்பாகம் கால்களுடன் உயர்ந்தது.

அளவுப் பிரமாணங்கள் சிறிதளவும் பிசகவில்லை. பிணைக்கும் பணியின் போது எந்தவொரு ஓட்டையும் புதிதாகவோ, அல்லது சற்று விலத்தியோ போடப்படவில்லை. வரைபடத்தின் படி அனைத்தும் சற்றும் பிசகின்றி அமைந்தன. இரண்டாது தளம் முதல் தளத்தைவிட இருமடங்கு உயரம் கூடியதாயிருந்ததோடு அப்பணி நான்கு மாதங்களில் நிறைவேறியது.

மூன்றாவது தளமும் பொருத்தி முடிக்கப்பட்டபோது கோபுரத்தின் உயரம் 906 அடிகளாக உயர்ந்திருந்தது. அரசு விதித்த 300 மீற்றர் உயரம் என்ற நிபந்தனைக்கு ஏற்ப நான்காவது தளத்தையும் குஸ்ரோவ் ஈபிள் அமைத்து முடித்தபோது கோபுரம் 300.65 மீற்றர் [986 அடி 4 அங்குலம்] உயரத்தைத் தொட்டது. உச்சியில் ஒரு மேடையும் அதில் மின்னற் கடத்தியும் கொடிக் கம்பமும் அமைக்கப்பட்டன. உச்சியிலுள்ள மேடையிலிருந்து 50 மைல் வரையான சுற்றாடலைக் கண்டு களிக்க முடிந்தது. 1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஈபிள் கோபுரத்தின் கட்டுமாணப் பணி பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஆறுவாரங்கள் கடந்து சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சில மாதகால இடைவெளியில் இக் கோபுரத்தின் உச்சிக்கு ஏறுவதற்கான பாரந்தூக்கிகள் இயங்கத் தொடங்கின. முதல் நாளன்றே 23 ஆயிரம் பேர் ஏறி இறங்கி மகிழ்ந்தனர். முதல் ஒரு வருட காலத்துள்ளேயே ஈபிள் கோபுரம் கட்டிய செலவில் முக்கால் பங்கு வருமானமாகப் பெறப்பட்டது. கோபுரத்தை நிர்மாணித்த குஸ்ரேவ் ஈபிள் தமது 91 ஆவது வயதில் காலமாகும் வரை கோபுரத்தில் ஏறிப் பார்வையிடுவோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட வருமானத்தில் ஒரு பகுதி அவருக்கு வழங்கப்பட்டது. இத்தகைய வரலாறு கொண்ட ஈபிள்கோபுரம் இன்றும் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது.

அது பிரான்ஸின் சின்னமாக எழுந்து நின்று அந்நாட்டின் பெருமையை பறைசாற்றி வருகின்றது. ★

# தனித்துப் போன உருவம்

மழை பெய்கிறது
சூரியன் காய்கிறது
இரண்டுமே ஒன்றுதான்
அந்தத் தனி மனித உருவத்திற்கு
அந்தப் பூங்காவில்
வெய்யில் வாட்டுகிறது
மழை அவனை நனைத்தெடுக்கிறது
அவனுக்குப் போக்கிடமில்லை
மழையில் இருந்து காப்பாற்றிக் கொள்ள
பிடிப்பதற்குக் குடையுமில்லை
எவரும் அவனைப் பற்றிக் கவலைப்
படுவதில்லை கைவிடப்பட்ட அவன் மீது
எல்லோரும் சுடு சொல் வீசுகிறார்கள்
ஏனென்றால் புதுப்பிக்கப்பட்ட
வாக்காளர் பட்டியலில்
அவன் பெயர் இல்லை
தன் தேசியத்தை நிரூபிக்க
அவனிடம் அடையாள
அட்டையும் இல்லை
அவனது அடையாளத்தைத் தேட
பொலிசாரும் கவலைப்படுவதில்லை
அப்படியானால் அவன்
எங்கிருந்து வந்தானாம்
எங்கேதான் போகப்போகிறான்?

தமிழில்: ரம்யன்
ஆங்கில மூலம்: எம்.வை.எம்.மீஆத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Maliban
Inspired by goodness...

# உங்களுடனான உறவினை நிச்சயித்துக் கொள்வதில் எமக்குப் பெருமை




பல தசாப்தங்களாக உங்கள் நம்பிக்கையை பேணி வரும் மெலிபன் குடும்பத்தார் ஆகிய நாம், உங்களுடனான எம் உறவு வலுப்படுத்தப்பட நிச்சயித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறோம். உங்கள் தலைமுறைகள் உண்டு சுவைத்த எம் படைப்புகளை தொடரும் தலைமுறைகளும் நற்பண்புகளுடன் சுவைக்க திடசங்கட்பம் பூணுகிறோம்.

மெலிபன்
நற்பண்புகளுடன் நாளையை நோக்கி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தேவதையின் குரல்..........

[09 ஆம் பக்கத் தொடர்ச்சி....]

'வன் செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள்' எனப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை நினைத்து சற்று நிம்மதியுடன் நடந்து கொண்டிருந்தார் அருணாசலம்.

அந்த நிம்மதி நீடிக்கவில்லை, "அடோ!" என அட்டகாசமாக எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது. நெஞ்சில் இடி விழ, அருணாசலத்தாரின் இரத்தம் உறைந்து விட்டது போலிருந்தது. திரும்பி பார்த்தார். வீதியோரத்தில் சில காடையர்கள் நின்று கொண்டு தங்களுக்குள் யாரையோ அழைப்பது போலப் பாவனை செய்தார்கள். ஏதோ புதினமான பிராணிகளைப் பார்ப்பது போல அவர்களது கண்கள் தங்களை ஊடுருவுவதைக் கவனித்தபோது நடுக்கம் இன்னும் அதிகரித்தது.

இப்படியொரு பரிதாபமான நிலையை நினைக்க அருணாசலத்தாருக்கு பெரிய வேதனையாக இருந்தது. நாங்கள் பிறந்து வளர்ந்த இந்த மண்ணிலேயே- எங்கள் நாட்டிலேயே இப்படி உயிருக்குப் பயந்து சீவிப்பதை எண்ணி அழவேண்டும் போலிருந்தது. பூமியில் காலைப் பதித்து நடப்பதே ஏதோ பாவமான செயலைச் செய்கின்றோமோ எனக் கசப்பையளித்தது. ஒரு தாயின் வயிற்றில் பிறந்த குழந்தைகளைப் போல ஏன் நாங்களெல்லாம் சகோதரத்துவமாக வாழமுடியாது? பிரச்சினைகளைப் பரந்த மனப்பான்மையுடன் அணுகித் தீர்வு காண எல்லோருமே தயங்குவதேன்?

நெடுநேரம் காத்துநின்ற பின்னர் அவர்களுக்குரிய பஸ் கடவுளைப் போல வந்தது. உள்ளே அடைக்கலம் புகுந்த பின்னரும் வாயைத் திறக்க மனமில்லை- மௌனவிரதம் நீடித்தது. அந்த இடத்திலே கதைத்து தங்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்கு இருவருமே விரும்பவில்லைப் போலும்.

அவர்களிருந்த இருக்கைக்குப் பின் இருக்கையில் மூன்று பேர்- காடையர்கள் போல அருணாசலத்தாரின் கற்பனையிலிருக்கும் கோலம் கொண்டவர்கள் வந்து அமர்ந்தனர். அவர் மீண்டும் நம்பிக்கை இழந்தார். பின்னர்தான் கவனித்தார். அவர்களும் தமிழில் கதைத்துக் கொண்டிருந்தனர். இப்போது தெம்புடன் திரும்பிப் பார்த்தார் அருணாசலம். அவர்களது கையில் ஒரு தமிழ் தினசரியும் இருந்தது.

இது அவருக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

அகங்காரமான இரைச்சலுடன் விரைந்து கொண்டிருந்தது பேரூந்து. சில இடங்களில் நிறுத்தப்பட்டு மட்டில்லாமல் ஜனங்கள் அடைக்கப்பட்டனர். இன்னோரிடத்தில் பெண்கள் மூவர் தமது கைக்குழந்தைகளுடன் ஏறிக்கொண்டார்கள்.

தனது இயல்பான உறுமலுடன் பேரூந்து கிளம்பியது. குழந்தைகளுடன் நிற்பதால் யாராவது இருப்பதற்கு இடம் தருவார்களென்ற எதிர்பார்ப்பில் இவர்களது பார்வை ஒவ்வொருவர் மேலும் படர்ந்தது. ஆனால் என்ன அதிசயம்- அங்கு இருக்கை கொண்டிருந்தவர்களில் எவரும் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை! கந்தசாமிக்கு இந்த நேரமாகப் பார்த்து உறக்கம் பிடித்துக்கொண்டதால் முன் இருக்கையில் தலையைச் சாய்த்துக் கொண்டார். இந்தத் தந்திரம் தெரியாத அருணாசலம் தனது முறை வருமுன்னர் யாராவது இடம் கொடுப்பார்கள் என நிம்மதியுடனிருந்தார்.

அந்தத் தாய்மார்கள் சில இருக்கைகளைக் கடந்து நெருக்கத்தில் நுழைந்தவாறு யாராவது தானம் செய்யப்போகும் இருக்கைகளை எதிர்பார்த்து வந்து கொண்டிருந்த பொழுது அந்த இளைஞர்கள் [காடையர்கள்] எழுந்து இடம் கொடுத்தார்கள். தோற்றத்தைக் கருத்திற் கொண்டு அவர்களைக் காடையர்கள் என எண்ணியிருந்தவர் அருணாசலம். இப்போது அவர்கள் தன்னைவிடவே உயர்ந்து விட்டவர்கள் போலத்தோன்றினார்கள்!

பஸ்சினது இரைச்சலையும், கண்டக்டருடைய "இஸ்ஸரட்ட யன்ட!" குரலையும் மீறிக்கொண்டு சடுதியாக இன்னொரு குரல் வெடித்தது.

"இஸ்ஸரட்ட யனவா வோய்!" [முன்னுக்குப் போம் காணும்]

"தம்சயனவா ஐசே!.. அபிட்ட கியன்ட ஓணநா" [நீர் போம் காணும்!... எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.]

அருணாசலம் பரிதாபமாகத் திரும்பிப் பார்த்தார். பார்த்ததுமே நெருப்பை மிதித்துவிட்டது போன்ற உணர்வு. இந்தத் தர்க்கத்தில் எதிராளியாக நிற்பவன் அந்த இளைஞர்களில் ஒருவன்- தமிழன்! ஒரு சிறுபான்மையினம் துணிவுடன் வாய்திறந்து பேசுவதே குற்றமல்லவா!

பிரச்சினை என்னவென்று சரியாகப் புரியவில்லை, அந்த இளைஞனை முன்னுக்குப் போகுமாறு அவர் உறுமுகிறார் அவனோ தைரியமாக மறுக்கிறான்.

அருவருப்பான [அழுக்கான] தோற்றத்தோடு அவன் தன்னோடு முட்டிக்கொண்டு நிற்பது அவருக்குப் பிடிக்கவில்லை, அல்லது நேற்றோ முந்தநாளோதான் மூட்டுமூட்டாக கழட்டப்பட்டவர்கள் இன்றைக்கு இவ்வளவு துணிவோடு உரசிக்கொண்டு நிற்பது பிடிக்கவில்லை என்பது சீக்கிரமாகவே புரிந்தது. இப்படியான பதட்டமான காலத்திலும் அவனுக்கிருக்கும் துணிவை எண்ணி வியப்பதா அல்லது தவிப்பதா என்று புரியவில்லை.

அவருக்கு வியத்தது- பயத்தில்!

"நியாயம் ஒருபக்கம் இருக்கட்டும்.... இப்ப இவன் தமிழ் என்றதுக்காகவே போட்டு உழக்கத் தொடங்கிவிடுவாங்களே.... தொடங்கினால் அது அவனோடு மாத்திரம் நிற்காமல் எல்லாத் 'தெமள'ர்களையும் பார்த்துதானே நடக்கும்?"

அவர் பயந்தது போலவே ஒருவன், 'இவ்வளவு நடந்த பிறகும் இதுகளுடைய துணிவைப் பற்றிக் கூறி வகுப்பு வாதத் தீயை மூட்டிவிட்டான். மின்வேகத்தில் அது பற்றிப்பரந்தது- பலர் சேர்ந்து கொண்டனர்.

தனித்த இளைஞனது அவலநிலையைக் கண்டதும் முன்னே நின்ற மற்றஇரு இளைஞர்களும் பாய்ந்து தங்கள் நண்பனுக்கு அருகில் வந்தனர். அத்தனைபேர் மத்தியில் அகப்பட்டு விட்டுக் கொடுக்காமல் வாதித்துக் கொண்டு நின்ற அவனுக்காக அவர்களும் குரல் கொடுத்தனர்.

அருணாசலம் திகைத்துப் போய்விட்டார். பயம் அதிகரித்தது. இனிக் கையைக் காலை மாறுகிற வைபவம் தொடங்கிவிடும்.

அந்த இளைஞர்களின் குரல்களும் உயர்ந்து கொண்டிருந்தன. ஆனால் பெரும்பான்மையாக இருக்கின்ற எதிராளிக்கு முன்னால் இது எம்மாத்திரம்? இந்த அமர்க்களத்தில் குழந்தைகள் அழுதன. பஸ் நிறுத்தப்படாமல் ஓடிக்கொண்டே இருந்தது.

கந்தசாமி முன் இருக்கையில் மீண்டும் சரிந்து உறங்கத் தொடங்கினார். அவருக்கு இங்கு நடப்பது ஒன்றுமே தெரியாதாம்!

நிலைமை முற்றியது! சமாதானப்படுத்துவது போல இரு சூரர்கள் முன்னே வந்தார்கள். "உம்பலா ஹிட்டபு தனட யனவா!" [நீங்கள் நின்ற இடத்திற்குப் போங்கடா] என உதவிக்கு வந்த இரு இளைஞர்களின் நெஞ்சிற் பிடித்துத் தள்ளினார்கள்.

"அபி மெதனதமாய் ஹிட்டியே!" [நாங்கள் இந்த இடத்தில் தான் இருந்தோம்] என முதலில் அமர்ந்திருந்த இருக்கையை காட்டி அங்கே குழந்தைகளுடன் இருந்த பெண்களை எழும்புமாறு கேட்டுக் கொண்டு அவ்விடத்தில் அமரச் சென்றனர்.

இது அங்கிருந்த சில மனிதாபிமானிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் ஒருவர், ஒரு மனிசத்தன்மை இருக்குதா..? பிள்ளை[illegible]ளுடன் இருக்கும் [illegible]பெண்களை எழுப்ப[illegible]ப்படி மனம் வந்தது?" என [சிங்களத்தில்] ஏசியவாறு ஒருவனது சேட்டைப் பிடித்து இழுத்தார்.

மற்றைய கைகளும் உயர்ந்தன.

இவர்கள் நாய்க்குட்டிகளைப் போல பரிதாபமாக தலையைக் குனிந்தனர்- சமாளிக்க முடியாத நிலை.

உயர்ந்த கைகள் அவர்கள் உடம்பில் விழுவதற்கு முன்னரே அவ்விடத்து இரைச்சல்களையும் ஊடறுத்துக் கொண்டு ஒரு குரல் வெடித்தது.

"எங்களுடைய சிங்கள ஆக்களும் எத்தனையோ பேர் இருந்தனீங்கள் தானே... ஒருவர் கூட எழுந்து எங்களுக்கு இடம் தரவில்லை. அந்தத் தமிழ்ப்பிள்ளைகள் தான் மனிசத் தன்மையுடன் இடம் தந்தார்கள்.... இவ்வளவு நல்லது செய்த பிள்ளைகளுக்கு நீங்களெல்லாம் இப்படிச் செய்யிறது நியாயம்தானா?

அவள் கோபாவேசம் கொண்டு நின்றாள். கனல் [illegible]குவது போலிருந்த அவள் கண்க[illegible] கலங்கின. மற்ற இரு பெண்க[illegible]டன் சேர்ந்து கொண்டனர்.

எழுந்த கைகள் குறிதவறி விழுந்தன. சூரர்களெல்லோரும் தலையைக் கீழே போட்டார்கள்.

எதிர்பாராமல் தோன்றிய அமைதியில் கந்தசாமியும் உயிர்பெற்றெழுந்தார்! அருணாசலம் அந்தப் பெண் கூறிய வார்த்தைகளை எண்ணி நன்றிப் பெருக்குடன் அவளை நோக்கினார்.

அக்கிரமங்களை அழித்தொழித்து உலகை உய்விக்கும் பத்திரகாளி தெய்வத்தைத் தரிசிக்கின்ற பக்தி அவர் நெஞ்சில் முட்டியது. ★★★★★★★★★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 82

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | 8 | | ■ |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | 13 | | | ■ |
| 14 | ■ | 15 | | | | ■ | 16 |
| 17 | 18 | | ■ | | ■ | 19 | |
| 20 | | ■ | 21 | | | | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:....................................

விலாசம்:....................................

....................................

கையொப்பம்:....................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 82**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 21.10.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 82இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 25.10.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. இரண்டாவதற்கு முந்தியது.
5. இதற்கு வசமாகா இதயம் எது?
6. உயிர்ப்பின் ஆரம்பம் இங்கு.
7. குறைதல்/ குன்றுதல்.
9. காலம் பிந்துவது.
11. உடற்கூறின் மிகச் சிறிய அலகு/ பாத்திரம்/ படகு.
12. செல்வம்.
13. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவதற்கு உதவும்.
15. கள்ளைப் புளிக்க வைக்கும் நுண்ணுயிர்.
17. மாட்டை வண்டியில் பிணைப்பது இங்கே.
19. தமிழ் மாதங்களுள் ஒன்று
20. முகத்தில் வரும். இளமையின் பிரகடனம்.
21. அபயம் புகுதல்.
22. பைபிளை இப்படியும் அழைப்பர்.
23. பழங்கால ஆயுதங்களுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. முன்னிலையில்.
2. வரவேண்டியது.
3. அழித்தல்.
4. சேலை.
5. வீடு/ மனை.
8. இரும்பினாலான மெல்லிய பண்டம்.
10. ஈகை/ கொடை.
13. பிறப்பு/ தோற்றம் (கிருஷ்ணர் இதுவரை எடுத்தது ஒன்பது).
14. நுகர்.
16. விரைவில்.
18. உபகரணம்.
19. எனவே.
21. கழித்தற் குறி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 80 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விவாகரத்து (7) சிதிலம் (8) வாதம் (10) வரம்பு (11) திரும்பவும் (14) ரசி (15) கனி (16) தாம் (17) பிரயாசம் (19) புசல் (20) கபோதி (22) கழுகு (23) குடதிசை.

**மேலிருந்து கீழ்**

(1) விசித்திரம் (2) வாதி (3) கலகம் (4) ரம் (5) துவாரம் (6) அம்புஜம் (9) தம் (10) வவுனியா (12) ருசி (13) பகரல் (16) தாம்போதி (17) பிசகு (18) சகட (19) புழு (21) திசை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 80 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ரேவதி சிவகுமாரக்குருக்கள்,
இல1160/15, அருளம்பலம் வீதி,
கல்வியங்காடு.

**2 ஆம் பரிசு** திருமதி ப.திருவேங்கடவல்லி,
இல.422, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** மு.ஹேமசாலினி,
மடத்தடி, பலாலி வீதி,
உரும்பிராய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சு.சண்[illegible],
இல.63/12, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(2) கு.சண்முகரத்தினம் சோதிடர்,
பாரதி லேன், சங்கானை.

(3) [illegible],
'கலைவாணி பவனம்',
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(4) ர.அனுஷா,
இல.198 (494), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(5) சு.பாலமுரளிதரன்,
மே/பா, சு.சுவாமிநாதன்,
இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நாம் இப்பொழுது யாழ் மண்ணில்**

எமது **JMC** வாகனத்தை அறிமுகம் செய்கிறோம். ஒக்டோபர் மாதம் 12ம் திகதி முதல் 16ம் திகதி வரை, இல. 222, ஸ்டான்லி வீதியில் எமது வாகனத்தினை தரித்து, வாகனம் சம்பந்தமான சகலவிதமான தகவல்களையும் நாம் உங்களுக்கு வழங்குகின்றோம். வங்கியூடான இலகு லீசிங் முறையினையும் அறியத்தருவதோடு, இந்த அறிமுக காலகட்டத்தில் முன்பதிவு செய்பவர்களுக்கு மிகச்சிறந்த விசேட விலையினையும் தருகிறோம்.

**உடன் அழையுங்கள் 0772 92 00 00**

(இச்சிறப்பு விலை யாழ் மாநகர மக்களுக்கு மட்டுமே)

JMC 2WD 4WD
டீசல் சிங்கல் கெப்

டீசல் பாவனை 15km/l*

* சாதாரண ஓட்டம் ** நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உற்பத்தியாளர் : ஜயங்க்லிங்க் இசுசு மோட்டர்ஸ் கம்பனி லிமிட்டட்

UniMo எண்டர்பிரைசஸ் லிமிட்டட்

(யுனைடட் மோட்டர்ஸ் லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் இணை நிறுவனமாகும்)

100, ஹாய்ட் பார் கோனர், கொழும்பு 02. தொலைபேசி: 011 4937464 தொலைநகல் : 011 2304040

| கண்டி | அனுராதபுரம் | மாத்தறை | இரத்தினபுரி | நுவரெலியா | நீர்கொழும்பு |
|---|---|---|---|---|---|
| 0773 647 737 | 0772 663 674 | 0773 841 030 | 0773 428 137 | 0773 850 627 | 0773 418 136 |



# தேர்வு செய்வதற்கான நேரம்

Fixed Line

மிகக்குறைந்த கட்டணத்தைக்கொண்ட Dialog நிலையான இணைப்புகளுக்கு மாறுங்கள்

| Dialog நிலையான தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் | நீங்கள் இப்போது செலுத்திக்கொண்டிருக்கக்கூடிய தொகை |
|---|---|
| ஆரம்பக் கட்டணம் இல்லை | ஒவ்வொரு அழைப்பிற்கும் ரூ.1/50 அளவான கட்டணம் |
| வேறு வலையமைப்பிற்கான அழைப்புகள் ரூ.2/- | வேறு வலையமைப்புகளுக்கு ரூ.5/- அளவிலான கட்டணம் |
| மாதாந்தக் கட்டணம் ரூ.300/- | ரூ.900/- அளவான மாதாந்தக் கட்டணம் |

மற்றும் வேறு Dialog நிலையான தொலைபேசிக்கான அழைப்புகளில் 1800 நிமிடங்கள் இலவசம்

## மிகச்சிறந்த நிலையான இணைப்புக் கட்டணங்கள்

உங்கள் இல்லம் மற்றும் தொழிலகங்களுக்கானது

மேலதிக விபரங்களுக்கு (011) 7 133 133

Dialog

TRC/EC/ADT/DBB/09-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்குள் நஞ்சுக்கு எதிர்ப்புத் தன்மை உருவாகி வருவது உங்களுக்குத் தெரியுமா, என்ன?


மனித இனத்துக்குப் பல வழிகளில் சேதங்களை ஏற்புடுத்துவதுடன், தொற்று நோய்க் காவிகளாகவும் செயற்படும் எலிகளில் பல வகைகள் உண்டெனக் கடந்த வாரப் பகுதியில் பார்த்தோம்.

எலிகளைக் கட்டுப்படுத்த மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் அதனால் ஏற்படும் சாதக, பாதக நிலைகள் குறித்தும் இவ்வாரம் பார்ப்போம்.

**எலிகள் என்பதால் இளக்காரமா? எதுகையும் மோனையும் எமக்கும் தெரியும்! அதனால் சபையேறி உண்மை உரைக்கவந்தேன்.**

நான் கூறுவது முழுக்க முழுக்க உண்மை நீதிபதி அவர்களே! உண்மையைத் தவிர பொய்யெதுவும் உங்கள் முன்னிலையில் உரைக்கவில்லை!

என்பக்க வாதங்களையும் தயை கூர்ந்து செவிமடுக்க வேண்டும் ஐயா!



நாங்கள் தவறேதும் இழைக்கவில்லை. ஐந்தறிவு விலங்குகளான எங்களுக்கு மனிதரைப் போல அளவுக்கு மிஞ்சிய ஆறறிவு இல்லையே. தெரிந்ததைச் செய்வோம். விரும்பியதைப் பேசுவோம். இதிலென்ன தவறு கண்டீர்கள்?

எங்கள் உறவினர்களல்லாது விட்டாலும் நுளம்புகளெல்லாம் தம்மைப் பாதுகாக்க வசதியாகவொரு கூட்டணி



## நியாயம் பேசுகின்றன எலிகள்!

அமைத்துள்ளனராம். சுண்டெலி வீறாப்பாய் சொன்ன கதை இது. தங்களுக்கெதிரான அநீதிகளுக்காக மனிதரைப் பார்த்து உண்ணாவிரதம் இருந்தும் எதுவும் நடந்துவிடவில்லையாம். அதனால் ஒருவர் குறைந்தது பத்துப் பேரையாவது கடித்து விடுவது என அவர் இன பெண்டிரெல்லாம் வன்முறையில் இறங்கியுள்ளனராம். மனிதரைப் போல ஆண்கள் பெண்களைத் தூண்டிவிட்டு அழகு பார்க்கிறார்களாம்.

பிந்திக் கிடைத்த செய்தியாக அவர்களின் வன்முறையை அடக்கப் புதிய மருந்துகளை வானூர்தி மூலமாக தெளிக்க ஆரம்பமாம். சாதுவான நுளம்புகளும் ஆவேசமாக ஓடித்திரிகின்றனவாம். அகிம்சை அங்கும் சரிவரவில்லையாம். நாங்கள் அந்த மாதிரியான கூட்டணி இன்னும் அமைக்கவில்லை. மனிதர்களின் செயலைப் பொறுத்து எலிகளான நாமும் கூட்டணி அமைக்க வேண்டிய தேவையும் உண்டு. மனிதரைப் பார்த்து மிருகம் கற்றது இது. எம்மைக் கட்டுப்படுத்துவதற்கு மனிதர்கள் ஏன் மெத்தப் பிரயத்தனம் எடுக்கின்றனர். இவ்வுலகில் அவர்களுக்கு மட்டும் தான் உணவு உள்ளது என எவர் கூறியது. அவர்களும் எம்மைப் போல விஞ்ஞானத்தின் திறவுகோலில் அவர்களும் விலங்குகளே.

உருவத்தில் மனிதராயினும் மனதளவில் விலங்குகளே. வெட்டுவதும், குத்துவதும், வீட்டுக் கூண்டுகளுக்குள் வேலிகளமைத்து தம் இனத்தையே அடைப்பதும் இம்சைப்படுத்துவதும் எங்களுக்குள் இல்லையே. மனித விலங்குகளுக்குரிய இந்த இயல்புகள் ஐந்தறிவு விலங்குள் எதற்கும் இல்லை ஐயா! அந்த வகையில் மனிதரை விட நாங்கள் உயர்ந்தவர்கள்.

**வீட்டெலி எனக்கும் சுதந்திரமில்லையா?**

வீட்டிலே நாய்க்கும் பூனைக்கும் எதற்கு அவ்வளவாக இவ்வளவு செல்லம். நானும் வீட்டு மிருகம் தானே. நாயைக் கொஞ்சுகிறார்கள். நடுவீட்டில் உறங்கும் மெத்தையில் வைத்து தூங்கு கிறார்கள். அவைக்கென விசேடமான உணவு, அப்பப்போ குளிப்பு வேறு. விசேடமான பராமரிப்பு கூட. பொறாமையாய் இருக்குதய்யா.

நாயும் பூனையும் எங்களைப் போல மிருகங்கள் தானே. அவற்றுக்கு உணவு கொடுப்பது போல எமக்கும் தந்தால் நாம் ஏன் சேதம் செய்யப் போகிறோம்? அனைத்திற்கும் பசிதானே காரணம். வீடுகளில் புதிது புதிதாகப் பொறிகளை வைத்து எங்களைப் பிடித்து அடைத்துக் கொன்று விடுகின்றார்கள். இதைவிட எம்மைப் பிடித்துச் சீண்டி விளையாட பூனைகளை வளர்க்கிறார்கள். இதனால் எமது சந்ததிகளும் அழிந்து ஊர்விட்டு ஊர் போய் இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கையைவிடக் கேவலமான வாழ்க்கை வாழ வேண்டியிருக்கின்றது. ஆனால், ஆனைமுகத்தானின் வாகன மென அடையாளப்படுத்தியும் வைத்திருக்கிறார்கள். அதில் கொஞ்சம் ஆறுதல்.

எமக்கென நிலையான வீடென்று ஏதுமில்லாத ஏதிலிகள் நாங்கள். பெரிய மனம் படைத்த மனிதரெல்லாம் சேர்த்து வைக்கும் சொத்துக்களை ஆசை வந்ததால் என் இனசனத்துடன் வெட்டி ருசித்துப் பார்த்தேன். அதற்காக எமது வாழிடங்களை ஈவிரக்கமின்றி இப்படியா அழிப்பது? பெட்டிக்குள்ளே எனது குட்டிகளுடன் அமைதியாக வாழ்ந்த என்னை, தெருவுக்கிழுத்து பெட்டியையும் சரித்துக் கொட்டி, என் குட்டிகளை தவிக்க விட்டுக் கொன்ற விலங்கை மனிதரென்பதா? என்னினமே அழியுதேயய்யா! நானொருத்தி போதும் ஒரு தடவையில் 10 குட்டிகளை ஈனுவேன். எங்கள் கூட்டணி வலுப் பெற்று மனித சனத் தொகையை மிஞ்ச வேண்டுமென்று ஓர் ஆசை. மனிதனுடன் அவர் மடியிலிருந்து நாய், பூனை போல சாப்பிடவும் ஆசை. என்னைத் தடவி உச்சி மோந்து அன்பு காட்ட மாட்டார்களா? அன்புக்கு நான் என்றும் அடிமை. ஆனதால் தான் இன்றும் நாம் விலங்குகளானோம்.

**கழிப்பறை எமக்கும் கட்டித்தருவீரா?**

நாங்களும் கடமையாக உண்டதை உண்ணவேண்டி இருக்கின்றது. மனிதருக்கெனக் கழிப்பறை இருப்பது போல எமக்கென்று எதுவுமில்லையே! அதனால் வசதியான இல்வாழ்வை இழந்து தவிக்கும் எமக்குச் சுதந்திரமாக வாழ ஒரு கூடு வேண்டும். முடிந்தால் எமக்கெனவொரு கழிப்பறை ஒவ்வொரு வீட்டிலும் வைத்தால் உணவுப் பாதார்த்தங்களை எமது சிறுநீராலோ எச்சங்களாலோ மாசுபடுத்த மாட்டோம். ஆனால், ஒவ்வொரு நாளும் கழிப்பறையைச் சுத்தஞ் செய்ய மறக்கக்கூடாது. மனிதரைப் போல அசுத்தமாக்கிவிட்டு சுத்தஞ் செய்யாமல் அதன் மேல் கழிவு அகற்ற எம்மால் முடியவில்லை. கழிப்பது கழிவானாலும் கழிக்குமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். மேலும் இன்னுமொரு வேண்டுகோள்! உணவு தந்தீர்கள், குடிக்க நல்ல நீரும் உறங்கப் பஞ்சு மெத்தையும் தந்தால் இன்னும் சந்தோஷப்படுவோம். நீங்கள் குடிக்கும் மலக்கழிவு கலந்த E.coli நிறைந்த தண்ணீர் வேண்டவே வேண்டாம். போத்தலில் வரும் சுத்தமான தண்ணீர் தந்தீர்களாயின் உங்களுக்கு எதுவித சேதத்தையும் தரமாட்டோம்.

**உணவில் நஞ்சு வைத்து அழிக்கவா பார்க்கிறீர்கள்?**

இவ்வளவும் செய்யும் நீங்கள் உணவுப் பொறி தயாரித்து அதிலே Zinc Phosphate நஞ்சு (சிங்கு பொசுபேற்று) கலந்து தருவது எதற்காக? இந்த நஞ்சு முழுவதுமாக உணவுப் பொறியாகத் தயாரித்த பிஸ்கெட்டுடன் தருவதால் பிஸ்கெட்டைச் சுவைக்க விரும்பி எமக்குத் தெரியாமல் நஞ்சையும் உள்ளெடுத்து இறுதியில் ஆசையாக உண்ட உணவில்

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 10

நஞ்சு வேலை செய்ய ஆரம்பித்து, எம்மை இறக்கச் செய்து விடுகின்றது. இந்த நஞ்சு கலந்த உணவுப் பொறியில் எமக்கு அதனை உண்ணத் தூண்டும் உணவுக் கலவைகளும் கலந்திருப்பதால் என் இன சனம் முழுவதும் அதனை ஆவலாக உண்டு உயிரை விட்டு விட்டனவே. என் இன சனத்திற்கு வைத்த உணவுப் பொறியை நானும் சிறிதளவே சுவைத்ததால் எனக்குள்ளே இந்த நஞ்சுகளுக்கு எதிர்ப்புத் தன்மை உருவாகி வருவதாக எங்களூர் மிருக வைத்தியர் கூறினார். எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இனி என் வம்சத்தை அழிய விடமாட்டேன். நஞ்சுகளுக்கு எதிராக - அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பொறிமுறை என்னுள்ளும் என் குட்டிகளுக்குள்ளும் வளர்ந்து வருவதை நினைத்து என்னுள்ளம் பூரிப்படைகின்றது. மனிதனின் மெத்தனத்தால் அவனே கண்டுபிடித்தது எங்களுக்குள் வேலை செய்யாத, ஆத்திரத்தில் அவனே குடித்துத் தற்கொலை செய்து பரீட்சித்தும் பார்க்கிறான்.

**இப்படியொரு கஞ்சத்தனம் எதற்கு?**

உணவுக் களஞ்சியங்களில் நீங்கள் கொட்டிச் சிந்தும் உணவைக் கூட எம்மை உண்ண விடுவதில்லை. அதையெல்லாம் எவருக்கும் தெரியாமல் தனிப்பையில் போட்டு அவரவர் வீட்டுச் செல்ல விலங்குகளுக்குக் கொடுக்கின்றீர்களே! அதை நாம் உண்பது எவ்வாறு தவறாகும் ஐயா? மந்த புத்தி மனிதரின் ஆறறிவு இதிலே ஆச்சரியப்பட வைக்கிறது.

உணவுக் களஞ்சியங்களில் வைத்திருக்கும் உணவுகளை நீங்களும் உண்ணாமல் எமக்கும் தராமல் வண்டு பிடிக்க ஏன் வைத்திருக்கிறீர்கள்? உங்களின் கூட்டுறவின் கவலையீனத்தை எங்களின் கூட்டுறவைப் பலப்படுத்துவதில் நாம் பயன்படுத்திக் கொள்வதை எங்ஙனம் தவறு எனக் கூறுகிறீர்கள்? ஆற அமர வைத்திருந்து பூச்சி, புழுக்கள் உண்ணும் உணவுப் பதார்த்தங்களை நாங்களும் சேர்ந்து உண்டால் முழுப்பழியையும் வாய் பேசாத எம்மீது சுமத்துவது எவ்விதத்திலும் நியாயமில்லை. எங்களை - என் இன எலிகளைக் கண்டு கிலி கொள்ளாதீர்! எங்களுக்கும் நீங்கள் வளர்க்கும் வளர்ப்பு மிருகங்களாக ஆக ஆசை மேல் ஆசை. ஆனாலும் எம்மீது என்றும் உங்களுக்கு, காழ்ப்புணர்ச் சியையே மிகுந்துள்ளது.

**“பொசுபீன்” நச்சு வாயுவால் கொலை வேண்டாம்**

உணவுக் களஞ்சியத்தில் எங்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அலுமினியம் பொசுபைட்டு (Alluminium Phosphide) இனைப் பயன்படுத்துகிறீர்களே. எம் இன சனங்களனைத்தும் மூச்சுத் திணறி இறந்து போயினரே? உயிர் பிழைப்பதற்கு இன்னொருவரின் கையை எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கிறது. அலுமினியம் பொசுபைட்டு விரும்பத்தகாத நச்சுப் பொருளாகும். அதுவும் மாத்திரை வடிவில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள இக் கொடிய நஞ்சு வளியுடன் தொடர்பு கொண்டவுடன் “பொஸ்பீன்” வாயுவை வெளியேற்றும். இதனால் “பொஸ்பீன்” வாயுவிலிருந்து தப்பிப் பிழைக்க எங்களால் முடியாது திணறுகிறோம். தொடர்ந்து நீங்கள் இதனையே பயன்படுத்தி வந்தால் இக் கொடிய நஞ்சு முழுவதுமாக எம்மை அழித்துவிடும். நாங்கள் எங்களுடைய புத்திசாதுரியத்தினால் அடுத்தடுத்த சந்ததியாவது நிம்மதியாக வாழ வழி தேடிக் கொண்டிருக்கிறோம்.

எங்களைக் கட்டுப்படுத்துவதற்கென கட்டடங்களைக் கட்டி ஏறக்கூடிய உயரத்திற்குத் தொடுகையின்றி உயர்த்தி வைத்திருப்பார்கள். இவ்வகை கட்டடங்களின் வரைபுகளும் கட்டும் திறனும் போற்றுதற்கரியவை. ஏந்த விதத்திலாவது எங்களை அழித்திட நீங்கள் போட்டியிடும் தன்மை மதிப்புக்குரியதல்ல. மனிதருள் ஒற்றுமை மலரும் வரை மர ணிப்பது நாங்களாக நிச்சயம் இருக்காது.

**வயலில் நாம் திருடவில்லை**

வயலில் நாமாக எலிவளையானாலும் தனிவளையாக சிறுவளையமைத்து வாழுகின்றோம். அங்கும் எம்மை விரட்டுகிறார்களே. நவநாகரிகப் பயிர்ச்செய்கை என்று இப்போதெல்லாம் வரம்பைச் செப்பனிடுவதில்லை. அதனால் கொஞ்சம் ஆறுதல். இளவயதினர் விருப்பமின்றி விவசாயம் செய்வதால் அவர்தம் அலட் சியத்தால் எங்கள் குடில்கள் வரப்பினிலே வளம்பெருக்கி இருக்கின்றன. கடவுளின் புண்ணியத்தால் உணவுக்கு இப்போதைக்குப் பஞ்சமில்லை. அறுவடைக்கு முன்பும் அதற்குப் பின்பும் அளவாக வெட்டி அதில் கொஞ்சம் சேமித்தும் வைத்திருக்கிறோம். அதற்காக எங்களைத் திருடர்களாக்காதீர்! கத்தி கொண்டு வெட்டியோ, குத்தியோ, தலையிலடித்துக் கொலை செய்தோ நாம் திருடவில்லை. மரியாதையாய், பசித்த போதும், பல்லுகள் தொடர்ந்து கூசும்போதும் அளவாக வெட்டி நறுக்கி வசதியாக உண்ணுகிறோம். எங்களது வளைகளைக் கிராமமே ஒன்று திரண்டு அழிப்பதற்குக் கூட்டமும் கூடினார்களாம். பொது நல் நோக்கு வரும் வரை மனிதரின் இச் செயலைக் கண்டு பயப்பட மாட்டோம். பலவாறு அழிக்க நினைத்தால் எலிகள் நமக்கென்றொரு பலமான கூட்டணி இன்று முதல். அனைத்திற்கும் காரணம் நீங்கள் தானே. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி போல.

(வளரும்)

## நாய்க்கும் பூனைக்கும் தரும் இடத்தைத் தந்தால் நாம் ஏன் உங்கள் உடைமைகளைச் சேதம் செய்யப்போகிறோம்



கலாநிதி கு. மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவருக்கு முன்னால் நிர்வாணமான ஒரு சிறுவன் ஒரு சிறு செடியைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். மிக மிக மென்மையான உடலுடன்- நடக்க மட்டுமே தெரிந்த அந்தப் பையன் ஓநாயின் குகைக்குள் எவ்வாறு இந்த இரவு வேளையில் வந்தான். தாழ்வான ஒரு செடியின் கிளையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் அவன் அப்பா ஓநாயைப் பார்த்து சிரிக்கிறான்.

"இது மனிதக் குழந்தையா? இதற்கு முந்தி நான் பார்த்ததே இல்லை. அதை இங்கே கொண்டு வாருங்கள்" என்றாள் அம்மா ஓநாய்.

குட்டிகளை வாயால் மிக இலாவகமாகத் தூக்கிக்கொண்டு போவதில் ஓநாய்களுக்கு மட்டுமல்ல எல்லாக் காட்டுப் பிராணிகளுக்கும் பழக்கமுண்டு, அவசியமானால் ஒரு முட்டையைக் கூட சற்றும் சேதப்படாமல் பற்களால் கவ்வி எடுத்துச் சென்று விடும் தன்மை கொண்டவை.

இவ்வாறு தான் அங்கே நின்ற அந்தச் சிறு குழந்தையை அப்பா ஓநாய் தனது பற்களால் கவ்வி ஒரு அடை யாளம் கூட உடம்பில் ஏற்படாத விதமாகத் தூக்கிக் கொண்டுவந்து தங்கள் குட்டிகளுடன் வைத்தார்.



"எவ்வளவு சின்னப் பயல், எவ்வளவு அம் மணம், எவ்வளவு துணிச்சல்" என்று கூறி அம்மா ஓநாய் ஆச்சரியப்பட்டா. அந்தக் குழந்தை ஓநாய்க்குட்டிகளை இடறித் தள்ளிக் கொண்டு தாயின் வயிற்றுக்குள் சூட்டுக்காக நுழைந்து கொண்டது.

"ஹோ, ஹோ நம்ம குட்டிகளோடு சேர்ந்து கொண்டு அவனும் பால் குடிக்கிறான். ஒரு மனிதக் குழந்தை ஓநாயிடம் பால் குடிக்கிறது." என்று அம்மா ஓநாய் பெருமையாகக் கூறிக்கொண்டா.

"இப்படியான சம்பவங்கள் அங்கும் இங்கும் நடந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நமது குழுவில் மனிதக் குழந்தை எதுவும் வளர்ந்ததாகச் சரித்திரம் இல்லை" என்று தெரிவித்தார் அப்பா ஓநாய்- "அவன் உடம்பில் ஒரு முடியைக் கூடக் காணோம். ஒரு மிதி யில் கொன்று விடுவேன். ஆனால் பாரேன் என்னமாதிரி தலையைத் தூக்கிப் பார்க்கிறான்- கொஞ்சமும் பயந்த மாதிரித் தெரியவில்லை" என்றார் மேலும்.

(வளரும்)

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -35

01. காபன் தாளைக் கண்டறிந்தவர் யார்?
02. 2009 ஆம் ஆண்டு ஐ.சி.சி. சம்பி. யன் கிண்ணத்தை வென்ற நாடு எது?
03. 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெறவுள்ளது?
04. வெள்ளரசு மரக்கிளையை இலங் கைக்குக் கொண்டு வந்தவர் யார்?
05. சந்திரனில் தண்ணீர் இருப்பதைக் கண்டறிந்த விண்கலத்தின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 21.10.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -33 சரியான விடைகள்

01) டெல்பொட்ரோ.
02) கார்ல் பொப்பர்
03) ஷேக்ஸ்பியர்.
04) பிரண்டன் மக்கலம் - நதன் மக்கலம்
05) ஷேர்கான்.

### பரிசுபெறுவோர்

01. ம.விந்துஜா, தரம் - 11, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி.
02. சி.லதாங்கி, கரவெட்டி சிந்தாமணி விநாயகர் முன்பள்ளி.
03. சி.சியானுகா, தரம் - 4B, யா/உடுவில் மகளிர் கல்லூரி.
04. பா.ஹரிகரசர்மா, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.
05. தி.ரேணுஜன், தரம் -8B, செங்குந்தா இந்துக் கல்லூரி.
06. யோ.சிவரஜினி, தரம் - 6, மட்டுவில் கமலாசினி கனிஸ்ட ம.வித்தியாலயம்




## .......பொது அறிவு......

- ★ அமெரிக்காவுக்கு சுதந்திர தேவியின் சிலையை வழங்கிய நாடு? → பிரான்ஸ்
- ★ இந்தியாவின் மிகப்பெரிய நகரம்? → கொல்கத்தா
- ★ மனித உடலில் வியர்க்காத பகுதி? → உதடு
- ★ பலா மரத்தின் தாயகம் எது? → இந்தியா
- ★ டெல்லியின் பழைய பெயர் எது? → இந்திரப் பிரஸ்தம்
- ★ அஜந்தாக் குகைகளில் மொத்தம் எத்தனை குகைகள்? → 29 குகைகள்
- ★ இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம் எது? → பஞ்சாப்
- ★ மிகவும் கனமான மூளை உள்ள விலங்கு எது? → திமிங்கிலம்
- ★ ஐ.நா. சபையின் குழந்தை என்று அழைக்கப்படும் நாடு எது? → இந்தோனேசியா
- ★ சீனாவின் தேசியப் பானத்தின் பெயர் எது? → மாவோதாய்
- ★ டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது? → வானம்பாடி
- ★ மரவட்டை புழுவுக்கு எத்தனை கண்கள்? → ஏழு கண்கள்
- ★ விலைவாசி மிக அதிகமுள்ள உலக நகரம்? → டோக்கியோ
- ★ அதிக அளவு தண்ணீருடன் ஓடும் பெரிய நதி எது? → அமேசன்
- ★ கொம்பிலே கண்களை உடைய பிராணி? → நத்தை
- ★ உலகில் அதிக மக்களால் விளையாடப்படும் விளையாட்டு? → காற்பந்து
- ★ டாங்கியைக் கண்டுபிடித்த நாடு? → சுவீடன்
- ★ உலகிலேயே மிகப்பெரிய மிருகக்காட்சிசாலை அமைந்துள்ள இடம்? → அலிப்பூர்
- ★ எலும்புகளின்றி இயங்கும் மனித உறுப்பு? → நாக்கு
- ★ மிக நீண்ட ஆயுளை உடைய விலங்கு? → திமிங்கிலம்.

ம. திகழ்ஜா
தரம் 6E,யா/ இந்து மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## கல்வி

வாழ்வில் உயர் செல்வம் கல்வி
அதை நாள் தோறும்
செய்வோம் அள்ளி
வாழ்வில் ஒளியூட்டும் கல்வி!

கல்வியே மனிதனுக்குக் கண்கள்
கல்லார் முகத்தில் வெறும் புண்கள்
சொல்லியே வைத்தாரே தமிழில்
இனிய குறள் என்னும்
சுவைமிக்க நூலில்!

வெள்ளத்தால் அழியாது கல்வி
கள்வர் கையில் போகாது கல்வி
என்றும் நிலைத்திடும் நினைவில்
அழியாத பெருங்கடல் கல்வி

கல்வியை நன்றாகக் கற்போம்
கற்றபின் அதன் வழி நிற்போம்
எத்தனை இடர்வந்த போதும்
தளராது இனிதுடன்
கல்வியைக் கற்போம்!



ம. பிரகாசினி, தரம் 6E
யா/ வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை.

## மாணவர் தூரிகை




ரு.டிலக்ஷனி, தரம் - 6B, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



தே.றோஜானந்தன், தரம் -7B, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



சி.சிவராகவன், தரம் -8A, யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.




உ.ஜெரஷானி, தரம் - 4B, யா/எழுதுமட்டுவாழ்.G.I.M.S.



கு.அச்சுதன், தரம் - 4B, யா/புனித ஜோண்பொஸ்கோ.



ஆ.சயந்தன், தரம் -8B, யா/ஆனைக்கோட்டை.



ந.அன்ரனிசான்ஸ், தரம் -6, யா/ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

1) லொறி, கார், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் வைத்து விற்பனை செய்யக்கூடிய மரத்திலான 71/2 அடி உயரமும், 10 அடி நீளமும், 11/4 அடி அகலமும் கொண்ட 4 அலுமாரிகள் என்பனவும்
2) நான்கு பூட்டுக் கொண்ட உயரம் 2 1/2 அடி அகலம், 1 3/4 அடி உடைய திண்டுக்கல் இரும்புப் பெட்டகம் (IRON SAFE) ஆகியன விற்பனைக்குண்டு.

தொடர்பு: த.கனகலிங்கம்,
67/43, தருமலிங்கம் அவனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம். (89732)

## காணி விற்பனைக்கு

1) யாழ்ப்பாணம், கொட்டடியில் 20/25, வைரவர் கோயில் ஒழுங்கையில் 5 1/2 பரப்புக் காணி மூன்று துண்டுகளாகப் பிரித்து விற்பனைக்குண்டு.

2) யாழ்ப்பாணம், கொட்டடி முத்தமிழ் வீதியில் கடற்கரைக்கு அருகாமையில் உள்ள 15 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: த.கனகலிங்கம்,
67/43, தருமலிங்கம் அவனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம். (89732)

## கணனிப் பயிற்சி நெறி

வடமராட்சி கல்வி வலய அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கணனிப் பயிற்சியில் இரண்டாவது பிரிவு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் உத்தியோகத்தர்கள் வலயத் தொழில்நுட்ப இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். வருடத்தில் ஒரு செயற்பாடாக வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் இரண்டாவது தொகுதி பயிற்சி நெறி வாரநாள்களில் பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணி வரையும், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8.30 மணிமுதல் பி.ப. 2.30 மணிவரையும் 72 மணித்தியாலங்கள் நடைபெறவுள்ளது.
(203-236)

## REPAIRING

Computer, Monitor, Printer, UPS, Television, CD, DVD Players போன்ற அனைத்து இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் திருத்திக்கொடுக்கப்படும்.

சகல விதமான கணனிகளும் உங்கள் வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021 222 4459, 0774192275
Fax: 021 222 4460



## வசீகரத் தோற்றத்திற்கு! சந்துனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பளிதாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (வி/555203)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## காணி விற்பனைக்குண்டு

அராலி மத்தி,
வட்டுக்கோட்டையில் 15 1/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
வெற்று நெல்வயற் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777404584

## விற்பனையாகிறது திராட்சை ஓர் அறிமுகம்

அறிமுகம், செய்கைமுறை, உலகப் பரம்பல் ஆகிய முப்பகுதிகளையும் 24 அதிகாரங்களையும் கொண்ட, தமிழில் முதன்முதலாக திராட்சை பற்றி எழுதப்பட்ட முழுமையான நூல் விவசாயிகள், பொது மக்கள், மாணவர்கள் படித்துப் பொருளாதாரத்தை மேம்படுத்த அரிய சந்தர்ப்பம்.

விற்பனையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை. (89555)

## மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

AYNGARAN PYRAMID Original DVDs'
பழைய, புதிய திரைப்படப்பாடல் Audio CDs' MP3 CDs' VCDs'
பழைய, புதிய தமிழ், ஆங்கில திரைப்பட VCDs' DVDs'
மற்றும்
Computer Software, Computer Games CDs' DVDs'
கைக்கடிகாரங்கள், கணனி உதிரிப்பாகங்கள்

எதிர்பாராத கவர்ச்சிகரமான விலைக் கழிவில்

05.10.2009 தொடக்கம் 16.10.2009 வரை

**அல்டி எலக்ரோனிக்ஸ்**
இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 41 வயது, 5 '7" உயரமுள்ள பரணி 1 ஆம் பாதம் நட்சத்திரம் உதயத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
இலங்கை: சி.உதயசேகரன்,
இல.965, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6846, 0774014304.
கனடா: பொ.கந்தசாமி,
(ஓய்வுபெற்ற அதிபர்)
T.P: 0014168200258,
0014164938354. (89717)
Emil: WWW.PAATIA 2007 COTMAIL.COM.

## அறிவித்தல்

ஈசன்ஸ் அந்திய கால சேவை நிறுவனத்திற்கு வேறு முகவர்கள், பிரதிநிதிகள் வெளியில் ஒருவரும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம். எதற்கும் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொள்க.

**ஈசன்ஸ் அந்திய கால சேவை,**
148, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2695

WESTERN UNION | yes! money transfer

## உங்கள் உறவினர்களோடு தீபத்திருநாளை கொண்டாட முடியுமா?




உலகெங்கிலும் இருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தினை யாழ்குடாநாட்டில் எந்தவொரு MMBL மணிமாஸ்டர் நிலையங்களிலும் பெற்றுக்கொள்பவர்களுக்கு அழகிய பரிசு ஒன்று காத்திருக்கிறது!

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
*இச்சலுகை ஒக்டோபர் 31 வரை மட்டுமே

MMBL Money Master

வெஸ்டன் யூனியன் பிரதான முகவர்
MMBL மணி டிரான்ஸ்பர் பிரைவேட் லிமிடட்
7ம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II, இல-315,
வொக்சோல் வீதி, கொழும்பு-02
உடனடி அழைப்பிற்கு - 011 [illegible]
077 [illegible]

## ஜப்பான் வீட்டு மின் உபகரணம் கடை விலையிலும் ½ க்கும் குறைவாக

இப்போது யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்து இருக்கும்

### கிரவுன் மஹா சேல்



அக்டோபர் 01 ம் திகதி முதல்
புதிய சந்தைத் தொகுதி மேல்மாடி (பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னால்)

உடன் அழையுங்கள் 077 13 99 566

ஜப்பான் செட் 5pce separate கடையில் 180,000/- எங்களிடம் 29,990/- லிருந்து
4pce separate கடையில் 100,000/- எங்களிடம் 24,990/- லிருந்து

29" Flat TV கடையில் ரூ. 60,000/- எங்களிடம் ரூ. 27,990/- அத்துடன் ரூ 8490/- பெறுமதியான DVD Player ஒன்று இலவசம்

21" Flat TV ரூ. 22,990/- அத்துடன் ரூ 8490/- பெறுமதியான DVD Player ஒன்று இலவசம்

New Buffel 15" 350W

Computers PIII Rs. 2900/- PIV Rs. 6900/-

ஜப்பான் CD / VCD Compo ரூ. 9,990/- லிருந்து

ஜப்பான் தையல் இயந்திரம் ரூ. 5750/- லிருந்து Singer, Juki, Brother, Janome

Washing Machine கடையில் ரூ 30,000/- எங்களிடம் ரூ 8,500/- upwards

Portabale Radio ரூ. 1,750/- லிருந்து Tuner/cassette/CD

projection TV கடையில் 1 லட்சம் எங்களிடம் 80,000 அத்துடன் ரூ 19, 000/- பெறுமதியான Home Theatre System இலவசம்

உறுதிப்பத்திரத்துடன்

| | கடையில் | எங்களிடம் |
|---|---|---|
| Prologic Amp | ரூ. 60,000/- | ரூ. 14,990/- |

Musical Key Board Home Theater System
Center Speaker ரூ. 1,500/- அதிலும் 25% ம் கழிவு
14" Normal TV 9,990/-
21" Normal TV 13,990/-
100w Amp Rs. 6000/- Upwards

குளிரூட்டி ரூ. 23,500/- லிருந்து upwards

DVD/MPFG-4 with 60 Preset Digital AM/FM Tuner

**கிரவுன் இன்வெஸ்ட்மென் (தனி) கம்பனி**

இலங்கை முழுவதும் கிளைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மஹரகம | 011 - 27 46458 | ஜா எல | 011 - 22 29914 | இரத்தினபுரி | 045 - 22 26605 | கண்டி | 081 - 22 22151 |
| கடவத்த | 011 - 29 20281 | நிட்டம்புவ | 033 - 22 96840 | பாணந்துறை | 038 - 22 41414 | மருதானை | 011 - 26 90920 |
| நுகேகொடை | 011 - 27 68401 | குருநாகல் | 037 - 22 29647 | கம்பஹா | 033 - 22 34625 | மாத்தறை | 041 - 22 33835 |
| [illegible] | [illegible] | பொல்கஸ்ஓவிட | 011 - 27 04823 | நீர்கொழும்பு | 031 - 22 28140 | மினுவன்கொடை | 011 - 22 89643 |
| | | | | ஹொரண | 034 - 22 60101 | அநுராதபுரம் | 025 - 22 26920 |
| | | | | | | வவுனியா | 077 - 35 66895 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத் தமிழ் இலக்கியப் பெருவிழா - 2009







வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதிநாளான நேற்று எடுக்கப்பட்ட படங்கள் இவை. இறுதி நிகழ்வில் இடம்பெற்ற பண்பாட்டுப் பவனியையும், அதைப் பார்வையிடும் விருந்தினர்களையும் முதலிரு படங்களிலும் அரங்கில் நடைபெற்ற நடன நிகழ்வுக் காட்சிகளை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலத்தில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் ஸ்ரீகர்சனுக்கு பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஒரு லட்சம் பெறுமதியான பரிசினை வழங்குவதை நான்காவது படத்திலும் சிறந்த நூல்களுக்கான பரிசில்களைப்பெறும் எழுத்தாளர் அகளங்கன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கன், எழுத்தாளர்கள் செங்கையாழியான், ச.பிறேமினி ஆகியோருக்கு ஆளுநர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌர வித்து விருது வழங்குவதை அடுத்துள்ள நான்கு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதி பார்வையாளர்களை இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## 2008 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது பெற்றவர்கள்



கந்தையா நாகப்பு, இராசு சுந்தரமூர்த்தி, பி.பி.அந்தோனிப்பிள்ளை, எஸ்.திலகநாயகம் போல், கந்தையா நடேசு (தெணியான்), வி.சிவசுப்பிரமணியம் (ரஜனி), மனோன்மணி சண்முகதாஸ், செ.கெங்காதரன் ஆச்சாரி, ஆசை இராசையா

## 2009ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது பெற்றவர்கள்



பண்டாரம் சின்னராசா, உருத்திராபதி ராதாகிருஸ்ணன், இ.செல்லத்துரை, எம்.பி.பாலகிருஷ்ணன், பேதுரு அந்தோனி மார்க், பாவிலு பேலிக்ஸ், கிறகோரி பிலிப் பெர்னாண்டோ



தம்பன் தம்பதுலிங்கம், பொன்னம்பலம் மகேஸ்வரன், சரோஜா தம்பு, நாகமுத்து செல்லத்துரை, செல்லையா துரைசாமி

## காதல் தூதாகக் காசுத் தாள்.....?

காதலுக்குத் தூதாக அன்னப்பட்சி, புறா, கிளி போன்றவற்றை முன்னைய காலங்களில் அனுப்பியது உண்டு. ஆனால் இப்போதெல்லாம் காலில்லாமல், சிறகில்லாமல் பறக்கும் பணத் தாள்களையும் தமது காதலுக்குத் தூதாக அனுப்பத் தொடங்கியுள்ளார்கள் நமது இளைஞர்கள். தமது மன துக்குப் பிடித்தவர்களிடம் நேரில் சொல்லத் தயங்குகின்ற விடயங்களையெல்லாம் ஒரு நாட்டின் சொத்தான, எல்லோரது கைகளிலும் புழக்கமுறுகின்ற நாணயத் தாள்களில் எழுதி உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடுகிறார்கள். அவர்களும் நாணயத் தாள்தானே என்று வாங்கிவிடுகிறார்கள். ஒருசில இளைஞர்கள் தமது எண்ணங்கள் பொறிக்கப்பட்ட நாணயத் தாள்களை உரியவர்களிடம் ஒப்படைக்காது அதனை அதன் பணப்பரிமாற்றச் சுற்றோட்டத்திலேயே விட்டுவிடுகிறார்கள், எங்கெல்லாமோ அலைந்து எப்படியும் தமது அன்புக்குரியவர்களிடம் அது கட்டாயம் போய்ச் சேரும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.



### கோணல் லங்கள்

இதற்கு 'ரோஜாக்கூட்டம்', 'ஜே ஜே' போன்ற மசாலாத்தனமான தமிழ் சினிமாக்களும் தூபமிட்டுள்ளன. இவ்விரண்டு படங்களிலும் நாணயத்தாள்களில் எழுதப்பட்ட காதல் வார்த்தைகள் கடைசியாக உரியவர்களிடம் போய்ச் சேர்ந்து நாயகனும் நாயகியும் இணைவதாகக் காட்டப்பட்டுள்ளது. இதனைப் பார்த்த நம் இளைஞர்கள் சும்மா இருப்பார்களா? பேனையும் காகிதத்தாளுமாக அலையத் தொடங்கிவிட் டார்கள். அவ்வாறு காதல் பித்துத் தலைக்கேறி தன் காதல் வார்த்தைகளை வரைந்த ஒருவரின் காசுத்தாள் சமூக அக்கறை கொண்ட தனியார் வர்த்தக உரிமையாளர் ஒருவரின் கையை வந்த டைந்தது. இவ்வாறான சம்பவங்கள் தொடரக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவர் அனுப்பி வைத்த நாணயத் தாள்தான் இங்கு பிரசுரமாகியுள்ளது.



எந்தவொரு நாணயத்தாளிலும் வெட்டுதல், துளை யிடுதல், அச்சிடுதல், முத்திரை பொறித்தல், ஏதேனுமொன்றினை வரைதல், இலச்சினையினை ஒட்டுதல் போன்றன பாரதூரமான குற்றங்கள் எனவும் இவற்றினால் நாணயத்தாள்கள் உருக்குலைந்துவிடும் என்றும் இவற்றை மீறுபவர்களுக்கு சிறைத்தண்டனை அபராதம் என்பன விதிக்கப்படும் எனவும் மிக அண்மையில்தான் இலங்கை மத்திய வங்கி பகிரங்கமாக அறிவித்திருந்தது. இந்நிலையில் நமது தேசத்தின் சொத்தினை இனிமேலும் இத்தகைய கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு உபயோகிப்பதை இளையசமூகம் தவிர்க்க வேண்டும்.

-[illegible]

## இந்தியாவில் உயர் பதவி வகித்த யாழ்ப்பாணத்தவர்கள்

**ஒக்ரோபர் 1920**

இப்பத்தியில் வெளிநாடுகளில் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தவர்கள் சிலரைப் பற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன். அண்மையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடியபோது இலங்கைத் தமிழர்கள் தெற்காசியாவிலேயே சிறந்த கல்விமான்களாக விளங்கியுள்ளனர் எனக் கூறினேன், அதற்கு அவர் அதெப்படி, எவ்வாறு அப்படிக் கூறுகிறீர்கள் என்று கேட்டார். எனது கூற்றுக்கு உதாரணமாக 1920 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற ஓரிரு சம்பவங்களைப் பார்ப்போம்.

### இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!

1920 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தடாக்டர் மயில்வாகனம் மைசூர் மாநில அரசவைத்தியராக நியமிக்கப்பட்டார்.

இதே ஆண்டு இதே மாதம் நல்லூரைச் சேர்ந்த பொன்னம்பலம் இராமலிங்கம் (சட்டத்தரணி வில்வராயனின் தமையன்) அடங்காத் தமிழன் பேராசிரியர் சுந்தரலிங்கம் ஆகியோர் இந்திய நிர்வாக சேவைப் பரீட்சையில் முதலத் தரத்தில் சித்தியெய்தினர். இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இப் பரீட்சையில் தோல்வியடைந்தார்.

இதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராவ்சாஹிப் செல்லையா கிறிஸ்ரியாம்பிள்ளை காலமானார். இவர் தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட் [illegible] பட்டியில் தாசில்தாராகக் கடமையாற்றியவர்.

[illegible]: உதயதாரகை 16,30 ஒக், 1920.

(தாண்டவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த முதலாம் ஒழுங்கை, பிறவுண் விதியைச் சேர்ந்த குமாரரத்தினம் - சிவகலை தம்பதியரின் செல்வப் புதல்வன்

**செல்வன் கு.உமாசங்கர்**

அவர்களை வேம்படி சித்திவிநாயகர் அருள்பெற்று மென்மேலும் கல்வியில் சித்தியடைந்து சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

14B, அன்னசத்திர லேன், நந்தர்மடம்.

வாழ்த்துவோர்: மாமா, அன்ரி, ஜோதிர்ஸா

## பதவி வெற்றிடம் - ஒப்பந்த அடிப்படையிலானது

SOND நிறுவனத்தினராகிய நாம் UNICEF நிறுவன அனுசரணையுடன் யாழ் மாவட்டத்தில் மிதிவெடி அபாய விழிப்புணர்வுத் திட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம். இதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி (1) - திட்ட இணைப்பாளர்

தகைமை-

1) க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
2) ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கணனியில் Typing செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்
3) கள வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபடல் வேண்டும்
4) அரசசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது
5) மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் தொடர்பான அனுபவம் நன்று
6) ஆங்கிலத்தில் அறிக்கை தயாரிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்
7) மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

பதவி (2)- கள உத்தியோகத்தர் - ஒப்பந்த அடிப்படையிலானது

தகைமை -

1) கா.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
2) ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
3) கள வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபடல் வேண்டும்
4) அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது
5) மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் தொடர்பான அனுபவம் நன்று

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை 16.10.2009ஆம் திகதிக்கு முன்னர் SOND, இல.60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*குறிப்பு* - விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களில் பதவிகளைத் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

SOND
*60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.* T.P - 0212226700 (89766)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா நவரேந்திரன்**

மண்ணில் 04*12*1941

விண்ணில் 24*09*2008

பிறப்பெனும் முதல் விழிப்பு! பிரியமெனும் உறவின் இணைப்பு!
இறப்பெனும் இறுதி உறக்கம் பிரிவெனும் பிரியாத் துயர்
வாழ்க்கையின் தத்துவமது! மனித வாழ்வின் நினைவுப் பெட்டகமது!
வழிகாட்டியாய், வழித்துணையாய் நின்று இடை நடுவில்
தவிக்க வைத்துச் சென்று பாச நெஞ்சமதில் மாறாத
தழும்பினை ஏற்படுத்திச் சென்ற நின்நினைவுகள்
வருடமொன்றானாலும் நீங்கவில்லை! நீங்காது
வாடா மலராய் எம் நெஞ்சதனில் எப்போதும்!

*பிரான்ஸ்.* (89764) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நன்றி நவில்கின்றோம்

### அமரர் செல்லையா சோதிரத்தினம்

06.09.2009 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவர் அமரர் செல்லையா சோதிரத்தினத்தின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் சொல்லியும் எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் சமுகமளித்த அனைவருக்கும் தொலைபேசி மற்றும் தந்தி மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்தும் மயானம் வரை வந்து எம்முடன் துயரில் கலந்து கொண்டவர்களுக்கும், வைத்திய உதவிகள் புரிந்த மருத்துவர்களுக்கும் உதவியாளர்களுக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசடி, நவாலி வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர். (89754)

## நினைவுப் பிரார்த்தனையும் அஞ்சலியும்

### திருமதி சிவபாக்கியம் குமாரசுவாமி

கடந்த 30.09.2009 அன்று லண்டனில் சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இன்று பி.ப. 3 மணியளவில் அன்னாரது உடுவில் இல்லத்தில் நினைவுப் பிரார்த்தனையும் அஞ்சலியும் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*வேதாரணியார் வளவு,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (89757) குடும்பத்தினர்.

## யாழ்.வைத்தியசாலைகளுக்கு ஆறு டாக்டர்கள் நியமனம்

குருநகர், ஒக்.11

கொழும்பு மத்திய அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள வைத்திய அதிகாரிகளில் ஆறு வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு வருகை தந்து தமக்கென ஒதுக்கப்பட்ட வைத்தியசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

டாக்டர் டி.பி.பி.டி.எஸ்.விக்கிரமநாயக்கா, டாக்டர் ஆர்.எஸ்.எம்.பி.செனவிறத்ன, டாக்டர் டி.ஏ.கமகே, டாக்டர் கே.கிருபா, டாக்டர் பி.ரெறன்ஸ், டாக்டர் எஸ்.மர்சூக் ஆகியோர் கடமையைப் பொறுப்பேற்றுள்ள வைத்திய அதிகாரிகளாவர்.

(1-51)

**UK VISA**
VISA APPLICATION & REVIEW
PERFECT GUIDANCE FOR STUDENT VISA
• Financial Assistance
• Low Tuition Fees
• Apply with O/L Or A/L
• IELTS not Compulsory
011 5737307

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**A.S.S.பாம்,**
[illegible] வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு.

**ராஜீவ்,**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை (89763)

## தவறிவிட்டது

31/45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய சண்முகம் சயந்தினி என்பவருடைய தே.அ.அட்டை (857595335V) வல்லிபுரக் கோயிலுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துடன் அல்லது 0778365773 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## அறை/ வீடு வாடகைக்கு

கொழும்பு, வெள்ளவத்தையில் AC/NON AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

**Suriyan Rest,**
18/3, Station Road, Wellawatta.
T.P.: 112581441, 112 556175.

## தவறிவிட்டது

ஸ்ரீதரன் ஷோபிகா என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (856 242803V) 03.10.2009 அன்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வங்கியாளர் பரீட்சையின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதில்உள்ள முகவரியுடனோ அல்லது 0779667271 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (89753)

## காணி தேவை

பலாலி வீதியில் உரும்பிராயிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வரை உள்ள பகுதியில், வீதி ஓரமாக 20-25 பரப்புக் காணி தேவை.

தொடர்பு: *0775903384* (89738)

## விற்பனைக்கு

வேளாதோப்பு அம்மன் கோயிலடி, புதிய செம்மணி வீதி, கட்டைப்பிராயில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8652495 (89755)

## விற்பனைக்கு

Pulsar - 150 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொ.பே.: 077 8652495 (89754)

## தவறிவிட்டது

93, அரசடி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியுடைய கந்தசாமி சுரேஸ்குமார் என்பவருடைய தே.அ.அட்டை (902524231V) அம்மன் வீதி, கந்தர்மடத்தில் தவறியுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியுடன் or பின்வரும் T.Pயுடன் தொடர்பு கொள்ளவும். T.P: 077 6344467. (89756)

## உடன் தேவை

பிரபலமான கொம்பனிக்கு 1500 சதுர அடிக்கு மேற்பட்ட காட்சி அறை யாழ்.நகர எல்லைக்குள் (ஆஸ்பத்திரி Rd, கஸ்தூரியார் Rd) குத்தகைக்குத் தேவை.

தொடர்பு: *077 3013239, 011 2727218*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ரவிச்சந்திரன் விதுஷன்**

*(யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மாணவன்)*

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகள் பெற்று பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்ற ரவிச்சந்திரன் விதுஷனை பாராட்டி மகிழ்வதோடு அவர் மென்மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அப்பா: ரவிச்சந்திரன், அம்மா: ருக்மனிதேவி,
தம்பிமார்: லோஜன், டனுசன்.
இல.06, முதலாம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (89746)



## ARULLANTHA TRUST (UK)

UK Registered Charity No. 1109225

### ESSAY COMPETITION

Students aged 15-18 years are invited to write an essay on "A future vision for the development of the north and east of Sri Lanka in the post war era" in English within 1,000 - 2,000 words.

Best essays from a male and a female student will be awarded a desktop computer system. All entries should be submitted by email attachment to ukashram@arulananda.org before 15th November 2009. Essays will be judged by two trustees / members of the charity. Please provide copy of identification as proof of age, address for correspondence and telephone number.

Deadline: **15th November 2009**

Prizes will be distributed in December 2009

Venue: **Sri Arullampala Swamy Temple, Viyaparimoolai, Point Pedro.** (If a winner is from outside Jaffna, Alternative arrangement could be made for the delivery of the prize)

Sponsors: **Arullanantha Trust, 210 Mailboxes etc Summertown, 266, Banbury Road, Summertown, Oxford, OX2 7DL, UK.**

Email: *ukashram@arulananda.org*

*"Selfess service to those in need"*

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



அமரர் **T.நல்லநாதன்**

தோற்றம் 26.03.1946

மறைவு 11.09.2009

அன்பும் அறனும் காத்தே வாழ்ந்தீர்கள்
ஆனசயோடு உறவுகளைப் பேணிக் காத்தீர்கள்
நன்றே செய்தே நாளெல்லாம் உழைத்தீர்கள்
நாடுவோர்க்கு உதவும் பண்பு கொண்டீர்கள்
இன்றே எமையெல்லாம் விட்டே பிரிந்தீர்கள்
இறைவன் தாளில் சேர்ந்து வாழ அஞ்சலிக்கின்றோம்.

11.09.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும், கடிதம் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து எம்மை தேற்றிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

18/6, பல்கலைக்கழக வீதி, திருநெல்வேலி. (89750) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சிவகுரு



கூவில், புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சிவகுரு கடந்த (08.10.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுருவின் அன்பு மனைவியும் அமரர் மங்களேஸ்வரி மற்றும் மகேந்திரன் (சுவிஸ்), மஞ்சுளா, மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவலிங்கம் (ஓய்வுபெற்ற கிராமசேவகர்), அமரர் ஜெனோகரன் மற்றும் சிவக்கொழுந்து, சிவாகரன், சாந்தினி (சுவிஸ்), அமலஸ் (சுவிஸ்), சிவாஜினி ஆகியோரின் மாமியும் புனிதவதி (ஆசிரியை, யா/நாகர்கோயில் ம.வி.), பத்மாவதி (லண்டன்), தமயந்தி (சுவிஸ்), தயாழினி, மயூரி (சுவிஸ்), மதுஷா (சுவிஸ்), நிதுஷா (சுவிஸ்), ஜெனார்த்தன், வினோதன் (லண்டன்), நிஷாந் (சுவிஸ்), கிஷாந் (சுவிஸ்), அடிசன் (சுவிஸ்), குகநாதன், கிருபாகரன் (லண்டன்), தயாநந் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் இராசையாவின் சகோதரியும் இரத்தினேஸ்வரியின் சிறியதாயும் லண்டனில் வசிக்கும் அனுதினா, அனுஜன், சுவிஸில் வசிக்கும் அறிஸ், அபிஷேக் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு தகனம் செய்வதற்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கூவில், புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை.
தொ.பே.: 021 226 4266, 077 9810926 (89759)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# எதிர்த்தரப்பு மீது குற்றச்சாட்டுகளை அரசு சுமத்துவது அர்த்தமில்லாதது

'செல்லும் செல்லாததுக்கு எல்லாம் செட்டியார் தலை மீது' என்றொரு பேச்சு வழக்கு நம் மத்தியில் உண்டு.

இலங்கையின் ஆளும் தரப்புகள் தமது இயலாமையை, தவறுகளை, பிழைகளை மூடி மறைப்பதற்கு எடுக்கும் எத்தனங்கள் எல்லாம் இப்படி ஒரே வகையைச் சார்ந்தவை தான். தாம் இழைத்த தவறுகள்ள எல்லாம் சுலபமாக எதிர்க் கட்சியினர் தலைமீது சுமத்துவதுதான் ஆளும் தரப்பின் பரவணிப் பழக்கமாகும். அதிலிருந்து தாங்களும் வேறுபட்டவர்கள் அல்லர் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசைச் சேர்ந்தவர்களும்கூடத் தொடர்ந்து நிரூபித்தே வருகின்றனர்.

இலங்கைப் படைகளுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகள் பரவலாக எழுந்து வருகின்றன. சர்வதேச மட்டத்தில் இது தொடர்பான அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. அதேசமயம் இலங்கைக்கு இதுவரை தான் வழங்கி வந்த 'ஜி.எஸ்.பி பிளஸ்' வரி விலக்கு என்ற-இலங்கையிலிருந்து தைத்த ஆடைகளை இறக்குமதி செய்வதற்கான-வரிச் சலுகையை வாபஸ் பெறுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்விடயங்கள் தீவிரமடைவதற்கு சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கையின் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட தூபமிடும் நடவடிக்கைகளே காரணம் என்று சீறுகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அம்பாந்தோட்டை, சூரியவெவப் பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இப்படி எதிர்க்கட்சிகள் மீது வசைபாடியிருக்கின்றார் ஜனாதிபதி.

மேற்படி இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டு விவகாரங்களில் சாட்சியங்களைத் தேடி வழங்கும் முயற்சியில் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர் என்பது ஜனாபதியின் பிரதான குற்றச்சாட்டு.

சரி. முதலாவதாக இலங்கைப் படையினருக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டு விடயத்துக்கு வருவோம். அப்படிக் குற்றம் சுமத்துவதற்கான தவறு எதையும் இலங்கைப் படைகள் இழைக்கவேயில்லை என்கிறது அரசு. அது உண்மையானால், யாரேனும்-அது எதிர்க்கட்சியினராக இருக்கலாம் அல்லது வேறு யாராகவும் இருக்கலாம்-இடம் பெறாத நிகழ்வு என்று படைத்தரப்பிலும் அரசுத் தரப்பிலும் அடித்துக் கூறப்படும் சம்பவம் ஒன்றுக்கு எவ்வாறு இல்லாத சாட்சியத்தைத் தேட முடியும்?

மேலும், இலங்கைப் படைத்தரப்பு மீது யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படவே முடியாது என்றுதான் தம் பங்குக்கு-தாமும் ஒரு பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைவர் மட்டுமே என்பதை நிரூபிக்கும் வகையில்-எதிர்க்கட்சித் தலைவரும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க வின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்ககூட பிரசாரம் செய்துவருகின்றார். தென்னிலங்கையின் பெரும்பாலான எதிர்க்கட்சிகளும் அந்தப் பாதையில்தான் நிற்கின்றன.

அப்படியிருக்கையில், யுத்தக் குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசுப்படைகள் மீது குற்றச்சாட்டு விரல் நீள்வதற்கும், அதற்கான சாட்சியங்களைத் திரட்டி, குற்றச்சாட்டுக்குத் தூபமிடுவதற்கும் இலங்கை எதிர்க்கட்சியினரே காரணம் என்று கூறுவது வெறும் அபத்தமன்றி வேறில்லை.

வன்னிப் பெருநிலப் பரப்பில் யுத்தம் தீவிரமடைந்திருந்த காலத்தில் இடம்பெற்றவை தொடர்பாகவே யுத்தக் குற்றச்சாட்டு விவகாரம் சில தரப்புகளால் முன்வைக்கப்படுகின்றன.

இவ்விடயத்தில் மேற்குலகு உண்மையில் தீவிரமாகவும், நேர்மையாகவும் இருக்குமானால் அது சாட்சியங்களுக்கும், ஆதாரங்களுக்கும் வெளியில் தேடி அலைய வேண்டியிருக்கும் என்று கருதுவதும் அர்த்தமற்றதாகும். உச்சத் தொழில்நுட்ப வசதிகள் நிலவும் இந்த நவீன யுகத்தில், உலகை வட்டமிட்டுச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் தமது செயற்கைக் கோள்கள் மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பில் அரங்கேறிய ஒவ்வொரு அவலத்தையும் மேற்குலகு துல்லியமாகப் பார்வையிட்டுப் பதிவு செய்திருக்கும் என்பது நிச்சயம். தேவைப் படின் மேற்குலகு அவற்றை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும். அப்படிச் சாட்சியங்கள் இருப்பின் அவற்றை வெளியிடுவதற்கான சூழமைவு-சந்தர்ப்ப சூழல்-பொருத்தமான நேரம்-மேற்குலகுக்கு அவசியமே தவிர, அதற்கான உதவி, தூண்டல் இலங்கை எதிர்க்கட்சிகளிடமிருந்து அதற்குத் தேவை இல்லை.

அத்தகைய சூழ்நிலை சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்வதா, அந்த நிலைமைக்குத் தங்களைத் தள்ளுவதா என்பவை எல்லாம் இலங்கை அரசுத் தலைமையின் கைகளில்தான் உள்ளன என்று கருதுகின்றது மேற்குலகு.

யுத்தத்தின் பின்னரான தனது நடவடிக்கைகளை யாவது நீதி, நேர்மை, நியாயத்துடன் கொழும்பு அரசு ஆற்றுமா-ஆற்றாதா-என்ற எதிர்பார்ப்புடன் பார்த்திருக்கும் மேற்குலகு, கொழும்பின் போக்கு நியாயப் பாதையில் அமையாவிட்டால் பழையவற்றை-யுத்தகால விடயங்களை-கிளறவேண்டிவரும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது.

இதைப்போலவே ஜி.எஸ்.பி வரிச்சலுகையை நீடிக்கும் விவகாரத்திலும், மனித உரிமைகளைப் பேணி, மேம்பாடடையச் செய்தல், ஜனநாயக விழுமியங்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை மதித்து வளர்த்தல் போன்ற விடயங்களில் கொழும்பின் அசிரத்தைப் போக்கை - மனித உரிமைகளை மிதித்து நடக்கும் அராஜகத் தன்மையை-சகிக்க முடியாமல்தான் இது விடயத்தில் தீவிரமான-காத்திரமான-முடிவு ஒன்றை எடுப்பது குறித்து ஆராயும் நிலைக்கு ஐரோப்பிய ஒன்றியம் தள்ளப்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தையொட்டி ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை இதை நிரூபிக்கப் போதுமானது.

இப்படியிருக்கையில், தான் இழைத்த தவறுகளுக்காக சர்வதேச சமூகத்தின் விசனத்தைச் சம்பாதித்து நிற்கும் பொறுப்பு அரசு நிர்வாகத்தையே சார்ந்தது. அதற்காக எதிர்க்கட்சிகளைக் குற்றம் சொல்வது அர்த்தமற்றது.

# தனங்கிளப்பு கிழக்குப் பிரதேசத்தில் நேற்று 450 ஏக்கர் விளைநிலம் விவசாயிகளிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

தென்மராட்சி பிரதேசத்தில் தனங்கிளப்புச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக உள்ள சுமார் 450 ஏக்கர் விளைநிலப் பரப்புக் காணிகள் சனிக்கிழமை நெற் செய்கைக்காக அந்தப் பிரதேச விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று பிற்பகல் 2 மணிக்கு தனங்கிளப்புச் சந்திக்கு அருகில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் தென்மராட்சி தனங்கிளப்பு ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் வ. சின்னப்பா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் நிகழ்விடத்திற்கு வருகை தந்த சமூக சேவைகள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜி. ஏ. சந்திரசிறி ஆகியோர் - சம்மேளன பிரதிநிதிகளால் மாலை சூடி வரவேற்கப்பட்டனர். தேசியக் கொடி சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாய பூர்வமாக ஏற்றப்பட்டது.

தொடர்ந்து மண்டபத்தில் மங்கள விளக்கினை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, கமநல ஆணையாளர் பற்றிக்ரஞ்சன் விவசாயப் பணிப்பாளர் என்.சிவகுமார், விவசாய கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், தனங்கிளப்பு பகுதி இராணுவ தளபதி மேஜர் ரட்ணநாயக்கா, தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் ஆகியோர் ஏற்றினர்.

நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, இராணுவத் தளபதி மேஜர் ரட்ணநாயக்கா, விவசாய சம்மேளன பிரதிநிதி திருச்செந்தில்நாதன் ஆகியோர் பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

கையளிப்பு நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, தனங்கிளப்பு பகுதி இராணுவத் தளபதி ரட்ண நாயக்கா ஆகியோர் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் விவசாயிகள் மத்தியில் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயத்திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள், இராணுவ அதிகாரிகள், வயல் சொந்தக்காரர்கள் கிராம அலுவலர்கள் என பலர் திரண்டிருந்தனர். நண்பகல் 12 மணியளவில் உசன் பகுதியில் இடம்பெற்ற நிகழ்விலும் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (1-131)

# வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து 1031 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 11

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1031 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு சிவன் கோயிலில் தங்கியிருந்த 78 கர்ப்பிணித்தாய்மார்களும் அவர்களது உறவினர்களுமாக 268 பேர் நேற்றுக் காலை அழைத்துவரப்பட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான இரவு உணவு ஆலய சபையினரால் வழங்கப்பட்டது.

இவர்களை இன்று காலை வந்து பொறுப்பேற்குமாறு அவர்களின் உறவினர்களை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

இதேவேளை - தீவகத்தைச் சேர்ந்த 763 பேரும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த 87 பேரும் வேலணையைச் சேர்ந்த 388 பேரும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 124 பேரும் காரைநகரைச் சேர்ந்த 164 பேரும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

காரைநகர் தியாகராசா ம.வி, வேலணை மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்கள் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றனர். (1)

## ஜனாதிபதியுடனான நாளைய சந்திப்புக்கு 100 புத்திஜீவிகள் இன்று ஏ-9 பாதையூடாக செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.மாவட்டத்தின் துறைசார் நூறு புத்திஜீவிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாளை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார்.

ஏ-9 பாதையூடாக இன்று காலை 9 மணிக்கு பல துறைகளையும் சேர்ந்த நூறு புத்திஜீவிகள் கொழும்பு புறப்படவிருக்கின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ்.மாவட்ட தேசவள விவசாய சம்மேளன நிர்வாகிகள், வணிகர்கழகம், மீன்பிடித் துறையினர், கூட்டுறவுத் துறையின் பொது முகாமையாளர், தலைவர் மற்றும் நிபுணர்கள் உட்பட 100 பேர் இச் சந்திப்பில் பங்கேற்கவிருக்கின்றனர்.

அன்றைய தினம் யாழ்.மாநகர சபையின் மேயர், துணைமேயர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை - இச்சந்திப்பின்போது யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவரும் முன்னாள் உள்ளூராட்சிதலைவருமானகமுதலியார் (ச.நீ) அலரி மாளிகையில் ஒரு மணி நேரம் விசேட உரையாற்றவுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் தொடர்பாகவும் மகஜர்கள் கையளிக்கப்படவிருக்கின்றன. (1-302)

# முன்பள்ளிகளின் கண்காட்சி கோப்பாயில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் நேற்று சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றன.

வடமாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறைச் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் இ.ராதாக்கிருஷ்ணன் உட்பட கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் சமூக சேவையாளர் லயன் வைத்தியக் கலாநிதி வை.தியாகராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஆளுநர் சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சிறார்களின் பாண்ட் வாத்திய அணியினரால் அழைத்துவரப்பட்டு தேசியக் கொடியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்பள்ளிக் கொடியை ஆளுநர் சந்திரசிறி ஏற்றிவைத்தனர்.

இதனையடுத்து முன்பள்ளிக் கண்காட்சியை ஆளுநர் திறந்து வைத்துக் காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஆக்கங்களை பார்வையிட்டார். அதையடுத்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இக்கண்காட்சி இன்றும் இடம் பெறவிருக்கிறது. (1-111)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 26 | 12.10.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 10.42 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | காலை 06.19 வரை |
| சுபநேரம்: | 12.02 - 01.32 வரை |
| ராகுகாலம்: | 07.32 - 09.02 வரை |

## சாதாரணதர மாணவருக்கு ஆங்கிலபாட பயிற்சிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.11

ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான ஆங்கிலபாடப் பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம், 16 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை நாளை திங்கட்கிழமை, யாழ்.வலயக்கல்வி அலுவலக முகாமைத் துவப்பிரிவில் பெற்றுக்கொள்ளு மாறு யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (201)

# சனிக்கிழமையே கந்தஷஷ்டி விரதம் என்கிறார் வாக்கிய பஞ்சாங்க பிரசுரகர்த்தர்

இவ்வருடம் ஐப்பசி மாதம் 2 ஆம் நாள் (19.10.2009) திங்கட்கிழமை ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம். ஐப்பசி மாதம் 7 ஆம் நாள் (24.10.2009) சனிக்கிழமை ஸ்கந்த ஷஷ்டி விரதம்.

ஷஷ்டி திதி அபரான்னம் காலத்தில் இருக்கும்போது ஷஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும். இவ்வருடம் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் ஷஷ்டி திதியானது 24.10.2009, 22நாடி 36 வினாடி வரை நிற்கின்றது. அன்று அபரான்ன காலம் 17 நாடி 37 விநாடி முதல் 23 நாடி 30 விநாடி வரை, அன்றையதினமே அபரான்னம் காலத்தில் கூடுதலாக ஷஷ்டி திதி இருப்பதால் அன்றைய தினமே ஸ்கந்தஷஷ்டி விரதமாகும்.

மேலும் வாக்கியபஞ்சாங்கத்தில் ஸ்கந்த ஷஷ்டி விரதம் இதேபோல் வந்த வருடங்கள் சில; 1936 ஆம் ஆண்டு கார்த் திகை மாதம் 2 ஆம் நாள் ஷஷ்டி திதி 22 நாடி 16 விநாடி (மணி 3.02) வரை, 1944 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 7 ஆம் நாள் ஷஷ்டி திதி 20 நாடி 07 விநாடி (மணி 2.05) வரை, 1968 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ஆம் நாள் ஷஷ்டி திதி 20 நாடி 44 விநாடி (மணி 2.20) வரை, 1975 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23 ஆம் நாள் ஷஷ்டி திதி 19நாடி 55விநாடி (மணி 2:03) வரை. இவ்வருடங்களில் மாலையில் ஷஷ்டி திதி இல்லாதபோதும் ஸ்கந்தஷஷ்டி விரதமும் சூரன்போரும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே இந்துப் பெருமக்கள் சந்தேகமின்றி 24.10.2009 சனிக்கிழமையே ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பதை அறியத்தருகிறோம்.

சோதிடபரிபாலனமடம்,
கொக்குவில். 10.10.2009

வெ.இரகுநாதஐயர்

("இவ் வருட கந்தஷஷ்டி விரதம் எந்தத் தினத்தில்" என்ற தலைப்புடன் நேற்று (10.10.2009) உதயனில் வெளியான திருகோணமலையைச் சேர்ந்த மு.சுந்தரலிங்க தேசிகர் எழுதிய விளக்கத்துக்கான பதிலாகும் இது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்த்தவாறு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

மாகாணம் முழுவதும் 10 ஆயிரம் பாதுகாப் புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துண்டுப்பிரசுரம் விநியோகித்த குற்றச்சாட் டில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மூவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர் என்றும் பொலி ஸார் தரப்பில் கூறப்பட்டது.

(அ-1)

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பய ணத்துக்கு அனுமதியளித்தது யார்? இலங்கை செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவி னைத் தேர்வு செய்தது யார்? என்பன போன்ற பல கேள்விகள் எழு கின்றன. மக்களின் அவலத்தைப் பார்வையிடச் செல்லும் 10 எம்.பிக்களும் நலன்புரி நிலையங்களுக்குள் செல்ல முடியுமா? இலங்கை சென்றுள்ள எம்.பிக்கள் குழு திரும்பி வந்ததும் கருணாநிதியிடமா அல்லது நாடாளு மன்றத்திலா அறிக்கை சமர்ப்பிக்கும்?

டாக்டர் ராமதாஸ்: (நிறுவுனர்: பா.ம.க.)

தெளிவற்ற முறையில் ஆளும்கட்சிக் கூட்டணிஎம்.பிக்கள் இலங்கை சென்றுள்ளனர். அத்தோடு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் விருந்தாளிகளாக அவர்கள் சென்றது மிகப்பெரிய தவறு. இதனை வன்மை யாகக் கண்டிக்க வேண்டும். "இவ்வாறு சென் றுள்ள எம்.பிக்கள் எதனைக் கொண்டுவரப் போகின்றார்கள் என்பதே இப்போதுள்ள கேள்வி.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ:

இலங்கை சென்றுள்ள எம்.பிக்கள் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும். எவரைப் பற்றியும் கவலைப்படாமல் சென்று இந்த எம்.பிக்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் களின் சாவா! வாழ்வா பிரச்சினையோடு விளை யாடுகிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நல்லக்கண்ணு

விருந்தாளிகளாகச் சென்றுள்ள எம்.பிக்கள் ஓர் எல்லைவரைதான் இலங்கை அரசால் அனு மதிக்கப்படுவர். இதனால் இவர்கள் எதைப் பார்க்க வேண்டும் என்பதை இலங்கையரசே தீர்மானிக்கும் நிலை தோன்றியுள்ளது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன்

இது முழுக்கமுழுக்க ஒரு கண்துடைப்பு நாடகம். ராஜபக்ஷவின் விருந்தாளிகளாக சென் றுள்ள இவர்களால் எதனைச் சாதிக்க முடியும்.

வன்னி மக்களின் அவலத்தை எடுத்துரைக் கும் வகையில் ஒக்ரோபர் 26,27,28 ஆகிய திகதி களில் தமிழகம் முழுவதும் பிரசார இயக்கம் நடத்தப்படும்.

(அ-4)

## இந்தியக் குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துச்செய்யப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படாத போதும், அங்குள்ள இடைத் தங்கல் முகாம்களை பார்வையிட அனுமதி கிடைக்காததே விஜயம் ரத்தான மைக்குக் கார ணம் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை -

இந்தியக் குழுவினர் நாளை ஹற்றன், நுவ ரெலியா, கண்டி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

(அ-1)

## ஐந்து நாள்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள முகாம்களை சுதந்திர மாக சென்று பார்வையிடுவோம். 5 நாள்கள் தங் கியிருப்போம். அதற்குள் எல்லா முகாம்களை யும் பார்த்துவிடலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

முகாம்களை பார்வையிட்ட பின்பு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து முதல் அமைச்சருக்கு அறிக்கையாக அளிப்போம். அவர் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவார் - என்றார்.

கனிமொழி எம்.பி. செய்தியாளரிடம் கூறிய தாவது:-

முதலமைச்சரின் நடவடிக்கையால் எம்.பி.க் கள் குழு இலங்கையில் உள்ள முகாம்களை பார் வையிட செல்கிறது. அங்கு நிலைமைகளை பார் வையிட்ட பின்பு முதலமைச்சரிடம் அறிக்கை அளிப் போம். அவர் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பி நட வடிக்கை எடுக்க வலியுறுத்துவார் - என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி. கூறியதாவது:-

இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் நிலைபற்றி அறிய விடுதலை சிறுத்தைகள் சார் பாக நான் செல்கிறேன். அங்குள்ள தமிழர்களை சந்தித்து ஆறுதல் சொல்ல வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. முகாமில் உள்ள தமிழர் ளின் நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்போம்.

முன்பு இலங்கை சென்ற ராஜீவ்காந்தி தாக் கப்பட்டார். நாங்கள் எங்கள் உயிரை துச்சமாக மதித்து இலங்கை தமிழர்களின் நலனுக்காக செல்கிறோம்- என்றார்.

இலங்கை செல்லும் தூதுக்குழுவில் தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு, கனிமொழி, டி.கே.எஸ். இளங் கோவன், ஏ.கே.எஸ். விஜயன், ஹெலன் டேவிட் சன், காங்கிரஸ் சார்பில் சுதர்சன நாச்சியப்பன், என்.எஸ்.வி.சித்தன், ஜே.எம்.ஆரூண், அழகிரி, விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் திருமாவள வன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

10 எம்.பி.க்களும் நேற்று பகல் 12.40 மணிக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் சென்னையில் இருந்து இலங்கை புறப்பட்டுச் சென்றனர். அவர்களை அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, பூங்கோதை, முதலமைச்சர் கருணா நிதியின் துணைவியார் ராஜாத்தி அம்மாள், ஜின்னா எம்.பி., காங்கிரஸ் பிரமுகர்கள் அலி, ஹாஜி மவுலானா ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். (அ-1)

## இன்று யாழ்.வரும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் வரவேற்றார்.

அதன்பின்னர் பிற்பகல் 4 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் பின்னர் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர். எல்.எப் (பத்மநாபா) கட்சியின் தலைவர் சிறிதரன் ஆகியோரையயும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் மற்றும் அவரது கட்சிப் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்தித்தனர். இன்று விசேட விமானம் மூலம் பலாலி வரும் இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் ஹெலி மூலம் துரையப்பா விளையாட்டு மைதானத்தை வந்தடைவர். வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் தூதுக்குழுவினரை வரவேற்பர்.

அங்கிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்ப டும் குழுவினரை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். பொது நூலகத்தில் வைத்து வரவேற்பார்.

அதனைத் தொடர்ந்து அங்கு மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமை யில் இடம்பெறும் வரவேற்புக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவார்.

முற்பகல் 10 மணிக்கு தூதுக் குழுவினர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்வர்.

முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களைச் சந்தித்து அவர்களுடன் தூதுக் குழுவினர் கலந்துரையாடுவர்.

அதனைத் தொடர்ந்து வேலணையில் மீளக் குடியமர்ந்த மக்களின் குடியிருப்புக்களை குழுவி னர் பார்வையிட ஏற்பாடாகியுள்ளது.

பின்னர் ஹெலி மூலம் வவுனியா செல்லும் குழுவினர் முகாம்களில் உள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடுவர். அங்கிருந்து மாலையில் கொழும்பு திரும்புவர். (அ-1)

## மனிக் முகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குழு பிற்பகல் 4 மணிக்கு சந்தித்துப் பேசியது.

இக்கலந்துரையாடல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் சந்திப்பில் கலந்து கொண்ட குழுவில் மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவசக்தி ஆனந்தன், எம்.ஐ.எம். இமாம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் அங் கம் வகித்தனர்.

முகாம்களுக்குச் சென்று மக்களுடன் நேரில் உரையாடினால் மட்டுமே உண்மை நிலையை அறிந்துகொள்ள இயலும். அப்போது தான் மீளக் குடியமர்வை விரைவுபடுத்துமாறு இந்திய அரசு இலங்கைக்கு உரியவாறு அழுத்தம் கொடுக்க வழி பிறக்கும், உங்களால் உதவ முடியும் என்று இந்தியத் தூதுக்குழுவினருக்கு தாம் எடுத்துக் கூறியதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் நேற்றைய சந்திப்பு குறித்து மேலும் கூறியதாவது:-

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தோம்

* மழைகாலம் ஆரம்பமாகிவிட்டது. பெரும் மழைக்கு முன்னர் முகாமில் உள்ளவர்களை உட னடியாக மீளக் குடியமர்த்த வேண்டும் அல்லது அவர்களை விடுவிக்க வேண்டும்.

* மக்களை அவர்களது சொந்த இடங்களில், கண்ணிவெடி இல்லாத இடங்களில் மீளக் குடிய மர அனுமதிக்க வேண்டும் அல்லது அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்கள் தமது சொந்த பணிகளையும் தொழில் களையும் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

* இடம்பெயர்ந்த மக்களை அவரவர் மாவட்டங்களில் வசதிக் கேற்ப அரச கட்டடங் கள் மற்றும் குடியிருக்காத வீடுகளில் தங்குவ தற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

* விசாரணைகள் முடிவுற்றதாக அரசால் அறி விக்கப்படும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரை விடுவித்து அவர்கள் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்க அனுமதி வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை விரைந்து அரசு முன்னெடுத்தால் மழையில் இருந்து அந்த மக்கள் தப்பலாம். முகாம்களில் உள்ள நெருக் கடியை தவிர்க்க முடியும் என்று இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று குழுவினரிடம் வற்புறுத்தினோம்.

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் விஜயம் மேற்கொள்ளும் போது சகல முகாம் களுக்கும் சென்று மக்களைச் சந்திக்கும் போதுதான் அவர்களின் அவலத்தை உணர முடியும். அர சாங்கம் காண்பிக்கும் முகாம்களை மட்டும் பார்வை யிடாமல் வவுனியா மனிக் முகாமின் 4,5,6 ஆம் வலயங்களுக்கு சென்று அவற்றை பார்வையிட்டு மக்களுடன் நேரில் உரையாடி அவர்களின் நிலைமைகளை இந்திய அரசின் கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுள்ளோம்.

நீங்கள் வந்த பின்னராவது மாற்றம் ஏற்படுமா என எதிர்பார்த்திருக்கிறோம். நாட்டில் பாதுகாப் பான சூழல் இருப்பதாக அரசாங்கம் கூறும் தக வல் சரியா என்பதைக் கண்டறிந்து அதை வெளிப் படுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம் - என்றும் தூதுக்குழுவினரிடம் எடுத்துக் கூறினோம்.

### இராணுவ விஸ்தரிப்பும் சிங்களக் குடியேற்றமும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடிசனப்பரம்பலைத் தடுக்கும் நோக்கில் இராணுவ விஸ்தரிப்புக்களும் சிங்களக்குடி யேற்ற எத்தனங்களும் இடம்பெறுகின்றன. புத்தர் சிலைகளும் இராணுவ நினைவுத் தூபிகளும் அங்கு அமைக்கப்படுவது இந்த சந்தேகங் களைக் கிளப்பியுள்ளன. சர்வதேச நாடுகளை நோக்கினால், கண்ணிவெடி அகற்றுவதற்கு முன் னர் கண்ணிவெடி இருக்கும் இடத்தை அடையா ளம் இடும் பணியே நடைபெறுவது வழக்கம். வன்னி யில் இதுவரையில், கண்ணிவெடிகளை அடையாள மிடும் பணி ஆரம்பிக்கப்படவே இல்லை.

கண்ணிவெடிகளை அகற்றாமல் மக்களை முகாம் களில் தடுத்து வைத்திருப்பது பெரும் குற்றம். இதை இந்தியா புரிந்து, இலங்கைக்கு எடுத்துக் கூற வேண்டும் என்று சுட்டிக் காட்டினோம் - என்றார்.


மருத்துவ மாணவர்களே.....

KUMAR AND CLARK'S

இதே உங்கள் கைகளில்
விசேட விலையில்

Rs. 4250/= 7TH Edition

ஏனைய மருத்துவப் புத்தகங்களை விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (561648)

VICKNAH COMMUNICATION

* குறைந்த கட்டணத்தில் உள்நாட்டு,வெளிநாட்டு, இன்ரநெற் அழைப்புகள்
* பக்ஸ்சேவை
* போட்டோ பிரதி
* வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றம்
* இணையத்தளங்களைப் பார்வையிடல் (INTERNET BROWSING) அத்துடன் பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

விக்னா தொலைத் தொடர்பகம்,
துரைவீதிச் சந்தி,
கோண்டாவில் மேற்கு, (சி/561637)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

2010 தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சைவகுப்பு

சாதனை ஆசிரியர் தவயோகராசாவின் நேரடி வழிகாட்டலில்

வெற்றித்தேர்வு ஆசிரியர் கணேசலிங்கம் அவர்களின் ஆலோசனையோடு விரிவுரையாளர் சரா அவர்களின் மேற்பார்வையில் விசேட வழிகாட்டல் வகுப்பு.

உங்கள் தரம்:4 பிள்ளைகளை இன்றே, இப்போதே இணையுங்கள்.வெற்றி உமக்கே

வெற்றித்தேர்வு தொடர் பரீட்சைகள், கருத்தரங்கு, கௌரவிப்பு

நல்லூர் சயன்ஸ் அக்கடமி

நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக அமைதியான சூழலில்

Personal Classes

English 6-A/L, Spoken English With Grammar, Maths 6-O/L
Maths } A/L 1st in Com, B.Com Part I,I
Acc } HNDA, AAT

No, 72/29, Panikar Lane, Thirunelvely, Jaffna
T.P : 0777110093

புதிய கணனிக்கற்கைநெறிகள் ஆரம்பம்

Ms Office 2003 & 2007
ICT(O/L), GIT(A/L) & ICT(A/L)
Graphics Design & DTP
Internet & Email
Kids Programme
Accounting Packages
Web designing, AutoCAD
Programming Languages
Computer Hardware & Networking
Group Classes for BIT, AAT, ACBF, etc.

முழுமையான கணணிக் கல்விக்கு எம்முடன் இணையுங்கள்

CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRILANKA

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3734386

விற்பனை

உடுவில் மான் பாடசா லைக்கு அண்மையில் டச்சு வீதியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 0112589621

வாகனம் தேவை

நல்ல நிலையில் குறைந்தது 12 அடி நீளமுள்ள வாகனம் விநியோக பயன்பாட்டிற்கு தேவைப் படுகின்றது. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. இல. : 0718724061, 0212229731, 0212227167

(காலை 8 மணி தொடக்கம் 4 மணி வரை)

(561647)

வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகிறார்கள்.

1. வரவேற்பாளர் (பெண்கள்)
* கணனி, ஆங்கில அறிவு
* உயர்தரம் சித்தி
2. தாதிய உத்தியோகத்தர்/பயிலவிரும்புவோர்
* உயர்தரம் சித்தி

(சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத் தக்கது)

நேர்முகத்தேர்வு 12.10.2009 திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறும்.

இல 32, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(புட்சிற்றி (Food City) இருந்த இடம்)
தொடர்புகளுக்கு:- 0213734505

(89744)

யாழ் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

உள்நாடு, வெளிநாடுகளுக்கு, கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுபுடவைகள், மற்றும் VCD பிரதிகள், CD க்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்

TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தீபாவளி திருநாளை முன்னிட்டு! மாபெரும் விசேட விலைக்கழிவு!

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற் பிரதான வீதி, நெல்லியடி இப்பொழுது வடமராட்சியிலும்

259,கே.கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)

லண்டன்,ஜேர்மனி
1 Kg 1300/=
4 நாட்களில் அவர்களது இல்லங்களில்

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அகதிகள் வசதியாக வாழ்கின்றனர் எனத் தம்பட்டம் அடிக்காமல அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம்

***தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி நேற்று சனிக்கிழமை காலை லண்டன் பயண மானார். அதற்கு முன்னதாக அவர் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.***



வீ. ஆனந்தசங்கரி



ஜனாதிபதி மஹிந்த

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு,

பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களின் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் நம்பிக்கை யிழந்து வெறுப்பும் அடைந்து பெரும் ஏமாற்றத்துடன் இக் கடிதத்தை உங்களுக்கு எழுது கிறேன். கடந்த சில மாதங்களாக அவர்களின் பிரச்சினைகள் பற்றி உங்கள் கவனத் திற்கு கொண்டு வந்துள்ளேன். அகதி முகாம்களில் உள்ள வர்களில் அனேகர் நான் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந் தவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்களும் நானும் 1970ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்றாக நாடாளுமன்றத்துக்குச் சென்றோம். அவ்வேளையில் வயதில் மிகச் சிறியவர் நீங்களே. ஆனால் நானோ வயதாலும் அனுபவத்தாலும் அரசியலிலும் மூத்தவனாக இருந்தேன். நான் கூறும் பல விடயங்கள் உங்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால் நான் உங்களைப் பிழையான வழிக்கு இட்டுச் செல்லமாட்டேன் என்பதையும் நான் கூறும் ஆலோசனைகள் நன்மை பயக்கக்கூடியவை என்பதையும் இலங்கை வாழ் பல்வேறு இன மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்க்கும் என்பதும் உறுதியாகக் கூறுகின்றேன். நான் அடிக்கடி கூறுவது போல் என்னுடைய நாட்டையும் அதன் மக்களையும் வலுவாக நேசிப்பவன் என்பதையும் நான் ஒரு தேசப் பற்றற்றவனாகவோ, துரோகியாகவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் கணிக்கப்படக் கூடியவன் அல்லன் என்பதையும் உறுதியாகக் கூறுகின்றேன். மேலும் நான் எவருக்கும் எடுபிடியாகவோ அல்லது சுயநலன் கருதி துதிபாடுபவனோ அல்லன் நான் எப்பொழுதும் உள்ளதை உள்ளபடி கூறுபவன் என்பதை நீங்களும் இந்த நாடும் நன்கறியும்.

நீங்கள் அதிர்ஷ்டவசமாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் நாட்டின் தலைவர் என்ற மிக உயர்ந்த பதவியை அடைந்து மக்களுக்கு சேவை செய்ய முடிகிறது. ஆனால் நானொரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினால் எனக்கு ஓர் உள்ளூராட்சி சபையினூடாக மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய உரிமைகூட மறுக்கப்பட்டுள்ளது. நீங்கள் எவ்வளவுதான் கூறினாலும் இந்நாட்டில் சிறுபான்மை இனம் இல்லை என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை என்பதையும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் உங்கள் பாதையில் குறுக்கிடும் துணிச்சல் அற்றநிலை நிலவுவதையும் யாராலும் மறுக்க முடியாது. சிறுபான்மை இனம் இல்லை என்பதை உருவாக்க வேண்டியது உங்கள் கடமை. அந்த நிலைமை உருவாகிவிட்டது என்ற நிலைமையை உணர்வதும் அதை எடுத்துக்கூற வேண்டியதும் மக்களுடையதாகும். 'இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை நீங்கள் செய்து வருகின்றீர்கள். ஆனால் நானோ ஒரு தடவையல்ல இரு தடவைகள் தேவையற்ற நிலையில் நாடாளுமன்றம் இரு தடவைகள் கலைக்கப்பட்டதால் காலம் பூர்த்தியடையாது பதவி இழந்தேன். வேறு இரு சந்தர்ப்பங்களில் உள்ளூரில் ஏற்பட்ட சட்டவிரோத செயல்களால் வடபகுதியில் ஜனநாயகம் தடம் புரண்டு இரு தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டேன். ஒரு தேர்தலில் ஓர் ஆயுதக்குழு ஆறு லட்சம் வாக்காளர்கள் இருந்த இடத்தில் 8000 வாக்குகள் பெற்று 09 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. கடந்த 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலை அரசாங்கத்தின் அதிகாரத்தை மீறி இன்னுமோர் ஆயுதக்குழு தன்னுடைய குழு உறுப்பினர்கள் பலரை உள்ளடக்கி வேறொரு அரசியல் கட்சிக்கு வடக்கு, கிழக்கில் 23 தமிழ் பிரதிநிதித்துவத்தில் 22 ஐ பெற்றுக் கொடுத்தது. தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் வலுவான அறிக்கைகளையும் சிபாரிசுகளையும் ஆதாரமாகக் கொண்டு அன்றைய அரசாங்கம் உண்மையாக இஷ்டப்பட்டிருந்தால் அந்த நிலைமையை மாற்றி ஜனநாயகத்தை முறைப்படி செயற்பட வைத்திருக்க முடியும். இன்றைய அரசாங்கம் முறைப்படி உருவாக்கப்பட்டதல்ல என்ற எனது நிலைப்பாட்டை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டவுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தி ஜனநாயகத்தை அதன் உரிய இடத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் திட்டமிட்டு மோசடி மூலம் என்னைத் தோற்கடித்திருந்தும் நாடாளுமன்றத்திற்கு வரும் வாய்ப்பு பல என்னைத் தேடி வந்ததையும் நீங்கள் அறிவீர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வட மாகாண ஆளுநராக பதவி ஏற்கும்படி என்னை நீங்கள் கேட்டபோது நான் என்ன கூறினேன் என்பதையும், அதன் பின் கடந்த வருடம் ஜனவரி 22ஆம் திகதி மீண்டும் அப்பதவியை எனக்குத் தர நீங்கள் முன் வந்தபோது நான் தயக்கம் காட்டியமையையும் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். நான் பதவியைத் தேடி அலைபவன் அல்லன் இன,மத பேதமற்ற அமைதியான ஓர் ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்குவதே எனது ஒரே நோக்கம் என்பதையும் உங்களுக்கு உணர்த்துவதற்காகவே இதை நான் கூறுகின்றேனே அன்றி இச்சந்தர்ப்பத்தில் இவை பற்றிக் கூறுவது பொருத்தமற்றதாகும்.

ஜனாதிபதி அவர்களே!

இந்த நிலையை அடைவது இலகுவான காரியமல்ல. அதற்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் கவனமெடுத்து சில பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காண வேண்டியது அவசியமாகும். இன்று நாடு எதிர்நோக்கும் மிகப் பாரதூரமான பிரச்சினையாகிய இடம் பெயர்ந்த மக்களின் பிரச் சினை எதுவித தாமதமுமின்றி உடன் தீர்க்க வேண்டிய பிரச்சினையாகும். இந்த நாட்டை உயிரிலும் மேலாக நேசிக்கும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்திய- உங்கள் ஆலோசகர்கள் பலரிலும் கூடுதலாக விடமறிந்த- எனது ஆலோசனைகள் இந்த விடயத்தில் இன்றியமையாததாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் நவம்பர் 18, 2005 ஜனாதிபதியாகித் தொடர்ந்து வந்த 59ஆவது சுதந்திரதின விழா கொண்டாட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி 05 ஆம் திகதி 'தி ஐலன்ட்' பத்திரிகையில் பிரசுரமானபடி இங்கே குறிப்பிடுகின்றேன். ***"அதேபோன்று பயங்கரவாதிகளின் கெடுபிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் விரைவாக ஜனநாயக ஆட்சியை நாம் உருவாக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின். உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டிய எமது கடமையுடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்கால உலகம் சுபீட்சமாக அமைக்கப்படவும் வேண்டும். மொரஹகாகந்த மகாசமுத்திர அங்குரார்ப் பண நிகழ்வில் நான் கூறியதை மீண்டும் வலியுறுத்தி பயங்கரவாதத்தை ஒழிக்கச் சிறந்த ஆயுதம் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதேயாகும். இதற்கு தென்னிலங்கை வாழ் சிங்கள மக்கள் தயாராக உள்ளனர். இரத்த வெறிபிடித்த விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்க நாம் தயாராக இல்லை. இருப்பினும் நாங்கள் நியாயமாகவும், நீதியாகவும் செயற்படுவதாக இருந்தால் குறைந்த பட்சம் திரு.வீ.ஆனந்தசங்கரி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கோரிக்கைகளுக்கு சம்மதிக்க வேண்டும்".***

இந்தப் பேச்சில் மிக முக்கியமானவை யாதெனில் தமிழ், முஸ்லிம் மக்களின் உயிரை யும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டும் என்றும் இவர்களுடைய குழந்தைகளின் எதிர்கால உலகம் சுபீட்சமாக அமைக்க வேண்டியது உங்கள் கடமை என்றும் குறிப்பிட்டுள்ளமையே. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குச் சிறந்த ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதே எனவும் கூறியுள்ளீர்கள். தென்னிலங்கை மக்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என உறுதி கூற நீங்கள் தவறவில்லை.

சாதாரண சிங்கள மக்கள் பற்றி நான் என்ன கருத்தைக் கொண்டிருந்தேன் இன்றும் கொண்டுள்ளேன் என்பதை நிச்சயமாக நீங்கள் அறிவீர்கள்.அச்சு ஊடகங்கள், பதிவு செய்யப்பட்ட மின் ஊடகங்கள் போன்றவற்றைப் பரிசீலித்தால் நூற்றுக்கணக்கான புகழாரங்களை சிங்கள மக்களுக்கு நான் சூட்டியிருக்கின்றேன். அதேபோன்று எனது அறிக்கைகள், செவ்விகள், வெளிநாட்டில் வாழும் எம்நாட்டவர்கள், பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்கள், கலந்துரையாடல்கள், பட்டறைகள் ஆகியவற்றிலும் அவ்வாறே செய்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற இனக்கலவரம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக மகிழ்ச்சியற்ற, வெறுப்புக்களை தூண்டக்கூடிய சம்பவங்கள் பல நாட்டில் நடந் தேறிய போதும் ஒரு சிறு இன வன்முறை ஏற்படவில்லை. பெரியளவிலோ, சிறியளவிலோ வெறுப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்பட்ட போதெல்லாம் மக்கள் அமைதியாக இருக்கும்படியும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படியும் என்னால் பல கோரிக்கைகள் விடப்பட்டன. அதே போன்று நீங்களும் பல தடவைகள் செய்திருந்தீர்கள். எமது கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து பொறுமையைக் கடைப்பிடித்து சாதகமாகச் செயற்பட்டனர். தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எனது கூற்றை மறுக்கமாட்டார்கள். சாதாரண சிங்கள மக்களுக்கு மதிப்பளிப்பதாயின், சிறுபான்மை மக்களுக்கு நீதி வழங்குவதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற தங்களின் கூற்றை நானும் ஆமோதிப்பதே ஆகும். அவர்களுக்கு தமிழ் மக்கள் அப்பாவிகள் என்பதும் சிங்கள மக்களுக்கு எதிராக எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் என்பதும் தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறு என்பதும் அவர்கள் நன்கறிந்ததே.

ஜனாதிபதி அவர்களே! மிக்க வருத்தத்துடன் தங்களுக்கு ஆலோசனை வழங்குபவர்கள் சிலர் முறையாக செயல்பட வில்லை என்பதை தயக்கத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எல்லா புள்ளி விவரங்களையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்று நிச்சயமாக நான் கூறமாட்டேன். அலரிமாளிகையில் 26-03-2009 அன்று நடந்த தொரு சம்பவத்தை ஞாபகமூட்ட விரும்புகின்றேன். பல்வேறு தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் மத்தியில் விளக்க மளிக்கும் போது விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் இருந்து 55,000 மக்கள் அரச பாதுகாப்புப் பிரதேசத்துக்கு வந்துவிட்டனர் என்றும் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் எஞ்சியுள்ளவர்கள் இன்னும் 85,000 பேர்வரை இருக்கும் என்றும் நீங்கள் கூறியபோது அங்கே 2,50,000 மக்கள் அகப்பட்டுள்ளார்கள் என நான் கூறியிருந்தேன். உங்களைச் சுற்றி இருந்தவர்கள் நான் கூறிய கணக்கில் பிழை கண்டனர். ஆனால் எவ்வாறு 3,00,000 பேர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தனர் என்பது பற்றி எவரும் விளக்கம் தரவில்லை. அதேபோன்று 2009 மே 07 அன்று அரச உயர் அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் இன்றும் 20,000 பேர் மட்டுமே இருப்பதாகவும் 1,00,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பதாக எவ்வாறு நான் கூற முடியும் என என்மீது குற்றம் கண்டனர் ஒரு பத்திரிகை மாநாட்டில். ஆனால், ஒரு சில நாள்களில் ஒரே இரவில் 85,000 பேரும் அதைத் தொடர்ந்து பல ஆயிரம் பேரும் வந்துள்ளனர். ஆகவேதான் உங்கள் ஆலோசகர்கள் உங்களுக்கு சங்கட மான நிலைமையை உருவாக்காது அவதான மாகச் செயற்பட வேண்டும்.

உங்கள் மீது குற்றம் காணுவது எனது நோக்கமல்ல. தற்போது நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கும்போது வன்னி மக்களின் உண்மையான நிலைப்பாடு பற்றித் தங்களுக்கு விளக்கமளிக்கப்படவில்லை என எனக்குத் தோன்றுகிறது. கால் நூற்றாண்டுகளுக்கு மேல் வன்னி மக்கள் புலிகளின் பயங்கரவாதத்திற்குள் வாழ்ந்தார்கள். பல வருடங்களாகச் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவித்துள்ளனர். விடுதலைப் புலிகள் வன்னிக்கு வரும்வரை வன்னி மக்கள் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தனர். மக்கள் அதன்பின் வாழ்க்கையில் பலவற்றை இழந்தனர். ஜனநாயக உரிமை முற்றாகப் பறிக்கப்பட்டு அடிப்படை உரிமை, மனித உரிமை போன்றவை கடுமை யாக மீறப்பட்டுள்ளன. உங்களுடைய சுதந்திரதின பேச்சு இவர்களுடைய நிலைபற்றி சரியாக கணித்துள்ளீர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இன்று அதிகாரிகளால் ஏமாற்றப்பட்டு விட்டதாக இம்மக்கள் உணர்கிறார்கள். வன்னி மக்கள் இராணுவத்துக்கு வழங்கிய ஒத்துழைப்பால் இராணுவம் இலகுவாக யுத்தத்தை வெல்ல முடிந்தது. நாட்டை குறிப்பாக வன்னி மக்களை மீட்டெடுக்க இராணுவத்தினர் பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர். அதேபோல் வன்னி மக்களும் பயம், பீதி மத்தியில் யுத்தத்தை வெல்வதற்காக இராணுவத்தினருக்கு பல்வேறு வகையில் உதவியுள்ளனர். இப்போது அவர்களும் விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக இணைத்துக் கொள்ளப்பட்ட அப்பாவிப் பிள்ளைகளும் இன்று கவனிக்கப்படும் முறையைப் பார்க்கின்றபோது தம்மால் செய்யப்பட்ட உதவிக்கு தண்டிக்கப்படுவதாக அவர்கள் உணர்கின்றனர். ஆனால் அவர்கள் உதவியின்றி இந்த யுத்தத்தை வென்றிருக்க முடியாது. வன்னி மக்களின் உதவியைப் பாராட்டும் முகமாகவே வன்னி மக்களை அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இராணுவத்தினர் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தனர். படைகளைச் சேர்ந்த பெண் வீராங்கனைகள் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்கள் மீது மிக அக்கறை கொண்டு செயற்பட்டனர். மக்கள் நடத்தப்படும் முறை மகிழ்ச்சிக்குரியதல்ல என அவர்களே ஒத்துக் கொள்கின்றனர். முகாம்களில் நடப்பதெல்லாம் தமக்குத் தெரியும் என தம் பட்டம் அடிப்பவர்கள் பலர் உள்ளனர். சிலர் என்ன கூறுவதென்றே தெரியாமல் உளறுகின்றனர். ஆனால் அவர்கள் கள நிலைமைகள் பற்றி எதுவும் அறியாதவர்களே. வன்னி மக்களுக்காக தம் உயிரை பறிகொடுத்த போர் வீரர்கள் எவ்வாறு வன்னி மக்கள் துன்பப்பட்டிருந்தார்கள் என்பதை அறிந்திருந்தார்கள். அவர்களின் சோகக் கதையைக் கூற இன்று அவர்கள் உயிருடன் இல்லை.

ஜனாதிபதி அவர்களே! இவ்வாறு நடிப்பவர்கள் தேச பக்தி என்று கூறுவார்கள். சிறந்த பௌத்தர்கள் எனக் கூறிக்கொண்டு உளறுபவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதோடு நீங்கள் ஒரு தந்தையாக, தாயாக, சகோதரனாக, சகோதரியாக, ஒரு மகனாக அல்லது கணவனாக எண்ணி பேசத் தைரியமற்ற இந்த அப்பாவி ஜீவன்களைத் தயவு செய்து அனுதாபத்துடன் ஒரு தடவை நோக்குங்கள். வெளி உலகைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் எதையும் செய்யத் தேவையில்லை. மற்றவர்களைத் குற்றம் காணாது நாம் எமது மனச்சாட்சிக்கு அமைய நடப்போமாக.

ஜனாதிபதி அவர்களே! நீண்டகாலம் அமைதியாக இருந்து இன்று இக்கடிதத்தை எழுத நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன். உங்களின் நன்மைகருதி நீங்கள் எடுக்கும் சில நடவடிக்கைகளுடன் என்னால் ஒத்துபோக முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு எனக்கு அனுமதி தாருங்கள். விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட வட பகுதியில் விரைவாக ஜனநாயக ஆட்சியை நிறுவத் திடசங்கற்பம் பூண்டுள்ளீர்கள். எதிர்பார்த்த பலனை அடையாமையால் தயவு செய்து இந்த விடயத்தில் வேகமாகச் செயற்பட வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் உண்மையான ஜனநாயகத்தில்தான் தமது உரிமைகளை அனுபவிக்கிறார்களே அன்றி செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட ஜனநாயகத்தில் அல்ல. மக்கள் சுதந்திரமாகத் தமது தலைவர்களைத் தெரிவு செய்யவேண்டுமே அன்றி அரசாங்கத்தினால் அல்ல. யாழ்ப்பாணமும், கிழக்கும் விடுவிக்கப்பட்ட பிரதேசமாகக் கருதினாலும் அங்கே மக்கள் சுதந்திரமாக வாழவில்லை. தயவு செய்து அவர்களை விடுவிக்கவும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாக்கின்ற கடமை இருப்பதாகக் கூறியுள்ளீர்கள் கிளிநொச்சி வென்றெடுக்கப்பட்ட உடன் யுத்தத்தை அரசு வென்றுவிட்டது என்றும் ஓர் ஆண்டு நீடித்தாலும் இனி ஒரு அப்பாவி உயிர்தன்னும் அவசியமின்றி இழக்கப்படக்கூடாது என உங்களுக்குக் கூறியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக என் ஆலோசனையை யாரும் செவிமடுக்கவில்லை. எனது ஆலோசனை ஏற்கப்பட்டிருந்தால் பல அப்பாவி உயிர்களும் பலருடைய கால், கைகளும் பல கோடி பெறுமதியான அரச, தனியார் உடைமைகள் காப்பாற்றப்பட்டிருக்கும். வன்னி மக்கள் நாடோடிகள் போல் அடிக்கடி இடம்மாறி தம் உடைமைகளைப் படிப்படியாக இழந்து இறுதியில் மாற்று உடையின்றி முகாம்களை வந்தடைந்தனர். அனேகர் பல நாள்களாக, சிலர் சில வாரங்களாக உணவருந்தவில்லை. முகாம்களுக்கு வருவதற்கு முன்பு பல நாள்கள் குழந்தைகள் பால் இன்றித் தவித்தனர். போதிய உணவின்றி மக்கள் தமது சக்தியை இழந்தனர். வன்னியில் பட்டினியால் அகதி முகாம்களுக்கு வந்த இறந்தவர்களில் பலர் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டனர். பலர் ஒரே கூடாரத்தையும், நூற்றுக்கணக்கானோர் ஒரே மலசல கூடத்தையும் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உலகின் எப்பகுதியிலும் கேள்விப்படாத அளவுக்கு மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். வேறு நாட்டு அகதிகளிலும் பார்க்க எமது அகதிகள் வசதியுடன் வாழ்கிறார்கள் என்று தம்பட்டம் அடிக்காது எமது மக்களை முறையாகப் பார்க்க வேண்டிய கடமை எமக்குண்டு.

*(மிகுதி நாளை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

ரொயட்டா அலுமினிய கலர் (TOYOTASILVER)
இனம்VITZ விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிக்கு முன்பாக
தொடர்பு:- 352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் (விமலகுமார்)
0773186842
(சி/561633)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரி

திதி: அட்டமி சேர் அபரபக்கம் (11.10.2009)

தோற்றம்: 1931★06★05

மறைவு: 2008★09★22

அன்புத் தாயே!

உம் உயிர்ப் பூ உதிர்ந்து
ஆண்டொன்று ஆனதுவோ - உம்
பிரிவுத்துயர் தந்த ஆறாத காயங்கள்
ஆழப்பதிந்து வேரோடி நிற்கும்
சிலிர்க்கும் நினைவால் சிந்தை தடுமாறும்
விழிநீர் எடுத்துக் கோலமிட்டு
உயிரை உருக்கி சந்தம் சேர்த்து
அர்ச்சிக்கின்றோம் - தாயே
ஆண்டவன் திருவடியில்
அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இல.9, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (89573) - குடும்பத்தினர்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல், முட்டை என்பன நியாயமான விலையில் வேண்டிய அளவுகளில் எந்த வேளையும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி. (89741)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 37 வயது, பரணி நட்சத் திரம், செவ்வாய்க்குற்றம் இல்லாத மூன்று சுற்று கிரக பாவம் 17, அரச தொழில் புரியும் பெண்ணிற்கு உத்தியோகம் அல்லது வியாபாரம் செய்யும் மணமகனை எதிர்பார்க்கிறார்கள்.
விளம்பர இல: 3947, மே/பா உதயன். (89607)

## விற்பனைக்கு

நான்கு பெரிய புளியமரங்கள் கூடிய விலை கேட்பவர்களுக்கு விற்கப்படும்.
தொடர்புகட்கு: புவனேந்திரராசா, 107, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(89618)

## வேலையாள்கள் தேவை

பாண் விநியோகம் செய்வதற்கு ஆள்கள் தேவை. சம்பளம் நேரில்.
தொடர்பு: சீவரெத்தினம் பேழ்க்கரி,
வல்வெட்டித்துறை. (89706)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

93, ஈச்சமோட்டை வீதியில் 3 பரப்புக் காணி, வீடு என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3210396, 077 9941079 (89731)

## காணி விற்பனைக்கு

நாவலா வீதி, நல்லூர் தெற்கில் 6 1/2 பரப்பு காணி நல்ல கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 2228178 (89730)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி தெற்கில் 4 பரப்புக் காணி யுடனான 4 அறைகள் கொண்ட வீடு விற்ப னைக்குண்டு. விலை மற்றும் விவரங்கள் பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0112595275, 077635455.
(சி/561246)

## காணி விற்பனைக்கு

சரவகச்சேரி யூனியன் பேக்கரிக்கு அரு காமையில் கண்டி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் 1360 ச.அடி வீடு 6 பரப் புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0755722430
(சி/561232)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### ரவிச்சந்திரன் விதுஷன்

(யா/யாழ்.மத்திய கல்லூரி மாணவன்)
5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகள் பெற்று பாடசாலை மட்டத்தில் 2 ஆம் இடத்தைப்பெற்ற ரவிச்சந்திரன் விதுஷனைப் பாராட்டி மகிழ்வதோடு அவர் மென்மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: மாமா: நவகீஸ்ணராசா
அம்மம்மா: அன்னலட்சுமி.
கோவளம், காரைநகர் (89746)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்

அன்னையாக 25 ★ 10 ★ 1948



தெய்வமாக 12 ★ 09 ★ 2009

### திருமதி பகவதியம்மா சத்தியமூர்த்தி

கடந்த 12.09.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கு திருமதி பகவதியம்மா சத்தியமூர்த்தி அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நாளை (12.10.2009) திங்கட்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும். மு.ப. 11 மணி அளவில் வீட்டுக்கிருத்தியமும் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எம் அன்னையின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கேற்றவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம் மற்றும் நேரில் வந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

'லக்சுமி பவனம்',
கே.கே.எஸ்.வீதி, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர். (சி/561634)

## யாழ் மாணவர்களே, பெற்றோர்களே. . . !

## இலங்கையின் BCS, BIT வெற்றியாளர்கள் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்.

கடந்த ஆவணி மாதம் யாழ்ப்பாணத்தில் நாம் கால் பதித்தோம்.
யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு தகுந்த வழிகாட்டும் பொறுப்பு எமக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்துள்ளோம். BCS,BIT எனும் கற்கை நெறிகள் பற்றி பொய்யான தகவல்களை சில கணனி நிறுவனங்கள் வெளியிட ஆரம்பித்துள்ளன. இவற்றை யாழ் மக்களாகிய நீங்கள் நம்பிவிடாதீர்கள்.

**ESOFT மட்டுமே BCS, BIT கற்கை நெறிகளுக்கு இலங்கையில் முதன்மையானதும் தனித்துவமானதுமான நிறுவனம். மேலும் நாங்கள் அதை நிருபிக்க எங்கள் மாணவர்களின் எண்ணிக்கை,அவர்கள் வென்ற பரிசில்கள் ஆதாரமாக உள்ளன.**



2008ஆம் ஆண்டு நிகழ்ந்த BCS பட்டமளிப்பு விழாவில் 11 சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன அவற்றுள் 10 விருதுகளை ESOFT மாணவர்கள் வென்றார்கள் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்...

2009ஆம் ஆண்டு நிகழ்ந்த கொழும்பு பல்கலைக்கழக BIT பட்டமளிப்பு விழாவில் 138 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். அவர்களில் 72 மாணவர்கள் எமது நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் என்பதை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். . . . . .

**இதற்கு காரணம் ESOFT இல் வழங்கப்படும் பயிற்சி,கல்வி என்பன மாணவர்களை தகுதியுடையவர்களாகவும், திறமையானவர்களாகவும் ஆக்குகிறது என்பது நீங்கள் அறிந்ததே.**

**உங்கள் வாழ்வை வளமாக்க BCS,BIT பற்றிய இலவச கருத்தரங்கு இலங்கையில் பல வெற்றியாளர்களை உருவாக்கிய எமது கொழும்பு தலைமையக விரிவுரையாளர்**



**திரு. சுப்ரமணியம் கோபிநாத்** (ESOFT Country Manager (BCS Division)
**அவர்களால் வழங்கப்படும்**

இடம்: வீரசிங்கம் மண்டபம்.
திகதி: 11-10-2009
நேரம்: காலை 10.00

**உங்கள் கவனத்திற்கு:**
தகவல் தொழில் நுட்பத்துறையில் சாதிக்கத்துடிக்கும் மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடையுங்கள்.
இச் சந்தர்ப்பத்தை தவற விடும் பட்சத்தில் பிழையான வழிகாட்டலுக்கு உட்பட்டு உங்கள் இலட்சியங்களை இழக்க நேரிடும்.

***ESOFT- Only Accredited Course Provider for BCS in SriLanka.***

**ESOFT**

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO 9001 : 2008 தரச் சான்றிதல் பெற்ற கணனி நிறுவனம்

JAFFNA BRANCH
114, NAVALAR ROAD
JAFFNA
T.P: 0212224142

Nelliady Branch:
153, Jaffna Road,
Nelliady, Karaveddy
T.P: 0212264940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைப் பருவம் நினைத்தாலும் திரும்பக் கிடைக்காது

# அதனை மாணவர்கள் உரியமுறையில் பயன்படுத்த வேண்டும்

## யாழ்.இந்து பரிசளிப்பு விழாவில் மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன் அறிவுரை



**கடந்த 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2009 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதியும் யாழ். இந்துவின் பழைய மாணவனுமாகிய ஜெ.விஸ்வநாதன் ஆற்றிய உரையின் சுருக்கம்.**

மாணவர்களின் கல்வி வளர்ச்சிகருதிப் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்புகின்றனர். ஒரு நாணயத்திற்கு எவ்வாறு இரண்டு பக்கங்கள் இருக்கின்றனவோ அதே போல் ஒரு மாணவன் பூரணமான கல்வி அறிவு பெறுவதற்கு அறிவியல் சார்ந்த கல்வி மாத்திரம் போதாது. அறிவியல் என்பது அறிவு என்ற நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே. அதுவே அறிவு என்று கூறமுடியாது. அறிவுக்கு இன்னும் ஒரு பக்கம் உண்டு என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அது அறிவியல் சம்பந்தப்பட்டது. அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தது. எனவே, இந்த அறிவியல் சார்ந்த கல்விக்கு அளிக்கப்படும் அதே முக்கியத்துவம் ஒழுக்கம், பண்பாடுகள், விழுமியங்கள் சார்ந்த அறவியல் கல்விக்கு அளிக்கப்படல் வேண்டும். அறிவியல் சார்ந்த கல்வியும், அறவியல் கல்வியும் ஒன்று சேரும்போது கல்வி கற்றதன் பயன் பூரணத்துவம் பெறுகின்றது. இன்றைய உலகில் நாம் காணுகின்ற பாரிய அறிவுப் பெருக்கம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் சார்ந்தவை. இவற்றினால் மக்களின் துன்பங்களும் துயரங்களும் கவலைகளும் நீங்கியுள்ளனவா? என்ற கேள்வி எழும் போது துன்பங்களும் துயரங்களும் கவலைகளும் பெருகியுள்ளதனையே காண்கின்றோம். இதை நினைக்கும் போது நான் எங்கோ வாசித்த புதுக்கவிதையொன்று என் நினைவுக்கு வருகின்றது.

''ஒரு குழந்தை கை விரல்களால் எண்ணத் தொடங்குகின்றது.
1, 2,3,4......
பின்பு 20, 30, 40, 50........
எண்ணற்றதை எண்ணி அது
வாழ்க்கையைப் புரிந்து வாழ
ஆசைப்படுகிறது.
ஆனால் இன்று ஒரு விஞ்ஞானியும் எண்ணுகிறான்.
Count down
10-9-8-7-6-5.........
அணுகுண்டு பறக்கிறது
அவ்வளவுதான்
அத்தனையும் அழிகின்றது.
அணுவால்
எண்ணிக்கொண்டிருந்த அந்தச்
சின்னக் குழந்தைக்கு எண்ணுவதற்கு
விரல்கள் இல்லாமல் போயின''

விஞ்ஞானத்தின்மேல் மனிதன் சவாரி செய்ய வேண்டும்; மனிதன் மேல் விஞ்ஞானம் சவாரி செய்துவிடக்கூடாது.

மாணவர்கள் வீட்டில் பெற்றோரின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் உள்ளனர். கல்லூரியில் ஆசிரியர்களின் பராமரிப்பில் உள்ளனர். பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் விட சமூகத்திற்கும் மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு. எந்தவொரு மனிதனும் தனித்து வாழ முடியாது. அவன் சமூகத்தில் அறிவுள்ளவனாக சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டு நற்பிரஜையாக வாழவேண்டும்.

### பெற்றோர்களின் கடமை பற்றிச் சிறிது சிந்திப்போம்

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே ஒழுக்கம், நற்பண்புகள், கடவுள் பக்தி, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் போன்றவற்றை எடுத்துக்கூற வேண்டும். நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நல்ல நூல்களை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். மூதறிஞர் ராஜாஜி ஒவ்வொரு இல்லத்திலும் இராமாயணம், மகாபாரதம், திருக்குறள் ஆகிய மூன்று நூல்களும் இடம்பெற வேண்டும் எனக் கூறியுள்ளார். அவர் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் பிள்ளைகள் வாசித்து விளங்கக்கூடிய வகையில் இலகு தமிழில் எழுதியுள்ளார். ராஜாஜி எழுதிய இராமாயணம் என்ற புத்தகத்தின் முன்னுரையில் ''கங்கையும் காவேரியும் ஓடும்வரை சீதா இராமர் சரிதம் பிள்ளைகளைத் தாய் போல் உடன் இருந்து பாதுகாக்கும்'' என்று கூறியுள்ளார். கங்கையும், காவேரியும் வற்றாத ஜீவ நதிகள். நித்தமும் எமது வாழ்வில் ஏற்படும் கவலைகளையும், துன்பங்களையும், ஏமாற்றங்களையும் தாங்கிக்கொள்ளும் மன வலிமையை இந்நூல்கள் எமக்கு அளிக்கும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம், உயர்தரம் படிக்கும் மாணவர்களுக்குப் பாடநூல்களைத் தவிர வேறு நூல்களை வாசிக்க நேரம் இருக்காது. எனவே மாணவர்கள் தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கு எப்பருவத்தைத் தேர்ந்தெடுப்பது? ஆண்டு 01 தொடக்கம் ஆண்டு 07 அல்லது 08 வரை படிக்கும் மாணவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்கும். அந்த நேரத்தை வீணாக்காமல் நல்ல நூல்களைக்கற்று, நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நான் இக்கல்லூரியில் கற்கும் காலத்தில் வை.ஏரம்பமூர்த்தி என்ற ஓர் ஆசிரியர் தமிழ்மொழி கற்பிக்கையில் தான் எழுதிய ''பாரதச் செல்வம்'' என்ற மகாபாரதம் தொடர்பான நூலைத் தானே விளக்கி எமது உள்ளத்தில் ஊறச்செய்து உதிரத்தில் பரவவிட்ட காலம் நினைவில் நிழலாடுகின்றது. அன்று எனக்குத் தமிழ் கற்பித்த சிவராமலிங்கம், சோமசுந்தரம், மயில்வாகனம் போன்ற ஆசிரியப் பெருந்தகைகளையும், ஆங்கிலம் கற்பித்த ஏ.எஸ்.கனகரத்தினம், கார்த்திகேயன், என். சபாரத்தினம், வி.சிவசுப்பிரமணியம் போன்ற கல்விமான்களையும் நினைவில் மீட்டும்போது நன்றி உணர்வால் கண்கள் பனிக்கின்றன.

### ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம்

குருபத்தி இருக்க வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து பணிவுடன் நடக்கப் பழக வேண்டும். பாடசாலையில் பழகும் இப்பழக்கங்களை ஒரு மாணவன் வளர்ந்து பாடசாலையை விட்டு வெளியேறி வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளும் போதுகூட அவன் பின்பற்றவேண்டிய முறைகளுக்கு இவை அத்திபாரமாக அமையும். உதாரணமாக ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பழகும் ஒரு மாணவன் பெரியவனாகி வேலைத்தளத்திலும் தனது உயரதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பான். அன்று ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாமல், ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பளிக்காமல் முரண்டு பிடிக்கும் மாணவன் வேலைத்தளத்திலும் அவ்வாறு நடந்து தனது மேலதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதிப்பான். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பது போல் பாடசாலையில் பழகும் நற்பழக்கங்கள் மாணவனை நிழல்போல் தொடர்ந்துவரும். பாடசாலைக்குக் குறித்த நேரத்தில் சமூகமளிக்கும் மாணவன் வளர்ந்தபின் தான் வேலை செய்யும் திணைக்களத்திற்கு உரிய நேரத்திற்குச் சமூகமளிப்பான். பாடசாலைக்குக் குறித்த நேரத்தில் சமூகமளிக்காமல் பொய்யான காரணங்களும், சாட்டுப்போக்கும் சொல்லிப் பழகிய ஒரு மாணவன் பெரியவனானபின்னும் பழக்கதோசத்தில் அதே பழக்கத்தைப் பின்பற்றுவான். இதேபோன்று ஓர் ஆசிரியர் மாணவனுக்குப் பாடம் சம்பந்தப்பட்ட ஒரு பயிற்சியை அடுத்தநாள் செய்துகொண்டு வருமாறு பணிக்கும்போது அம்மாணவன் அக் கடமையை நிறைவேற்றாது அடுத்தநாள் ஆசிரியருக்குச் சாட்டுப்போக்குகளைச் சொல்லிப் பழகுவானானால் வேலைத் தளத்திலும் தனது கடமைகளில் அலட்சியப் போக்கைக் காண்பித்து மேலதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதிப்பான்.

### தனியார் வகுப்புகளின் தாக்கத்தைப் பற்றி

நாங்கள் மாணவராக இருந்த காலத்தில் பொதுத்தராதர, உயர்தர வகுப்புகளிலேயே தனியார் வகுப்புகளை நாடினோம். ஆனால் இன்று சிறிய வகுப்புகளில் பயிலும் மாணவர்களும் தனியார் வகுப்புகளுக்குச் செல்கின்றார்கள். இதனால் கல்லூரி ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை அவன் அறிந்தோ, அறியாமலோ குறைத்து மதிப்பிடப் பழகிக்கொள்கின்றான். இது ஓர் ஆரோக்கியமான அறிகுறியல்ல. தனியார் வகுப்பில் பாடங்களைக் கற்பதால் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்லும் பழக்கத்தையும் சில மாணவர்கள் முக்கியமானதொன்றாகக் கருதுவதில்லை.

இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிடுவதானால் சில பெற்றோர்கள் ஆசிரியர் தமது பிள்ளையைத் தண்டித்தால் அவ்வாசிரியர் தனிப்பட்ட கோபத்தினால் தான் தனது பிள்ளையைத் தண்டிப்பதாகக் கருதுகின்றனர். நாங்கள் மாணவராக இருந்த காலத்தில் இவ்வாறான நிலை மிக அரிதாகவே காணப்பட்டது. இன்று சில பெற்றோர்கள் அடுத்தநாள் காலை கல்லூரி அதிபரைச் சந்தித்துத் தமது பிள்ளையைத் தண்டித்த ஆசிரியரைக் கூப்பிட்டு விசாரிக்குமாறு அதிபரைக் கேட்கின்றனர். ஆசிரியர்கள்

## தமக்காக ஆசிரியர்களும் பெற்றோரும் செய்கின்ற தியாகங்களை உணரும் மாணவர்கள் நேரத்தை வீணாக்கார்!

ஏணிப்படிகள் போன்று மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோய் விடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதை உணராமல் ஆசிரியர்களிடம் குற்றங் கண்டுபிடிக்க முயலும் பெற்றோர்களைப் பற்றி என்ன சொல்வது?

### சமுதாயத்தில் மாணவர்களின் நிலைபற்றிப் பார்ப்போம்

உயர்தர வகுப்புப் படிக்கும் மாணவன் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றான். பல்கலைக்கழகத்தில் ஒரு சில மாணவர்களின் நடவடிக்கை ஏனையோருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்ட காலத்திலிருந்து 'ராக்கிங்' என்று கூறப்படும் பகிடிவதை இடம்பெற்று வருகின்றது. ஆனால் தற்போதுள்ள சில மாணவர்கள் மிகவும் கீழ்த்தரமான முறையில் பகிடிவதையில் ஈடுபட்டுப் புதிதாகச் சேரும் மாணவர்களுக்கு உடல், உளப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் நடந்துகொள்கின்றனர். மேலும் ஒரு சிலர் பல்கலைக்கழகத்தில் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு பல்கலைக்கழகத்தை மூடிவிடக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கின்றனர். இதனால் மாணவர்களுக்கே இழப்பு. மூன்று அல்லது நான்கு வருடங்களில் நிறைவுபெறும் பல்கலைக்கழகக் கல்வி இதனால் 5, 6 வருடங்கள் தாமதமடைகின்றது. இத்தகைய செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் பாடசாலை மாணவர்களாக ஒரு காலத்தில் இருந்தவர்களே. பாடசாலை மாணவர்களாக இருந்தபோதே கல்வியின் முக்கியத்துவத்தையும், தங்களின் கல்விக்காகப் பெற்றோர்கள் செய்யும் தியாகங்களையும் நன்கு உணர்ந்திருப்பார்களேயானால் இவ்விதம் தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு நேரத்தை வீணாக்க மாட்டார்கள்.

சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு நடக்கும் பண்பு மாணவர்கள் மத்தியில் வலியுறுத்தப் படவேண்டும். எமது அன்றாட வாழ்வில் சட்டத்தின் பயன்பாட்டை உணர்கிறோம். வாகனப் போக்குவரத்துத் தொடர்பான சட்டங்கள், நுகர்வோருக்கு உள்ள உரிமைகள் தொடர்பான நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், தண்டனைச் சட்டக்கோவையில் கூறப்பட்டுள்ள தற்பாதுகாப்பு உரிமைகள், சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் சட்டங்கள், போதைவஸ்து தொடர்பான சட்டங்கள் போன்றவற்றைப் பற்றி மாணவர்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம். குற்றச் செயலைச் செய்த ஒருவர் தனக்கு அது குற்றமென்று தெரியாதென்று கூறி வாதாட முடியாது. எனவே சட்டம் விதிக்கும் குற்றங்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்வது அவசியம். பொது வாழ்வில் நாம் நமக்குள்ள கடமைகளையும், உரிமைகளையும் உணர்ந்துகொள்ள வேண்டும். சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்பவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

வேலை ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் படிவத்தில் ''நீர் ஏதாவது நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளீரா?'' எனக் கேட்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். எனவே குற்றச்செயல் ஒரு மனிதனின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதை மறந்துவிடல் ஆகாது.

மாணவர்கள் கல்லூரி நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பழக வேண்டும். தானாக நூலகத்திற்குச் சென்று வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திலும் அந்த நல்ல பழக்கத்தைத் தொடர்ந்து மேற்கொள்வான்.

ஓய்வுநேரத்தில் நல்ல நூல்களை வாசித்து அவற்றில் காணப்படும் நல்ல கருத்துக்களை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு, சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறு போன்ற நூல்களையும் வாசித்துப் பயன்பெறவேண்டும்.

மாணவர்கள் பாடசாலை நாள்களை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இப்பருவம் திரும்பவராது. நீங்கள் கல்வி கற்கும் இந்தக் கல்லூரி இம் மாவட்டத்தில் அதிசிறந்த கல்லூரியாகும். சிறந்த அதிபரையும், சிறந்த ஆசிரியர்களையும் கொண்ட இப் பழம்பெரும் கல்விக் கூடத்தில் கல்வி கற்பதற்கு உங்களுக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்துங்கள். இதுவே உங்கள் எதிர்காலத்தின் அடித்தளமாக அமையும்.

பரிசு பெறும் மாணவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பரிசு பெறாத மாணவர்கள் மனம் தளர்ந்து விடாமல் இன்னும் ஊக்கமாகப் படிக்க வேண்டும். கடின உழைப்பு, விடாமுயற்சி, கடவுள் நம்பிக்கை இவற்றுக்குரிய பரிசை இறைவன் ஒருநாள் தந்தே தீருவான்.

கல்வியே தமிழருடைய மூலதனம். கல்வி அழியாத செல்வம். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. இன்று இவ் விழாவில் என்னையும் எனது மனைவியையும் கலந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் அளித்த கல்லூரி அதிபர் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், கல்லூரி அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கும், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம் வழங்கும்
# கோட்டக்கல்வி அலுவலர் திரு.நாகலிங்கம் சத்தியநாதன் அவர்களின்
# பணிநயப்புப் பதிவுகள்

## ஆயிரம் பிறைகண்டு வாழ்க



கடந்த 36 ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணியில் செயல்திறனுடன் பணியாற்றிவந்த திருவாளர் நாகலிங்கம் சத்தியநாதன் அவர்கள் இன்று தனது பணியில் நின்றும் ஓய்வுபெறுகின்றார். கல்விப் புலத்தில் நிறைந்த அனுபவமும் சிறந்த ஆளுமையும் செயற்பாட்டுத் திறமையும் உடையவராக விளங்கிய இவர், கல்வித் துறையில் ஆசிரியர், அதிபர், கொத்தணி அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலர் போன்ற பல்வேறு பதவிகளில் தமது ஆற்றலைப் பதித்துக்கொண்டவர். தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலராக தமது சேவையை நிறைவுசெய்த இவர், கடமையே கண்ணாகவும் செய்பவற்றை திறமையுடன் செய்பவராகவும் விளங்கியவர். இவர் இன்று ஓய்வுபெற்றாலும் ஓய்வு காலத்திலும் கல்விப் பணிக்கு ஆலோசனைகள் வழங்கி சுக நலத்துடன் ஆயிரம் பிறை கண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வாழ்த்துகின்றேன்.

கலாபூசணம்.சி.சிதம்பரநாதக்குருக்கள், சாவகச்சேரி.

## கல்வி முன்னேற்றத்தின் பங்காளி



தென்மராட்சிப் பகுதியின் கல்வி வளர்ச்சிக் காக 1976 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை அரும்பணியாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் நாகலிங்கம் சத்தியநாதன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவதையிட்டு பெருமைகொள்கின்றேன். ஆசிரியர் பணியில் ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எனும் உயரிய பதவியினூடாக தென்மராட்சிப் பகுதியின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகளின் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டு செயலாற்றிய வகையிலும் அதிபர் என்ற ரீதியில் தனது கடும் உழைப்பின் மூலமாக பாடசாலை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருந்து செயற்பட்டமை கண்கூடு. ஓய்வுகாலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் அமைய வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இ.இளங்கோவன்
செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

## சமூகவியலை ஆராய்ந்து செயற்படுபவர்



குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல- நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வீ அழகே அழகு.

எனும் நாலடியார் 131 ஆம் பாடலுக்கு இலக்கணமாய்த் திகழும் தனக்கென வாழப் பிறர்க்குரியாளர் நா.சத்தியநாதன் அவர்கள். 60 ஆவது அகவையை பூர்த்திசெய்து மணிவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். அவர் ஆசிரியராகத் தமது பணியை ஆரம்பித்து படிப்படியாக அதிபராகி, கோட்டக் கல்வி அதிகாரியாகி, பிரதிக் கல்வி பணிப்பாளராக தம் வாழ்வில் உயர்ந்தவர். 'செய்யும் தொழிலே தெய்வம்' எனும் முதுமொழியை என்றும் கடைப்பிடித்தவர். எத்தொழிலை எப்பிரதேசத்தில் செய்வதாயினும் முதலில் அப்பிரதேச மக்களின் சமூகவியலை நன்கு ஆராய்ந்து அதற்கேற்ப தமது பணிகளை நன்கு திட்டமிட்டு நிறைவேற்றுபவர். 'யாதுமூரே யாவரும் கேளீர்' என என்றும் பெருந்தன்மையுடன் வாழ்பவர். கலைமாணி, சட்டமாணி பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், பட்டப்பின் கல்வி முகாமைத்துவ தகைமைச் சான்றிதழ், கல்வி முதுமாணி எனும் பட்டங்களைப் பெற்றதோடு, தொடர்ந்துங் கற்று வருபவர். ஓய்வு பெற்றபோதும் தமது சமூகப் பொறுப்புகளிலும் சமூகப் பணிகளிலும் இருந்து என்றுமே ஓய்வு பெறாது ஓயாது உழைக்கும் உண்மையான சான்றோரான இந்த உத்தம சீலர் தமது வாழ்வில் எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.


கு.பிறேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

## மனித நேயம் மிக்க அலுவலர்



தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆசிரியராக, அதிபராக கொத்தணி அதிபராக, கோட்டக் கல்வி அலுவலராக பிரதிக் கல்விப்பணிப்பாளராக பல்வேறு மட்டங்களில் உயர்ந்து இப்பிர தேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்ட மனிதநேயம் மிக்க அலுவலர் என்ற பெருமையை பெற்ற தங்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். தங்களிடம் காணப்பட்ட உயரிய பண்புகளை எல்லோரையும் சமமாக மதிக்கும் தன்மை, பிறர் பிரச்சினைகளை புரிந்துகொண்டு ஆலோசனை, வழிகாட்டல் செய்யும் திறன், தவறுகளை நேருக்கு நேர் சுட்டிக்காட்டி திருத்தும் திறன், தென்மராட்சிப் பிரதேசத்தின் அனைத்துப் பாடசாலைகளையும் அதிபர், ஆசிரியர்களையும் நன்கு அறிந்து செயற்பட்ட தன்மை, சிறந்த ஆளுமைத்தன்மை என்பன தங்கள் சேவையை எல்லோர் மனதிலும் ஆளப் பதித்துள்ளன. ஓய்வு காலம் சிறப்படைய மகிழ்வாக அமைந்திட வாழ்த்துகின்றேன்.

கு.சிவானந்தம்,
கோட்டக் கல்வி அலுவலர், சாவகச்சேரி.



## திரு.நாகலிங்கம் சத்தியநாதன்

(SLPS - 1)
(B.A, PGDE, PGDEM, MED, LLB)

| | |
|---|---|
| ஆசிரியர் | 1976.11.01-1987.07.11 |
| பிரதி அதிபர் | 1987.07.12-1990.12.31 |
| அதிபர் | 1991.01.01-1992.04.31 |
| கொத்தணி அதிபர் | 1992.05.01-1994.03.31 |
| உதவிக் கல்விப் பணிப்பாளர் (தென்மராட்சி கல்விக்கோட்டம்) | 1994.04.01-1999.04.31 |
| கோட்டக் கல்வி அலுவலர் (கோட்டக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி) | 1999.05.01-2009.03.06 |
| பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் | 2007.02.17-2008.12.31 |
| ஓய்வு | 2009.03.06 |

## மனங்கவர்ந்த கல்வியியலாளர்



நா.சத்தியநாதன் அவர்களது சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். தென்மராட்சிக் கல்வி வலயத்தின் மாணவர் அடைவு முன்னேற்றம், பாடசாலைகளின் வளர்ச்சி, ஆசிரிய வாண்மை விருத்தி போன்றவற்றில் அதிக கரிசனையுடன் செயலாற்றியவர். நடு நிலைத் தன்மையுடன் ஆசிரியர் அதிபர்களின் பிரச்சினைகளை அணுகி அவர்களின் மனதைக் கவர்ந்தவர்.

இவர் தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் சகல ஆசிரியர்களையும் அதிபர்களையும் நன்கு அறிந்தவர். தன்னுடைய கல்வி அறிவினை இப்பிரதேசத்தின் விருத்திக்குப் பயன்படுத்தியவர். தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு ஒரு சொந்தக் காணியைப் பெற்றுக் கொள்வதற்காக உழைத்த உத்தியோகத்தர்களில் முதன்மையானவர்.

தென்மராட்சிப் பாடசாலைகள் யுத்த நிலையால் வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெயர்ந்து இயங்கிய காலத்தில் வலிகாமப் பிரதேசத்தின் கல்விச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தவர். எமது மாணவ ஆசிரிய வளங்கள் சிதறாது பாதுகாத்தவர். அறுபது அகவையில் ஓய்வுபெற்றுள்ள சிறந்த கல்வியியலாளரான நா.சத்தியநாதன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் நலமுடனும் செல்வத்துடனும் வாழ எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.கயிலாயபிள்ளை
அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
தலைவர், தென்மராட்சிப் பாடசாலை அதிபர் சங்கம்.

## கல்விப்பணிக்கு வழிகாட்டி



சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் நாகலிங்கம் சத்தியநாதன் அவர்கள் தென்மராட்சிக் கல்விப் புலத்தின் மூத்த பணியாளன். ஆசிரியராகப் பணியில் இணைந்து கோட்டக் கல்வி அலுவலர் மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி நிலைகளுக்கு உயர்ந்தவர். உயர்ந்த கல்வித் தகைமையையும் தொழில் தகைமையையும் வரித்துக் கொண்டு தன் பணியை மேன்மையுறச் செய்தவர். கல்வியிலும், கல்விப் பணியிலும் தென்மராட்சி அதிபர், ஆசிரியர்களுக்கு நல்ல முன் மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்; திகழ்பவர்.

கலைத்திட்டமாயினும், முகாமைத்துவ மற்றும் நிர்வாக விடயங்களிலாயினுஞ் சரி தெளிவான அறிவும், சிறப்பான ஆற்றலும் கொண்டிருந்தமையினால் பாடசாலைகளின் அதிபர்கள் என்ற வகையில் எமக்கும் சரியான பாதையைக் காட்டி நின்றார். அதன் மூலம் எமது பணி மேம்படத் துணை நின்றார்.

அவரது ஓய்வு எமக்கு இழப்பு எனினும், நியதியை ஏற்றுக் கொண்டு அவரது ஓய்வுகாலம் வளமுள்ளதாக அமைய வேண்டுமெனத் தென்மராட்சி அதிபர்கள், ஆசிரியர் சார்பிலும் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

க.அருந்தவபாலன், செயலாளர்,
தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர் சங்கம்.

## ஆற்றல் மிகு பெருமகன்



கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்வித்துறையில் நற்பணியாற்றி ஓய்வு பெற்ற பெருமகனின் சேவை நயபாராட்டுதலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்விமான்கள் பல தோன்றிய பெருமைமிகு தென்மராட்சிப் பிரதேசத்திலே இயற்கை வளம் நிறைந்ததும் விவசாயத்துறையிலே நிறைவு கண்டதுமான கைதடிப் பகுதியிலே தோன்றியவரான உயர்திரு. நா.சத்தியநாதன் அவர்கள் கலைமாணிப் பட்டத்திலிருந்து முதுமாணிப் பட்டம் வரை கல்வி கேள்விகளில் சிறந்தவராக மிளிர்ந்து ஆசிரியராக 1976 ஆம் ஆண்டில் தனது சேவையை கல்விச் சமூகத்திலே தொடங்கி தரம் மிகு அறிவுத் திறனால் சக ஆசிரியர், அதிபர்கள், மாணவச் செல்வங்கள் அனைவரினதும் பெருமதிப்பில் திகழ்ந்தவர் என்பதை அறிந்து மகிழ்வடைகின்றேன். ஓய்வுகால வாழ்வு பயனுள்ளதாக, மகிழ்வுள்ளதாக அமைய இறை ஆசி மலரட்டும் என்றென்றும்.

வண. கே.ஜே.டபிள்யூ.தேவசகாயம்

## பணியினைப் பாராட்டுகின்றேன்



சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெறும் நாகலிங்கம் சத்தியநாதன் அவர்களின் பணியினை நயந்து பாராட்டுவதில் மிக மகிழ்வடைகின்றேன். 1976 ஆம் ஆண்டில் ஆசிரியனாக தன் கல்விப் பணியைத் தொடங்கிய அவர் பிரதி அதிபர், அதிபர், கொத்தணி அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலர், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எனப் பல்வேறு பதவி நிலைகளில் உயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கு தன்னாலான அளப்பரிய பங்கினை வழங்கியுள்ளார். அவர் அதிபராகப் பணியாற்றிய பாடசாலைகளை பிரதேசத்தில் முன்மாதி ரியான பாடசாலையாக மாற்றுவதில் ஒரு முன்மாதிரியான அதிபராகப் பணியாற்றியுள்ளார். அதேபோலக் கோட்டக்கல்வி அலுவலராகப் பணியாற்றிய 10 ஆண்டுகளில் ஒவ்வொரு பாடசாலையையும் தனது பாடசாலையாகக் கருதி அவற்றை மேம்படுத்துவதில் அப்பாடசாலையின் அதிபர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் நெறிப்படுத் துவராகவும் திகழ்ந்துள்ளார். அவரது ஓய்வுகாலம் சிறப்பாகவும் மகிழ்வாகவும் அமைய எனது நல்லாசிகள்.

வி.இராசையா
வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்.

## நெகிழ்ச்சியான, சாந்தமான கோட்டக்கல்வி அலுவலர்



வாழ்நாள் முழுவதும் கல்வி கற்ற ஒரு கல்வியியலாளனாக நா.சத்தியநாதன் அவர்களைக் காணக்கூடியதாக உள்ளது. பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, முதுகல்விமாணி எனும் கல்வியுடன் சேர்ந்த பட்டத்துடன் சட்டத் துறையிலும் பட்டம் பெற்ற ஒருவராக திகழ்கின்றார். "தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்விப் பிரச்சினைகள் யாவற்றையும் அறிந்தவராகவும் அவற்றுக்கான தீர்வினை வழங்கக்கூடியவராகவும் செயற்பட்ட நெகிழ்ச்சிப் போக்கினையும் சார்ந்த தன்மையையும் கொண்ட ஒரு கோட்டக் கல்விப் பணிப்பாளராவார். இக்கட்டான சந்தர்ப்பங்களில் தென்மராட்சிப் பாடசாலைகள் இடம் பெயரும் போது கல்வியிற் கட்டுக்கோப்பு அழியாமல் பாது காத்த நா.சத்தியநாதன் கல்விப் புலத்தை விட்டுச் செல்லுதல் ஒரு பேரிழப்பும் தவிர்க்கமுடியாததுவுமாகும். அவர் ஓய்வு காலத்தில் சுக பலத்துடன் வாழ எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

## அர்ப்பணிப்புள்ள அலுவலர்



சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் அவர்கள் தனது பணியிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படும் பணி நயப்பு மலரூடாக ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சத்தியநாதன் அவர்கள், நான் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய காலத்தில், அப்பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதில் எனக்குப் பக்கபலமாக நின்று அயராது உழைத்த அர்ப்பணிப்புள்ள அலுவலர்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு நேரம்பாராது கண் துஞ்சாது கருமமே கண்ணாகப் பணியாற்றினார். இதனால் தென்மராட்சி கல்விச் சமூகத்தினால் பெரிதும் மதிக்கப்பட்டார். அவர் பணியின் பதிவுகள் அப்பிரதேசத்துக்கு என்றும் நிலைத்திருக்கும். அவரது ஓய்வுக்காலம் சிறக்க, செழிக்க எனது நல்லாசிகள்.

திருமதி.அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org